# கடல் கன்னி

"சுகி"



5438

ஸ்டார் பிரசுரம்

திரு 43
100

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI

21.9 83(6)

5438

PRESENTED BY
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

Y. M. G.
ASSOCIATION
PAGANERI.

# "கடல் கன்னி"

(ஆஸ்கார் ஒயில்ட்)

★

# "நரைத்த காதல்"

(சுன்சான்யே)

★

தமிழில் :

"சுகி"

Y.M.C.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

## ஸ்டார் பிரசுரம்

பாலக்கரை :: திருச்சி (H. O.)

NO. 52. MODERN TAMIL SHORT STORIES

[ TRANSLATION ]

FIRST EDITION:—OCTOBER-1947

COPYRIGHT

**Price Rs. 1—8—0**

STAR PUBLICATIONS

PALAKARAI :: TRICHINOPOLY (H. O.)

Printed at the Papa Press, Rayavaram (Pudukotta State)
For Star Publications P. I. C. Ty. 9. A. (Q. H)
—1000—Copies.

# முன்னுரை

ஆஸ்கார் ஒயில்ட்

செம்படவன் வீசிய வலையில், கடல் கன்னி அகப்பட்டாள். காதல் கொண்ட அவனுக்கு, அவனது ஆத்மா இடையூறாக இருக்கவே, ஆத்மாவை போக்கிவிட நினைத்தான். ஆத்மா பிரிந்தது.

தனக்கு ஹிருதயம் கொடுக்காமல் அனுப்பி விட்ட செம்படவனை, ஆத்மா படாத பாடு படுத்துகிறது. ஆத்மாவின் இனிய கொடிய செயல்கள், பயங்கரமானவை. படாடோபமான வர்ணனைகள், காதலின் தெய்வீக சக்தி, பின்னல் இழையும் செம்படவனின் வாழ்க்கை வலை —, ஓர் அற்புதமான ஆங்கிலக் கதை.

சுன் சான்யே

நரைத்த காதல் சீன தேசத்தின் பண்பாடும் சீனப் பெண்ணின் இதயப் பாங்கும் காதலின் வைராக்கியமும், பௌத்த மதத்திலே கன்னியாக ஒன்றி முக்தி தேடும் 'யென் யென்' வாழ்க்கை விசித்திரமும் நிறைந்த ஓர் கவிதைக் காதல் என்றே சொல்லலாம்.

இரண்டும் காதல் கதைகள்: ஆனல் சூழ்நிலைகளிலும், உத்திகளிலும், கதாபாத்திரங்களின் மனோதத்துவங்களைக் கையாள்வதிலும், இரு துருவங்களைப் போல அவ்வளவு வேறுபாடு நிறைந்து, சிறு கதை வெற்றியின் பரிபூர்ண எல்லைக் கோடுகளைத் தொடும் அற்புதக் கதைகள், தமிழ் பாஷைக்குச் சிறப்புத் தருவன.

★

—'சுகி'

# கடல் கன்னி

அன்றாடம் அந்திப் போதில், வாலிப செம்படவன் ஒருவன் ஆழ்கடலிலே வலை வீசுவான்.

நிலக்காற்று வீசுகிறபோது வலையில் ஒன்றும் சிக்கவில்லை. கடற்காற்று அடிக்கிற சமயம், ஆழத் திலுள்ள மீன்கள் அந்த வலைக் கண்ணிகளுக்குள் ஆய்ந்தன. பிடிபட்ட மீன்களை சந்தைக் கடையில் கொண்டு விற்பான்.

ஒருநாள் மீன் பிடிக்கப் போன இடத்தில், வலையைச் சுருக்கியபோது, அகப்பட்ட வஸ்து, தோணி பக்கம் வராதபடியாக அவ்வளவு பாரமாக இருந்தது. சிரிப்புத் தாங்காமல், "கடல் மீன்கள் அத்தனையும் வந்துவிட்டதோ, அல்லது ஏதேனும் பயங்கர விலங்குகள் அகப்பட்டுக்கொண்டதோ" என்று வலிமை பொருந்திய கைகளால் வலுவாக வலையை இழுத்தான். வர வர, தண்ணீர் மட்டத் திற்கு வலை தென்பட்டது.

வந்தது மீனுமல்ல, பயங்கர கடல் ஜந்துவு மன்று. பயப்படுத்தும் கோர ரூபியும் அல்ல. துக் கத்தில் ஆழ்ந்த மீன் வடிவங்கொண்ட கடல் கன்னி. அவள் தலை, தங்கப்பந்து போலவும், ஒவ்வொரு ரோமமும் தங்கக் கம்பியாகவும் தெளிந்தோடிற்று. உடல், தந்தம்போன்ற வெண்ணிறம். அவளுடைய

வாலின் வடிவோ, முத்தும் வெள்ளியும் இணைந்த நிறம் கொண்டவை. வெண்மையும், முத்தும் போன்றது அந்த வாலின் வர்ணம்; கடலின் பாசி வாலிலே சுற்றி இழைந்து நின்றது. கடற் சிப்பி போன்ற அந்தக் காதுகள், கடற் பவளம் ஒத்த இதழ்கள். குளிர்ந்த கடலலை, குளுமை நிறைந்த மார்பகத்தில் மோதிச் செல்ல, உவர்ப்பு நீரிலுள்ள உப்பு, கண்ணிமைகளில் 'டால்' வீசிற்று.

செம்படவ இளைஞன் அவள் 'மாய அழகில்' மயங்கி அதிசயத்து நின்றவன், கைவீசி வலையைச் சுருக்கி, தன் கரத்தோடு அவளை அணைத்துக்கொண்டான். தொட்டதும் கடல் பறவை போல கிறீச்சிட்டு, பயம் சிந்தும் அந்தச் செந்நீல முத்துப் போன்ற கண்களால் பார்க்கிறாள். அவனோடு கட்டிப்புரண்டு திமிறி ஓடப் பார்த்தாள். ஆவிச் சேர்த்துக் கட்டியிருந்த காரணத்தால், அவளைப் பிரிய அவன் மனம் இடங்கொடுக்க வில்லை.

எந்த வழியாகவும் தான் தப்பிக்க முடியாது என்பதைக் கண்ட அவள், அழ ஆரம்பித்து, "என்னை விட்டுவிடு, உன்னை வணங்குகிறேன். நான் ராஜாவின் ஏக புதல்வி. என் தந்தை வயோதிகர். வேறு துணை இல்லாதவர்" என்று சொன்னாள் அழுதபடியே.

"பெண்ணே, உன்னைவிட முடியாது. ஒரே ஒரு வேண்டுகோள். சம்மதித்தாயானால் விட்டுவிடுவேன். உன்னை அழைக்கும்போது நீ வந்து பாட

வேண்டும். ஏனெனில் கடலினங்களான மீன்கள் உன் பாட்டில் தலை கிறங்கும். என் வலையும் நிறையும்'' என்று அந்த வாலிப செம்படவன் பதிலிறுத்தான்.

''உண்மையாக என்னை விட்டுடுவாயா, மேற்சொன்ன வேண்டுகோளுக்கு இணங்கினல்?'' என்று அவள் அழுதாள், இப்படி சொல்லிக்கொண்டே.

"உண்மையாக, நீபோய்விட அனுமதிப்பேன்.'

அந்த வாக்குறுதியைத் தந்தவள், கடல் ஜீவராசிகளின் வழக்கப்படி அவனுக்குச் சத்தியம் செய்து கொடுத்தாள். அவன் கை பிடியைத் தளர்த்தவே, உடல் நடுக்கத்தோடும், விவரிக்க முடியாத பயத்தோடும் கடல் கன்னி கடலில் அமிழ்ந்தாள்.

ஒவ்வொரு நாளும், அவ்விளைஞன், கடலில் போய் அக்கடல் கன்னியைக் கூப்பிடுவான். அவள் ஜலமட்டம் வருவாள், பாடுவாள். அவள் தலைக்கு மேலாக, சுற்றிச் சுற்றி தங்கநிற மீன்கள், முரட்டு கடல் ஜீவன்கள் சுழன்றோடும்.

அவள் ஒரு அற்புதமான பாடலைப் பாடினள். அவளது பாடலின் கருத்து கற்பனைக்கும் எட்டாதது.

கடல் இடையர்கள், தோளிலே கன்றுகளைச் சுமந்து, குகைக்குக் குகை, தங்கள் மாட்டு மந்தையை ஓட்டிச் செல்லும் காட்சியும்; மார்பகத்

திலே அடர்ந்த மயிரும், பச்சை நிறத் தாடியும் கொண்ட தாதர்கள், ராஜா பவனி வரும்போது வெண் சங்கு கொண்டு ஊதுவார்களே, அதைப் படம் பிடித்தும்; தரையிலே ஒளி கக்கும் முத்துக்கள் பதித்து, பச்சை மரகதத்தாலான கூரை வேய்ந்து கற்பூரப்பாறை போன்ற ராஜனுடைய அரண்மனையைப்பற்றியும்;

பவளம், தங்கம், பொன் இதனால் இணைக்கப் பட்ட விசிறிகள் ஊசலாடும் கடல் உத்யான வனங் களின் வர்ணனையும்;

வெள்ளிப்பறவைகள் போலத் துள்ளிப் பாயும் மீனினங்கள், பாறைகளில் பற்றிக் கிடக்கும் புதர் செடிகள், மஞ்சள் மண்ணில் ஒட்டிக்கிடக்கும் சிகப்புப் பூக்களையும்;

கடற்பொக்கிஷங்களை வர்ணிக்கும் கடல் மோகினிகளின் அழைப்பு காதில் விழாதிருக்க தத்தம் காதுகளில் மெழுகினால் அடைத்துக்கொள்ளும் வியாபாரிகள் செயலைப்பற்றியும்;

உயர்ந்த பாய் மரக்கலங்கள் நீரிலே அமிழ் கின்ற துயரத்தையும், அவ்வேளை கப்பல் கயிற் றிலே ஊசலாடும் மாலுமிகளின் பரிதாபக் கூக் குரல், அமிழ்ந்துவிட்ட பீரங்கித் துவாரங்களின் வழியே துள்ளி விளையாடும் மீன் கூட்டங்களையும்;

கப்பலின் அடியிலே, ஒட்டி உயிர்வாழ்ந்து, உலகத்தைச் சுற்றிவரும் நத்தை இனங்களையும்,

நினைத்த பொழுதே இரவை வரவழைக்கும் சக்தி யுள்ள கணவாய் மீன்கள் பாறைகளின் அடியிலி ருந்து தங்கள் கரிய செதிள்களை நீட்டி வருவோர் போவோரை அழைக்கும் ஜாலத்தையும் ;

கோமேதக கப்பலிலேபட்டுப்பாய் பறக்கவிட்டு, வலித்துவரும் ஒருவகை கடல் ஜந்துவின்பிரயாணத் தையும் ;

மந்தஹாசமாய் கடல் கந்தர்வர்கள் யாழி சைத்து, கடல் அரக்கனையே தாலாட்டும் அந்த இசையையும் ;

கடற்பன்றிகளிலே சவாரி செய்யும், சின்னஞ் சிறு குழந்தைகளின், துஷ்டத்தனத்தையும் ;

வெண்ணிற கடல் நுரைகளிலே மிதந்து வந்து, மானுமிகளை ஆசைகாட்டி அழைக்கும் கடல் கன்னி களின் செயலையும் ;

கடற்சிங்கங்களின் வளைந்த பற்களையும், அலை யிலே மிதக்கும் கடற் குதிரைகளின் பிடரியையும் ;

கண்ணிகண்ணியாக, அவள் பாடினாள்.

அவள் பாட ஆரம்பித்ததும் இருக்கிற முரட்டு மீன்கள் எல்லாம் அடிக்கடலிலிருந்து அவள் இசை யைக் கேட்க வரும். இளைஞன், வலைவீசி, பிடித் துப் பிடித்து தோணியில் போட்டுச் செல்வான். பிடியாததை குத்து ஈட்டியால் குத்தி எடுத்துச் செல் வதும் உண்டு. தோணி நிறைந்ததும், கடல்கன்னி சிரிப்புக் குமிழியோடு கடலுக்குள் ஆழ்ந்துவிடுவாள்.

அவள், கைக்கெட்டும் தூரத்தில் நெருங்காமலேயே, வருவதும் போவதுமாக இருக்கிற நாளில், தன்னருகே வரும்படி அவளை வேண்டினன்; கெஞ்சினன். அவள் வரமாட்டாள். அப்படியே அவன் பிடித்துவிட்டால், பெரிய நீர் நாய் போல அமுங்கி விடுவாள்; அன்று முழுவதும் அவள் மீண்டும் தலைநீட்ட மாட்டாள். ஒவ்வொரு நாளும், அவள் குரல் தேனைத் திகட்டியது. அவள் குரலில் மயங்கி தன் வினையை தன் தொழிலை மறந்திருப்பான். வலையிலே மொய்க்கும் மீன் கூட்டங்கள் அவன் மனசைக் கவராதிருக்கும். குத்து ஈட்டி குத்தாமலும், மீன்கூடை நிறையாமலும் கிடக்க, சிந்தூரச் செதிளும், தங்க நிறக் கண்கள் துருத்திக்கொண்டும் இருக்கிற பெரிய மீன்கள் அலைந்து கொண்டிருக்கும். அதைப் பார்க்காமல் திறந்த வாயோடு, மங்கிய கண்களால் ஆனந்தம் துள்ள, அவள் பாடலை கேட்டுக்கொண்டே இருப்பான். கடற்பனி மூட்டம் கவிந்து வெண்ணிற முத்துக்களை அவன் உடலிலே கொட்டும்வரை பித்துப் பிடித்தவன்போல் இசையில் அமிழ்ந்திருப்பான்.

ஒருநாள் அவளிடம் "அடி, கடற்கன்னி, அடி கடற்பெண்ணே, உன்னைக் காதலிக்கிறேன். என்னை மணாளனாக ஏற்றுக்கொள்ள மாட்டாயா?" என்றான்.

தலையை அசைத்து "உனக்குத்தான், மனித ஆத்மா இருக்கிறதே. உனது ஆத்மாவை நீ

போக்கிவிட்டால் உன்னை நான் காதலிக்கமுடியும்" என்று மறுதளித்தாள்.

"என் ஆத்மாவினால் எனக்கு என்ன பயன்? நான் பார்க்க முடியாது. அதை ஸ்பரிசிக்க முடியாது. அது என்னவென்றும் அறியேன். உடனடியாக அதை எங்கேயாவது அனுப்பிவிட்டால், நானே மிகுந்த ஆனந்தம் அடைவேன்" என்று தனக்குள்ளாக சொல்லிக்கொண்டான். ஆனந்தம் பீறிட்டு, தோணியில் எழுந்து நின்றவன், தன் கைகளை நீட்டி, "என் ஆத்மாவை அனுப்பிவிடுவேன். நீ எனது காதலி. நான் உனது காதலன். கடலின் ஆழத்திலே நாம் ஒருடலாக, எங்கெங்கு வேண்டுமானாலும் சுற்றுவோம். உனது எண்ணங்களை, நான் நிறைவேற்றுவேன். நமது உயிரை யாரும் பிரிக்க முடியாது" என்றான் அக்கடற் கன்னியிடம்.

கடற்கன்னி ஆனந்த மிகுதியால் முகத்தைக் கையிலே புதைத்துச் சிரித்தாள். "நான் எப்படி, எனது ஆத்மாவை அனுப்புகிறது?" என்ற இளைஞன், "ஆமாம் நான் எப்படிச் செய்ய வேண்டும்? சொல்லேன் அப்படியே செய்கிறேன்" என்றான். "ஐயோ, எனக்குத் தெரியுமா? கடல் ஜீவன்களுக்கு ஆத்மா கிடையாதே. நான் என்ன கண்டேன், அந்தக் காரியத்தை?" என்றவள் உயிரைக் கொள்ளைகொள்ளும் ஆவலோடு

அவனைப் பார்த்தபடியே கடலுக்குள் ஆழ்ந்து விட்டாள்.

மறுநாள் பொழுது விடியுமுன், மலையுச்சியில் கை உயரத்தில் சூரியன் ஏறுமுன்பாக, அந்தச் செம்படவ இளைஞன், பாதிரியின் வீட்டிற்குப் போய் மூன்று முறை தட்டினான்.

வெளிப்பக்கம் நிற்பது யாரென்று நோட்டம் பார்த்தவர், திட்டி வாசலைத் திறந்து "வா" என்றார். உள்ளே சென்றவன் மண்டியிட்டு வேத புஸ்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தவரிடம், "ஸ்வாமியே, நான் ஒரு கடல் பெண்ணிடம் காதல்கொண்டேன். என் ஆத்மா காதலுக்கு இடையூறாக இருக்கிறது. நான் எனது ஆத்மாவை எப்படி அனுப்புகிறது என்று சொல்லுங்கள். ஆத்மாவால் எனக்கு என்ன பயன் என்றும் தெரியவில்லை. அதைப் பார்க்கிறேனா? அதை நான் தொட முடிகிறதா? அது என்னவென்றும் அறியேன்" என்றான்.

பாதிரி நெஞ்சில் அடித்துக்கொண்டார். "ஐயோ, ஐயய்யோ. உனக்குப் பைத்தியமா? ஏதேனும் விஷ மூலிகையைத் தின்றாயா, மனிதனின் தலைசிறந்த பாகம் அவனது ஆத்மா. கடவுளால் கொடுக்கப்பட்ட ஆத்மாவை நாம் தெய்வமாக பயன்படுத்த வேண்டும். எந்தப் பொருளும் ஆத்மாவிற்கு இணையாகாது. ஆத்மாவோடு பூலோக சிருஷ்டிகளை வைத்து நிறுக்க முடியாது.

உலகத்தின் அத்தனை தங்கங்களும் ஒரு ஆத்மா வுக்குச் சமம். ராஜாக்களிடமுள்ள அவ்வளவு வைரங்களுக்கும் மேலான தன்மை கொண்டது அது. ஆகவே மகனே, இதை இன்னொரு முறை நினைக்காதே. நினைப்பதே, மன்னிக்க முடியாத குற்றம். ஆத்மாவை இழந்த கடல் ஜீவன்கள், நன்மைக்கும் தீமைக்கும் பாகுபாடு தெரியாதவை. அதனோடு தொடர்பு வைப்பவனும் ஆத்மாவை இழக்கிறான் அவை, நன்மை-தீமை அறியாத ஜடங்கள். இந்த ஜடங்கள் உய்வதற்காக ரக்ஷகர் சிலுவையில் ஏறவில்லை.'' என்றார்.

பாதிரியின் கசப்பான வார்த்தைகள், அவன் கண்களை கலக்கிவிட்டன. எழுந்து அவர் மூட் டைப் பணிந்து '' ஸ்வாமி, வனதேவதைகள், காட் டிலே ஆனந்தமாகத் திரிகின்றன. மச்ச கந்தர் வர்கள் கடற்காட்டிலே, குழல் ஊதி, பாறைகளிலே ஆனந்தமாக வசிக்கிறார்கள். நானும் அவர்களைப் போல, மலர் சிந்தும் நாட்களை அனுபவிக்கலா காதா? என் ஆத்மா, ஆமாம் அதனால் எனக் குள்ள ஆதாயம் என்ன-என் காதலுக்கும் எனக் கும் ஊடாக அது நிற்கிறதே.'' என்றான் செம்பட வன்.

'' உடல்மீது காதல் கொள்வது பாவம். அவர் களை நான் அறிவேன். இரவு நேரத்தில் காட் டிலுள்ள மேஷமுகத்தார்களும், கடல் பாடகர்களும் ஜபமாலை உருட்ட விடாதபடி தடங்கல் செய்வர்.

என் தியானத்தையும் கலைப்பார்கள். சாத்திய சன்னலில் தட்டிவிட்டுச் சிரிப்பார்கள். தங்கள் ஆனந்த வெறியை என் காதில் போதனை செய்வார்கள். பலதிறப்பட்ட ஆசைக்கு என்னைத் தூண்டுவார்கள். நான் தியானிக்க ஆரம்பித்தால், சிரிப்பார்கள். அவர்கள் ஆத்மா அற்றவர்கள். அவர்களுக்குச் சொர்க்கமோ அல்லது நரகமோ இல்லை. இரண்டிலும் கடவுளின் நாமாவளியைப் புகழ பாக்கியமற்ற பேர்வழிகள், எல்லாம் இழந்த பாபிகள்," என்றார் மூகத்தை சுளித்து பாதிரி.

"பிதாவே," என்று அழவே செய்தான் வலைஞன். "தங்களுக்கு, என்ன பேசுகிறோம் என்றே தெரியவில்லை. ஒரு சமயம், கடற்கன்னியை வலையில் நான் பிடித்தேன். விடிவெள்ளியைவிட அவள் அழகி. வெண்ணிலவைவிட தூய்மையாக இருந்தாள். அவளுடைய உடலுக்காக எனது ஆத்மாவையே கொடுப்பேன். அவள் காதலுக்காக சொர்க்கத்தையே நிராகரிப்பேன். என் வேண்டுகோளுக்குப் பதில் சொல்லி, மனசிற்கு சாந்தி அளியுங்கள்" என்றான்.

பாதிரிக்கு கோபம் வந்து, "போடா, போடா. உன் புத்தியை இழந்தாய். நீயும் அவளோடு பாழாகப் போகிறாய்" என்றார். அவனுக்கு உபதேசம் செய்யாது அங்கிருந்து துரத்தினர் அவர்.

சந்தைக் கடைப் பக்கம் சென்றவன் தலை குனிந்தபடி துக்கமுள்ள ஒருவனைப்போல மெதுவாகப் போய்க்கொண்டிருந்தான்.

அவன் வருவதை அறிந்த மீன் வியாபாரிகள், ஒருவருக்கொருவர் முணுமுணுத்தபடியே இருந்தனர். ஒரு வியாபாரி மட்டும் அவன் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டு, "விற்பதற்கு என்ன கொண்டு வந்தாய்?" என்று கேட்டான்.

"என் ஆத்மாவை விற்கிறேன்" என்றவன், "தாங்கள் என்னிடமிருந்து அதை வாங்கிக்கொள்ளவேண்டும். அதனால் நான் அடையும் மனப் புழுக்கம்போதும். என் ஆத்மாவால் என்ன பிரயோசனம்? நான் பார்க்கவோ, ஸ்பரிசிக்கவோ முடியாது. அது என்னவென்றும் தெரியாது" என்று சொன்னான்.

அவனைப் பார்த்து நகைத்தனர் வியாபாரிகள். "ஒரு மனிதன் ஆத்மாவால் எங்களுக்கு என்ன லாபம்? இரண்டு வெள்ளிகூட பெறாது. உன் உடம்பை ஒரு அடிமையிடம் விற்றால்.....நாங்கள் கடல் பாசியினால் ஆன ஆடையைப் போர்த்தி, விரலுக்கு மோதிரமிட்டு ராணியின் அந்தரங்கப் பாது காவலனாக ஆக்குவோம். போயும் போயும் ஆத்மாவைச் சொன்னாயோ! அதனால் பயனும் இல்லை. எங்கள் பட்டியலில் அதற்கு விலையும் கிடையாது" என்றனர்.

யோசித்தான் இளைஞன். "என்ன விந்தை இது. உலகத்து தங்கம் அவ்வளவிற்கும் சரியான எடை ஆத்மா, என்றாரே பாதிரி. இரண்டு வெள்ளி கூட ஆத்மா பெறாதது என்கிறார்கள் இந்த வியா

பாரிகள்." இப்படி, எண்ணமிட்டபடியே கடற்கரையை அடைந்து, தான் என்ன செய்யலாம் என்று நினைக்கலானான்.

மதியத்தில், தன் நண்பனொருவன் சொல்லிய பால்ய சூன்யக்காரி ஒருத்தியின் நினைப்பு வரவே, வளைகுடாவின் அருகே அவள் குடியிருந்த குகையை நோக்கி ஓடினான். சூன்யத்தில் அவள் பெரிய கைகாரி. புழுதிப்படலம் பறக்க, தன் ஆத்மாவை தொலைத்துவிடும் ஆசையில் கடற்கரை வழியே அவன் ஓடினான். உள்ளங்கை அரிக்கவே, செம்படவனின் வரவை அறிந்து, பால்ய சூன்யக்காரி சிரித்தாள். அவளது செம்பட்டை மயிர் அவிழ்ந்து தொங்கியது. கூந்தல் உடலைச் சுற்றிப் புரள, குகை வாசலில் வந்து நின்றாள். கைகளிலே விஷ மூலிகைகளின் பூங்கொத்து சிலிர்த்து நின்றது.

"என்னப்பா தேவை, என்னப்பா தேவை?" என்று அவனைப் பார்த்துக் கேட்டவள், "ஓகோ வலையில் மீன்கள் விழவில்லையா? காற்றின் வீச்சு ஏமாற்றி விட்டதோ? என்னிடம் ஒரு தக்கைக் குழல்—சிகப்பு நிறம் கொண்டது இருக்கிறது. ஊதினால், கடல் மீன்கள் வளைகுடாவில் வந்து குவியும். இதற்கு மாறாக ஒரு விலையுண்டு. அழகு ராஜா, நீ விலை கொடுக்க வேண்டும். புயலடித்தால் கப்பலை கவிழ்க்கும். விலை மதிக்க முடியாத பொருள்களை கரையில் ஒதுக்கிவிடும். என்னிடம் புயலைவிடக்

கொடுமையான ஒரு சக்தி இருக்கிறது. கடலே வற்றி வரண்டு போகும்படி செய்வேன். அதற்கு ஒரு விலை வைத்திருக்கிறேன். அழகு ராஜாவே, அதற்கு ஒரு விலை வைத்திருக்கிறேன். உனக்கு என்ன தேவை? எனக்குத் தெரியும், அபூர்வமான மலரொன்று அந்தப் பள்ளத்தாக்கில் மலர்கிறது. மலர்வது வேறு யாருக்கும் தெரியாது. எனக்கு மட்டும் தெரியும். அந்தச் செடியில் ஊதா வர்ண இலைகள், அந்த பூவின் இதயத்திலே ஒரு நட்சத்திரம். அச்செடியின் ரஸம், பாலைப்போல வெண்ணிறம். அந்த மலரைக் கொண்டு, ராணியின் இதழ்களை நீ வருடினால், உலகம் எங்கும் அவள் உன் பின்னால் ஓடிவருவாள். அந்த ராணி, ராஜாவின் சயன அறையிலிருந்து எழுந்து உன் பின்னால் சுற்றுவாள். அதற்கு ஒரு விலையுண்டு, அழகு ராஜாவே, அதற்கொரு விலையுண்டு.

"நான் ஒரு தேரையை நைய நறுங்க இடித்துப் பொடியாக்கி அந்தக் குழம்பை செத்துப் போன ஒருவன் கையால் கிளறி விட்டால் போதும். அந்த அபூர்வ மருந்தை தூங்கும் உன் எதிரிமீது தெறித்தால் அவன் கருநாகமாக மாறிவிடுவான்; அம்மருந்து பட்டதும் பெற்ற தாயே மகனை கொலை செய்வாள். என் சக்கரத்தால், சந்திரனையே வான மண்டலத்தை விட்டு ஆகர்ஷிப்பேன். ஒரு பளிங்கிலே உனக்கு மரண தேவதையைக் காட்டுவேன். உனதுஎண்ணம் என்ன, அதை நான் நிறைவேற்றுகிறேன். எனக்கு பிரதி பிரயோஜனமாக ஒரு

விலை தரவேண்டும், அழகு ராஜவே, விலை ஒன்றுண்டு அதற்கு" என்றாள்.

"என் எண்ணம், ரொம்ப சின்ன விஷயத்தைப் பற்றியது. பாதிரி, இருந்தாலும் கோபப்பட்டு என்னைத் துரத்திவிட்டார். அந்தச் சின்ன விஷயத்தைக் கேட்டு வியாபாரிகள் நகைத்தார்கள். வாங்க மறுத்தும் விட்டார்கள். ஆகவே உன்னை நம்பி வந்தேன். உன்னை மனிதர்கள், விஷமக்காரி என்றாலும், நீ என்ன விலை கேட்டாலும் அதை நான் தந்து விடுகிறேன்" என்றான் செம்படவன்.

"பதிலுக்கு நீ என்ன செய்ய முடியும்?" என்று சூன்யக்காரி கேட்டாள்.

"என் ஆத்மாவை விட்டு விடுகிறேன்". இதைக் கேட்ட சூனியக்காரி நடுங்கினாள். எரியும் நீல நிற வெளிச்சத்திலே தன் முகத்தைப் புதைத்தவள், "அழகு ராஜாவே, அழகு ராஜாவே அது ரொம்பவும் பொல்லாத்தனமான காரியமப்பா" என்றாள்.

செம்பட்டை ரோமம் தோளில் புரள தலையசைத்து, "என் ஆத்மாவால் என்ன பயன்? நான் அதைப் பார்க்க முடியாது. அதை ஸ்பரிசிக்க முடியாது. அது என்ன வென்றும் எனக்குத் தெரியாது" என்று சொல்லி சிரித்தான்.

"வழியைச் சொன்னால், எனக்கு என்ன தருவாய்?" என்று அழகிய கண்களால் கூர்ந்து பார்த்தாள்.

"ஐந்து தங்க நாணயம், எனது வலைகள், என் குடிசை, வர்ணமடித்த அந்தத் தோணி முதலா

னவை தருகிறேன். என் ஆத்மாவை நான் விட்டொழிக்கும் மார்க்கத்தை நீ சொல்லிவிட வேண்டியது. என் உடமையெல்லாம் உனக்கே.

அவனைப் பார்த்து நையாண்டியாகச் சிரித்தாள். கையிலிருந்த புஷ்பத்தால் தீண்டி, "மரத்தின் வசந்த காலத் தளிர்களைத் தங்கமாக்குவேன். நான் நினைத்தால் வெண்ணிலவுக் கதிர்களை பாவாக நெய்வேன். நான் யாரிடம் வேலை பார்க்கிறேனே அவன் மண்ணிலுள்ள ராஜாக்களைவிட செல்வவான். ராஜாக்களின் தேசங்களுக்கும் சொந்தக்காரன்."

"நான் எதைத்தான் கொடுக்க, உனக்குப் பவுனும், வெள்ளியும் வேண்டாமென்றால் ?"

விளையாட்டாக அவன் உச்சந் தலையில் வெண்ணிறக் கையால் தொட்டு, "என்னோடு நீ நடனம் செய்யவேண்டும், அழகு ராஜாவே" என்று பேசிக் கொண்டே சிரித்தாள்.

"இவ்வளவுதானா ?" என்று கத்தினான், எழுந்து நின்றபடியே.

"இவ்வளவுதானா ?" என்று பதிலுக்குச் சொல்லியவள் புன்முறுவல் பூத்தாள்.

"அப்படியானால் அஸ்தமனத்திற்குப் பிறகு ரகஸியமான ஓர் இடத்தில் நாம் நடனமாடுவோம். ஆடியபின், நான் விரும்பிய விஷயத்தை நீ சொல்ல வேண்டும்."

தலையசைத்தாள் சூன்யக்காரி. "பௌர்ணமிச் சந்திரன் வந்தால்.....நிறைமதி வந்தால்....." என்ற முணுமுணுப்பு. அப்போது நீலப் பறவையொன்று தன் கூட்டை விட்டு வட்டமடிக்கிறது. இன்னும் மூன்று புள்ளி விழுந்த பறவைகளும் கெக்கலித்து ஒன்றுக்கொன்று விசில் அடித்தன. கூழாங் கற்களின்மேல் உராய்ந்த காற்றின் ஓலத்தைத் தவிர வேறு ஓசை இல்லை. அவனை அருகே இழுத்து தன் உலர்ந்த உதடுகளை அவன் காதின் பக்கம் கொண்டுபோய்ச் சொல்லுகிறாள் :

"இன்றிரவு நீ மலையுச்சிக்கு வந்துவிடவேண்டும். இன்று நிசாசரத் திருவிழா. அவரும் அங்கிருப்பார்."

வாலிபச் செம்படவன் தன் வழியே ஏகப் புறப்பட்டபோது அவளைப் பார்த்தான். அவள் தன் வெள்ளைப் பற்களைத் திறந்து சிரித்தாள். "அது யாரம்மா அவர் என்கிறாய்?" என்றான் அவன்.

"இப்போது தெரிய வேண்டுவது அநாவசியம். இன்றிரவே போ. அங்குள்ள மரத்தடியில் நில், நான் வரும்வரை. உன்னை நோக்கி ஒரு கரும் நாய் ஓடிவந்தால், அதை அரளிக் குச்சியால் அடி. அது ஓடிப் போய்விடும். ஆந்தை ஒன்று உன்னிடம் பேச ஆரம்பித்தால், நீ பேசாதே. நிலா பூர்ணமாக கிளம்பும்போது, உன்னருகே இருப்பேன் நான். நாமிருவரும் நடனமாடுவோம்."

"ஆனால், எனது ஆத்மாவைப் போக்கும் வழியை பிறகு நீ சொல்லுவாய் என்று சத்தியம் செய்ய முடியுமா?" என்ற கேள்வியைப் போட்டான். அவள் சூரிய வெளிச்சத்தில் வந்து நின்று தனது செந்நிறக் கூந்தலை காற்றிலே மிதக்க விட்டபடியே "வெள்ளாட்டின் குளம்பு சாட்சியாக" என்று பதிலிறுத்தாள்.

"நீயே, சூன்யக்காரிகளில் மேலானவள். உண்மையானவள்" என்றவன், "உன்னோடு இன்றிரவு மலையுச்சியில் நடனமாடுவேன். ஏனென்றால் என்னிடம் பவுனோ வெள்ளியோ கேட்காததால் நடனமாடுவேன். நீ கேட்ட பரிசு இருக்கிறதே, ரொம்பவும் சாதாரணமானது."

தன் தொப்பியை எடுத்து மரியாதையுடன் தலை வணங்கியவன், தன் நகரத்திற்குள் மகிழ்ச்சி நிறைந்த மனத்தோடு ஓடினான்.

அவன் போவதைப் பார்த்த சூன்யக்காரி, கண்ணுக்கு மறைந்த பிறகு குகைக்குள் போய், வாசனை நிறைந்த மரத்தினால் வேலைப்பாடமைந்த பெட்டிக்குள்ளிருந்து கண்ணாடியை எடுத்து, எரிந்து கொண்டிருந்த தீக்கங்கிலே அகிற் பொடியைத் தூவி, சுழன்று வரும் புகைப் படலத்தை உற்று நோக்கி "அவன் எனக்குத் தான். அவனைப் போலவே நானும் அழகி"—என்று தன் கைகளை மடக்கிக் கொண்டு, முணு முணுத்தாள்.

அந்தி மயங்கி, வெண்ணிலவு உதயமானதும் வாலிபச் செம்படவன், மலையின் உச்சிக்கு வந்து, அவள் குறிப்பிட்ட மாத்தடியில் நின்றான். கீழே கடல். பளபளவென உலோகத் தகடு போல விரிந்து கிடக்கிறது. மீன் படகுகளின் நிழல் விரி குடாவிலே நிழலாடுகின்றது. பெரிய ஆந்தை யொன்று, தனது கந்தக நிறக் கண்கள் ஜொலிக்க, அவன் பெயரைச் சொல்லி அழைக்கவே, அவன் பதிலிறுக்கவில்லை. கறுப்பு நாய் அவனை நோக்கி ஓடி வந்து உறுமி உடலை முறுக்கவே, அரளிக் குச்சியை எடுத்து அடிக்கவே கத்திக் கொண்டு ஓடிற்று.

நடு நிசி. சூன்யக்காரிகள், வெளவால்களைப் போல வானத்தில் பறக்கிறார்கள். செம்படவனைப் பார்த்து "பூ..........இது யாரோ நாம் அறியாத ஆசாமியாக இருக்கிறானே" என்று பூமியில் வந்து சொல்லி, சைகைகளும் சமிக்ஞைகளும் செய்தனர். கடைசியாக வாலை வயதுடைய சூன்யக்காரி, தன் செந்நிறக் கூந்தல் காற்றிலே ஊசலாட வந்தாள். அவள் தங்கப் பாளத்திலே ஆடை அணிந்திருக்க, அங்கங்கே மயிலின் தோகைக் கண்கள் 'டால்' அடித்தன. பச்சை நிற வெல்வட் துண்டை தலையிலே சுற்றி இருந்தாள்.

"அவன் எங்கே? எங்கே அவன்?" என்று மற்ற சூன்யக்காரிகள் கோஷமிட்டு அவளிடம் கேட்க, சிரித்து மழுப்பி விட்டவள், ஓடியே போய்

மரத்தடியில் நின்ற அவனை கைலாகு கொடுத்து, நிலவிலே இழுத்து நடனமாடினாள். ஆட்டம் ஆரம் பித்தது.

சுற்றிச் சுற்றி ஆடினர். சுழலும் வேகத்திலே, அவள் குதிக்கிற போது பாதத்திலே போட்டிருக் கும் செருப்பின் அழகு தெரிந்தது. ஆட்டத்தின் மத்தியில் ஏதோ ஒரு குதிரையின் காலடி ஓசை கேட்கிறது. பயந்து அவன் திருதிருவெனப் பார்க்க குதிரையைக் காணோம். காலடி ஓசையே இன்னும் கேட்கிறது. பயந்து விட்டான் செம்படவன்.

"துரிதமாக ஆடு" என்று கைகளால் கழுத் தைச் சுற்றிக் கொண்டு 'துரிதமாக ஆடு. ஆடேன் துரிதமாக' என்று கத்தினாள். காலுக்கடியில் பூலோகமே சுற்றிச் சுழல்வதாகவும், மூளை கலங்கி நிற்பதாகவும் பயப் பிராந்தி உந்தவே, ஏதோ ஒரு கெடுதல் தன்னைக் கௌவப் போவதாகவும் நினைத்தவன் கண்ணிலே, பாறையின் நிழலிலே ஒரு உருவம்—முன்னால் கண்ணுக்குத் தெரியாமல் இருந்த உருவம்—தெரிய ஆரம்பித்தது.

ஸ்பானிய நாட்டு முறைப்படி கருப்பு வெல்வட் டில் சூட்டு அணிந்திருந்தான் அந்த மனிதன். முகத் திலே துடிப்பு இல்லாவிட்டாலும் உதடுகள் பெரு மிதம் நிறைந்த சிகப்பு வர்ண மலரைப் போல இருந்தன. சோர்வாக இருந்த அவன் தனது குத்து வாளோடு விளையாடிக் கொண்டிருந்தான். புல் தரையில், அவனருகே அகன்ற தொப்பியும், கையுறைகளும் கிடந்தன. அந்தக் கையுறையில்

மணிகள் கோத்து 'லேஸ்' வைத்து விந்தையாகப் பின்னப்பட்டிருந்தது. கை நிறைய மோதிரங்கள், தோளிலே சட்டை, கண்ணிமையில் அழுத்தம்.

அந்த மனிதனைக் கவனித்த செம்படவன் மயங்கி மருள மருள பார்த்தான். அவர்கள் கண்கள் சந்தித்தன. எங்கு நடனமாடி குதித்தாலும் அம் மனிதனின் கண்கள் தன் மீது பதிவதைக் கண்டான். உடனே சூன்யக்காரியின் சிரிப்பொலி கேட்கும். அவளுடைய இடுப்பைச் சுற்றி அவளோடு புயலாகச் சுற்றிச் சுற்றி ஆடிச் சுழல்வான்.

காட்டிற்குள் நாயின் ஊளை கேட்கவே, நடனத்தின் ஓட்டம் தடைப் பட்டு, ஜோடியாக நடந்து சென்றனர். அந்த மனிதனின் கைகளைத் தூக்கி முத்தமிட்டனர். பறவையின் சிறகு தண்ணீரைக் கிளு கிளுப்பது போல அம் மனிதன் சிரித்தான். அந்த மனிதன் வைத்த கண் வாங்காது செம்படவ இளைஞனை ஏளனமாகப் பார்த்தான்.

'வா, இவரை வணங்கலாம்' என்று காதோடு சொல்லிய சூன்யக்காரி கைப் பிடியாக இழுக்கவே, அவன் பின் தொடர்ந்தான். நெருங்கிப் போய்க் கொண்டிருந்த போது, தன் மார்பிலே சிலுவை அடையாளத்தை மானசீகமாக இட்டு பரிசுத்த நாமத்தை உச்சரித்தான்.

இப்படிச் செய்யவே, மற்ற சூன்யக்காரிகள் கிரிச்சிட்டனர், கழுகு போல. அவர்கள் பறந்தனர். இதைக் கவனித்து வந்த அந்த மனிதன் முகத்

யைச் சுளித்தான். சிறிது தூரம் காட்டுக்குள் போய் விசில் அடித்தான்.

அப்போது அந்தச் செந்நிற கூந்தலழகி பறக்க யத்தனிக்க, செம்படவன் அவள் இடுப்பை வளைத்துப் பற்றினன்.

"விட்டுவிடு. நான் போகவேண்டும். யார் பெயரைச் சொல்லக்கூடாதோ அதை நீ சொன்னாய். நாங்கள் எதைப் பார்க்கக்கூடாதோ அந்தச் சிலுவைக்குறியை பார்க்கும்படி, நீ போட்டாய்."

"முடியாது. உன்னை விடமாட்டேன். அந்த ரகஸியத்தைச் சொன்னலொழிய போக விடேன்."

நுரை தள்ளும் உதடுகளைக் கடித்துக்கொண்டு, திமிறி ஓடும் காட்டுப்பூனை போல தன்னை விடுவிக்க முயற்சி செய்த அவள் "என்ன ரகசியம்?" என்ருள்.

"உனக்கே தெரியும்."

பசும்புல் போன்ற அக்கண்களில் நீர் துளிர்க்க அவள் பார்வை மங்கியது. "அதைத் தவிர வேறு ஏதாவது கேள்" என்ருள் அவள்.

அவன் சிரிப்போடு சிரிப்பாக பிடியைத் தளர்த்தவில்லை. தன்னல் தப்பிக்க முடியாது என்பதை உணர்ந்து "நானும் அந்த சமுத்திர ராஜாவின் மகளைப்போன்ற அழகி என்பதில் உனக்கு ஆக்ஷேபனை உண்டா? கடலிலே வசிக்கும் மக்களைப் போலவே நானும் அழகாக இருக்கிறேன்"

என்று அவன்மேல் சாய்ந்து உறவு கொண்டாடினாள். அவளைப் பின்புறமாக கோபத்தோடு தள்ளியபடி, "நீ கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாவிட்டால், உன் உயிரை வாங்குவேன்" என்றான்.

வாடும் மலரைப்போல அவள் வதனம் மாறி விட்டது. "நடக்கட்டும். அது உனது ஆத்மா. எனதல்லவோ. உன் இஷ்டம்போல் செய்" என்றவள் அடி முந்திக்குள்ளிருந்து ஒரு கூரிய கத்தியை எடுத்துக் கொடுத்தாள். கத்தியின் பிடியிலே பச்சைப் பாம்பின் தோல் சுற்றப்பட்டிருந்தது.

"கத்தியினால் எனக்கு என்ன பயன் ஏற்படும்?" ஆச்சரியத்தோடு அப்படிக் கேட்டான்.

அவள் சிறிது நேரம் மௌனமாக இருக்க, அவள் முகத்திலே பயத்தின் சாயை படர்ந்தது. நெற்றியில் புரண்ட கூந்தலை ஒதுக்கிப் பின்புறம் தள்ளிவிட்டு, "மனிதர்கள், தேகத்தின் நிழல் என்கிறார்களே, அது தேகத்தின் நிழல் அன்று. அந்த நிழலே ஆத்மாவின் தேகம். கடற்கரைக்குப் போய், நிலவை நோக்கி முதுகுப் புறமாக நில். காலடியில் தொடரும் உன்நிழலை நீ வெட்டியெறிந்தால், அந்த ஆத்மா உன்னை விட்டுப் போய்விடும் அது போயே ஆகவேண்டும்" என்று சொல்லி முடித்தாள்.

தேகம் நடுக்குற்று, 'இது உண்மையா? என்றான்.

" ஆமாம். இல்லாவிட்டால் நான் ஏன் உனக்கு சொல்லுகிறேன் " என்றவள் ஒசிந்து அவன் காலடியில் அழுதாள்.

அவளை அப்படியே அந்தப் பசும் புல்தரையில் கிடத்தி விட்டு, மலை உச்சிக்கு வந்தவன், தன் இடையில் அந்தக் கத்தியைச் செருகி, மலையிலிருந்து இறங்க ஆரம்பித்தான்.

அவனுடன் இருந்த ஆத்மா அவனை பார்த்து "ஐயோ, இத்தனை காலமாக உன்னோடு வாழ்ந்தேனே. நான் உனது பணியாள். உன்னை விட்டு என்னை அனுப்பி விடாதே. உனக்கு நான் இழைத்த தீவினை என்ன ?" என்பதாக கேட்டது.

செம்படவ இளைஞன் நகைத்து, " எனக்கு எவ்விதக் கெடுதல்களும் செய்ய வில்லை. எனக்கு உன்னால் ஆகவேண்டியது ஒன்றுமில்லை " என்றவன், " இப்பூமி அகண்டமானது. போதாக் குறைக்கு சொர்க்கம் இருக்கிறது. நரகம் இருக்கிறது. இரண்டுக்கும் ஊடாக திரிசங்கு சொர்க்கமும் உண்டு. எங்கு வேண்டுமானாலும் நீ போய் விடு. என்னைத் தொந்தரவு செய்யாதே. எனது காதலி என்னைத் தேடுவாள் " என்று முடித்தான்.

ஆத்மா இரக்கத்தோடு கெஞ்சும். செவி சாய்க்காது, மலையிறக்கத்தில் அப்படியும் இப்படியும் ஆடி, மலையாட்டைப் போல அங்குமிங்கும் தாவிக் குதித்து சமதரையில் வந்து நின்றான். எதிரே மஞ்சள் வர்ண கடல் கரை,

கிரேக்க நாட்டுச் சிற்பி வார்த்த செப்புச்சிலை போல மணலிலே நிலவிற்கு முதுகைக் காட்டிய படி கம்பீரமாக நின்ருன். கடலலையின் வெள்ளிய நுரைகள், தலை வணங்கி அவனை வரவேற்றன. அலைகளின உயரம் வரவர குறைந்து மரியாதை செய்தன. அவனுக்கு முன்னே காலடியில் நிழல் அதாவது அவனது ஆத்மா. அவனுக்கு பின்னுல் தேனிலவு, தொங்கும் வானம்!

அவன் ஆத்மா, "என்னை, துரத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால், இதயமில்லாமல் அனுப்பி விடாதே. இந்தப் பரந்த உலகம் பொல்லாதது. உன் இதயத்தையும் என்னேடு எடுத்துச் செல்ல அனுமதிக்க வேண்டும்" என்று புலம்பியது. தூக்கி யெறிந்தாற்போல தலையசைத்துச் சிரித்தான்.

"என் இதயத்தை உனக்குக் கொடுத்துவிட்டால் என் அன்பை நான் எப்படிக் காதலிக்கிற தாம்?"

அப்படிச் சொல்லாதே, என் மீது இரக்கம் காட்டு. உனது இதயத்தைக் கொடு. இந்த உலகம் பொல்லாத உலகம். எனக்குப்பயமாக இருக்கிறது.

"என் இதயம், என் காதலிக்குச் சொந்தம். தொல்லை செய்யாது, நீ போய்த் தொலை,"

"நானும் அன்புக்கு ஆளாக வேண்டாமா?"

"போய்த் தொலை. எனக்கு நீ வேண்டாம்" என்று சொன்னவன், பாம்புத் தோல் சுற்றிய கத்

தியின் பிடியைத் தொட்டு வெளியே உருவினான். காலைச் சுற்றிப் படர்ந்த தன்னிழலை வெட்டி எறிந்தான். அது எழுந்து, அவன் முன்னே நின்று பார்த்தது. அவனைப் போலவே அச்சு அசல் அந்த நிழல்.

பின் வாங்கி, கத்தியை இடையில் செருகியபடி ஆனந்த பரவசத்தோடு "போய் விடு, உன் மூஞ்சியை, இனி நான் பார்க்கக் கூடாது" என்றான்.

"இல்லை, நாம் சந்திக்க வேண்டும்" என்றது ஆத்மா. கம்பி போல மெல்லியதாக குரல் இருந்தாலும், குழலினிமை தொனிக்கப் பேசிற்று. பேசும் போது அதன் உதடுகள் அசைய வேண்டுமே.

"எப்படிச் சந்திப்பது, நாம்? கடலுக்குள்ளே கசம் கசமா என்னைத் தொடர்ந்து வரமாட்டாயே?"

"வருஷத்திற்கு ஒரு முறை இந்த இடத்திற்கு வந்து உன்னை அழைப்பேன். ஒரு வேளை என்னுதவி உனக்குத் தேவைப் படலாம்."

"உன் உதவி, எனக்கா? என்றவன் குபுக்கென்று நீரில் குதித்து 'நீ நினைக்கிறபடியே ஆகுக' என்று கடலிலே அமிழ்ந்தான்.

கடல் இடையர்களின் ஊதுகுழல் ஒலித்தது. கடல் கன்னி மேலே வந்து அவனைச் சந்தித்தாள். அதரங்களால் முத்தம் கொடுத்தவள், அவன் கழுத்தைச் சுற்றிப் பிடித்துக் கொண்டாள்.

அந்தக் கடற்கரையில் அவன் ஆத்மா ஏகாந்தமாக அவர்கள் லீலையைப் பார்த்தது. அவர்கள்

சமுத்திரத்திற்குள் ஆழ்ந்தபோது, அழுது புலம்பிக் கொண்டு அந்த சதுப்பு நிலத்தின் வழியே சென்றது.

ஒரு வருஷம் சென்றதும், ஆத்மா கடற்கரைக்கு வந்து செம்படவனை அழைக்க, அவன் ஆழ்கடலுக்குள்ளிருந்து மேலே மிதந்து வந்து "என்னை ஏன் அழைத்தாய்?" என்றான்.

"என்னருகே வா. உன்னோடு நான் பேச வேண்டும். எவ்வளவோ அற்புதங்களை பார்த்திருக்கிறேன்."

அதன் அருகே வந்து, குறைவான ஆழத்தில் கரையை ஒட்டி, நீட்டி நிமிர்ந்து கையில் தலை வைத்துச் சாய்ந்தபடியே கேட்க ஆரம்பித்தான்.

*　　　　*　　　　*

உன்னைவிட்டுப்போனதும், நான் கிழக்கு முகமாக யாத்திரை செய்தேன். அறிவின் உறைவிடம் கிழக்குத் திசை. ஆறு நாள் பிரயாணம் முடிந்த பிறகு ஏழாம் நாட் காலையில், தார்தார்களுடைய நாட்டின் மலையை அடைந்தேன். டமரிஸ்க்கு மர

நிழலில் தங்க நேர்ந்தது. வரண்ட தேரைக் காட்டுப் பூமியில், எங்கும் வெயிலின் தகிப்பு. பளபளக்கும் செப்புத் தகட்டில் நகரும் ஈக்கள்போல சமவெளியில் மக்கள் அங்குமிங்கும் அலைகிறார்கள்.

மத்தியான வேளையில் செம்புழுதியின் புகைப் படலம் அடிவானத்தருகே எழுந்தது. தார்த்தர்கள், இதைக் கண்டதும் வில் வளைத்தனர். குதிரையேறி ஓடினர். அங்கிருந்த பெண்கள் பயந்து மூடு வண்டிக்குள் பதுங்கினார்கள்.

சாயங்காலம் அவர்கள் திரும்பியபோது ஐந்து தார்த்தர்கள் உடன் வரக்காணோம். வந்தவர்களிலும் ஒரு சிலர்தான் காயமின்றி வந்தனர். ஏறி வந்த குதிரைகளை வண்டிகளில் பூட்டி வீடுகளுக்குத் திரும்பினார்கள். அந்த வேளையில் மூன்று நரிகள் குகைக்குள்ளிருந்து வந்து எட்டிப் பார்த்தவை பின் தொடர்ந்தன. ஆகாயத்தை மோப்பம் பிடித்து பின்னர் எதிர்த்திசையில் ஓடின.

வெண்ணிலவு உதயமானதும், கூடாரமடித்திருந்த இடத்தில் வெளிச்சம் தெரியவே, அங்கு போனேன். ஒரு ஜமுக்காளத்தில், வியாபாரிகள் கூட்டம் அமர்ந்திருந்தது. அவர்களுடைய ஒட்டகங்களை முளையடித்திருந்தனர். கூடாரத்துக்குப் பின்னால், நீக்கரோவ வேலைக்காரர்கள், பதனிட்ட தோலினால் ஆன கூடாரத்தை அடித்திருந்தார்கள். பாதுகாவலுக்கு சப்பாத்திகள் மதில் சுவராக நிற்கின்றன.

நான் அங்கு போனபோது அவர்களுக்குள் முக்கியமான ஒரு வியாபாரி என்னைப் பிடித்து "என்ன வேலையாக இங்கு வந்தாய்?" என்ருன்.

நான் ஒரு ராஜகுமாரன் என்றும் தார்த்தாரிகள் என்னைத் தங்கள் அடிமையாக்க முயலுவதாகவும் அவர்களிடமிருந்து ஓடிவந்ததாகவும் சொன்னேன். மூங்கிற் கழியில் குத்தி வைக்கப்பட்டிருந்த ஐந்து தார்த்தாரிகள் தலையைச் சுட்டிக் காட்டினன் வியாபாரி.

கடவுளின், தீர்க்கதரிசி யார் என்று கேட்கவே, நான் முகமது என்றேன். பொய்யான தீர்க்கதரிசியின் பெயரைச் சொல்லியதைச் செவி மடுத்ததும், என்னைக் கைகுலுக்கித் தன்னருகே அமரச் செய்தான் ஒரு நீக்ரோ. செம்மறியாட்டுப் பாலை மரப் பாத்திரத்தில் கொண்டு தந்தான். அத்தோடு வறுத்த வெள்ளாட்டு மாமிசம் வேறு.

நாங்கள் பொழுது விடிந்ததும் பிரயாணம் செய்தோம். அந்தத் தலைவனேடு, சிவப்பு ரோமமுள்ள ஒட்டகத்தின் மீது அமர்ந்து செல்ல, எங்கள் முன்னே ஒரு மெய் காவலன் ஈட்டி சகிதம் ஓடிக் கொண்டிருந்தான். எங்களுக்கு இரு பக்கமும் வீராதி வீரர்கள். பின்னல் விலைபொருள்களைச் சுமக்கும் கோவேறு கழுதைகள் வருகின்றன. அந்தக் கூட்டத்தில் நாற்பது ஒட்டகங்களும், எண்பது குதிரைகளும் இருந்தன.

தார்த்தாரியர்களின் நாட்டை விட்டு, ஒரு நாட்டுக்குள் நுழைந்தோம். அந் நாட்டினர்களுக்குச் சந்

திரனைப் பிடிக்கவே பிடிக்காது. வெண்ணிற பாறையில் தங்கத்தைப் பாதுகாத்து பூதங்கள் நிற்க, பறவை நாகங்கள் அந்தக் குகையில் தூங்கி வழிந்தன. பனியின் கொடுமைக்கு பயந்து கண்களைப் பாதுகாத்து மலைவழியே செல்லுகிறோம். குள்ளர் பள்ளத் தாக்குகளில் நாங்கள் போகிறபோது, மரங்களிலிருந்த எங்களை நோக்கி அம்புகள் பாயும். இரவிலே, காட்டு மனிதர்கள் தாரை தப்பட்டை அடித்தனர். மனிதக் குரங்குகள் நிறைந்த ஊசிக் கோபுரத்தில், பழங்களை வீசி அவற்றின் தொந்தரவிலிருந்து தப்பினோம். பாம்புக் கோபுரத்தில், பால் வார்க்க, அவைகள் வழிவிட்டு விலகின. தண்ணீர் பிராந்தியங்களில் நீர் யானைகளின் தொம்மாளம் கண்டு, எங்கள் ஒட்டகங்கள் பயந்துவிட்டன.

நகரங்களுக்குள் நுழைகிறபோது கட்டணங்கள் செலுத்தினோம். எங்களுக்கு, தேனிலும் பேரீச்சம் பழத்திலும் தோய்க்கப்பட்ட மக்காச் சோள ரொட்டிகள் மதில் சுவருக்கு அப்பால் வந்துவிழும். அதன் வாஸனையோ அலாதி. இம்மாதிரி நூற்றுக் கணக்கான ரொட்டிக் கூடைகளுக்குப் பதிலாக, பாசி மணி அவ்வளவு, அம்பர் கொடுப்போம்.

கிராமங்களில் எங்கள் தலையைக் கண்டதும் குடி தண்ணீர் கிணறுகளில், விஷத்தைப் போட்டு விட்டு மலையுச்சிக்குப் போய்விடுவர். தொண்டுக் கிழமாகப் பிறந்து வருஷத்துக்கு வருஷம் பால்ய தசை அடைந்து, குழந்தை பருவம் வந்ததும்

சாகின்ற அந்த மகடே ஜாதிகளுடன் சண்டை. புலிகளின் பரம்பரையெனச் சொல்லிக் கொண்டு, கருப்பிலும் மஞ்சளிலும் சாயம் பூசிக்கொள்ளும் வேறொரு ஜாதியாருடன் போர். இருளிலே வாழ்ந்து இறந்தவர்களை மரங்களில் புதைத்து, சூரியனை வழிபட்டு, தங்களைச் சூரியனே கொல்ல முடியும் என நினைக்கிறவர்களுடன் போரிட்டோம். தங்கள் தெய்வம், முதலையே என வணங்கும் ஜாதியார்களுடனும், சுவானமுகம் படைத்தவர்களுடனும்,குதிரைக் குளம்பு கொண்டவர்களுடனும் - குதிரையைவிட இவர்கள் வேகமாக ஓடுவார்கள் - சண்டை யிட்டோம். எங்கள் படையில், மூன்றிலொருபங்கு சண்டையில் மாய, ஆகாரமின்றி ஒரு பங்கு இறந்தது. எஞ்சியவர்கள் முணுமுணுத்தனர். என்னைக் கண்டு பயந்தனர். கல்லுக்கடியிலிருந்து கொம்பு விரியனை எடுத்துக் கடிக்க விட்ட போது, நான் நோயின்றி இருப்பதைப் பார்த்து உடனிருந்த வியாபாரிகள் பயப்பட்டனர்.

நான்கு மாதத்திற்குப் பிறகு இல்லல் என்ற கிராமத்தை அடைந்தோம். நேரம், இரவு. அந்தச் சோலைக்குள் நுழைந்தபோது சந்திரோதயம் ஏற்பட்டது. எங்கும் ஒரே புழுக்கம். போதாக்குறைக்கு அன்று விருச்சிக ராசி. சோலையின் மாதுளைகளைப் பறித்து, ரஸத்தை மண்டினோம். சுகமாக படுக்கையில் விழுந்து காலைப் போதை எதிர்பார்த்தோம்.

காலையில் எழுந்து அந்த நகரின் கோட்டை வாசலை இடிக்கின்றோம். அந்த கதவு சிவப்பு நிற

மான வெண்கலக் கதவு. அதிலே பறவை நாகங்கள் சிறகோடு கூடியவை பொறிக்கப் பட்டிருந்தன. காவலாளிகள் முறைத்தபடியே எங்கள் அலுவல் என்னவென விசாரித்தனர். நாங்கள் சிரியா நாட்டிலிருந்து வியாபாரப் பொருள்கள் கொண்டு வந்தோம் என்றனம். எங்களில் சிலரை பணயமாக இருக்கும்படிச் சொல்லி விட்டு உச்சி வேளையில் கதவு திறக்கப் படுமென்றும் அதுவரை காத்திருக்கும்படியும் வேண்டினர்.

உச்சி வேளையில் கதவைத் திறக்க, நாங்கள் நகரத்திற்குள் அடி எடுத்து வைக்க, மக்கள் வீடுகளிலிருந்து வீதிக்கு வந்து குழுமிவிட்டனர். எங்கள் வருகையை அறிவிப்பவன் போல, ஒருவன் சங்கொலித்துக் கொண்டு செல்கிறான். நீக்ரோவர்கள் எங்கள் விலை பொருள்களை ஒட்டகத்திலிருந்து இறக்கினர். இறக்குமதி முடிந்ததும், எகிப்து சில்க்கும், எதியோப்பிய நாட்டினரின் சாயம் பூசப்பட்ட வேலைப்பாடமைந்த சில்கும், டயர் நாட்டின் கடற்பஞ்சுகளும், சிடான் நாட்டின் ஊதா நிறத்தோரணங்களும், சுட்டெடுத்த மண் பாண்டங்களில், குளிர்ந்த அம்பர்களும், எடுத்துக் கடை பரப்பினேம். ஒரு வீட்டின் மேன் மாடத்திலிருந்து பெண்கள் கூட்டம் ஒன்று எங்களை நோட்டம் பார்த்தது. ஒருத்தி பகட்டான வேலைப்பாடமைந்த தோலிலே முக மூடி போட்டிருந்தாள்.

முதல் நாள், மதகுருக்கள் வந்து பண்டமாற்றுச் செய்தனர். மறு நாள் பிரபுக்கள் வந்து

பண்ட மாற்று செய்தனர். மூன்றும் நாள் தொழிளாளர்களும் அடிமைகளும் வந்தனர்....வியாபாரிகள் தங்கும் வரை. இதுவே அந்நாட்டின் வியாபார முறை.

ஒரு மாதம் தாமதித்தோம். தேய்பிறையும் வரவே நான் தெருக்களை யெல்லாம் சுற்றி, கடவுளின் நந்தவனத்தை அடைந்தேன். நிசப்தமாக மஞ்சள் உடை அணிந்த பாதிரிகள் பசுஞ் சோலையில் நடமாடிக் கொண்டிருந்தனர். அங்கே கரிய சலவைக் கற்களாலான தளத்தில், ரோஜா வர்ணங் கொண்ட கட்டிடமே, கடவுளின் பீடம். கதவுகளிலே, காளைகளும், மயில்களும், தங்க நிறத்திலே எழுதப் பட்டிருந்தன. கடற் பச்சை வர்ணம் கொண்ட பீங்கான் கண்ணாடிகள் ஒருச்சாய்த்துக் கூரையில் பதிக்கப்பட்டிருந்தன. நீட்டிக் கொண்டிருந்தன பீங்கான் இறப்புகளில், மணிகள் தொங்கின. வெண் புறாக்கள் இறகடித்து வெளியே பறக்கிறபோது இறப்பு மணிகளில் இறக்கைகள் பட்டு எங்கும் கணகண வென்ற மணியோசை.

கோவிலுக்கு எதிரே குளத்தின் அடியிலே அநேக நிற பளிங்கு கற்கள் பாவப் பட்டிருந்தன. குளத்தருகே படுத்து அச்செடிகளின் அகன்ற இலையைத் தொட்டேன். ஒரு பாதிரி வந்தவர் என்னருகே நின்றார். காலிலே இருந்த பாதரக்ஷைக் கட்டையில் மேலே பாம்புத் தோலும், சில பட்சிகளின் இறகுகளும் இருந்தன. தலையிலே

கருப்பு நிற கம்பளித் துணியில், ஜரிகை வேலைப் பாடமைந்த முடி. அங்கியிலேயே ஏழு மஞ்சள் கட்டங்கள். தலை முடியிலே ஏதேதோ வர்ணப் பூச்சு.

சிறிது நேரம் சென்றதும் என் அபிலாஷை யைக் கேட்டார்.

"கடவுளைக் காண வேண்டும்" என்றேன்.

"கடவுள் வேட்டைக்குப் போயிருக்கிறார்" என்று ஓரக் கண்ணால் என்னைப் பார்த்தார்.

"ஸ்வாமி, எந்தக் காட்டில் என்று சொன்னால், அங்கே போகிறேன்" என்றேன்.

நீண்ட விரல்களால் தலையைக் கோதியபடி, "கடவுள் தூங்குகிறார்" என்றார்.

"தூங்கினால், எந்த மெத்தையில் என்று சொல்லுங்கள், நான் பார்த்துக்கொள்கிறேன்" என்றேன்.

"கடவுள் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்."

"அவர் சாப்பிடும் அந்த திராக்ஷை ரஸம் தித்திப்பாக இருந்தால் அவரோடு நானும் அருந்து வேன். கசப்பாக இருந்தாலும் அவரோடு அதை யும் அருந்துகிறேன்."

ஆச்சரியத்தோடு குனிந்து, கைபிடித்து, படுத் திருந்த என்னைத் தூக்கி நிறுத்திக் கோவிலுக்குள் அழைத்துச் சென்றார்.

முதல் மண்டபத்தில், முத்துக்களால் அலங்க ரிக்கப்பட்ட சூரிய காந்தக் கல்லினுலான பீடத்தில், ஒரு விக்கிரகம் பார்த்தேன். அந்த விக்கிரகம், கருங்காலி மரத்தினுல், ஆளளவு உயரம் செதுக்கப் பட்டிருந்தது. அதன் நெற்றியில் ஒரு மாணிக்கம். தலையிலிருந்து கொழு கொழுவென எண்ணெய் வழிந்து மடியிலே கொட்டிக் கொண்டிருந்தது. சிவந்த பாதங்களைச் சுற்றி செப்புப் பட்டயம் சுற்றி யிருக்க, அப் பட்டயத்தில் ஏழு கோமேதகங்கள்.

அந்தப் பாதிரியிடம் " இதுதானு கடவுள் ?" என்று கேட்க, " ஆம் இதுவே கடவுள் " என்ருர்.

" கடவுளைக் காட்டும். இல்லாவிட்டால் உமது உயிரை வாங்குவேன் " என்று கையைப் பிடித்த தும், அவர் கை நடுக்குற்று கூழையாகிவிட்டது.

பாதிரி என்னிடம் " கர்த்தர் இந்த ஏழை யைக் குணப்படுத்தினுல், பிறகு கடவுளைக் காட்டு கிறேன் " என்ருர்.

அவர் கையிலே எனது மூச்சுப் பட்டதும், நடுங் கிச் சுருங்கிய கை, குணமடைந்தது. பிறகு இரண் டாவது மண்டபத்திற்குள் அழைத்துச் செல்ல, வாடிய தாமரை இதழ்களில், மரகதக் கற்களால் மாலையணிந்து ஓர் உருவம் நின்றுகொண்டிருந்தது. அந்த விக்கிரகம் தந்தத்தால் இழைக்கப்பட்டு, மனித ஆகிருதியைவிட இரண்டத்தனை உயரம் இருந்தது. நெற்றியிலே சுடர் தெறிக்க, மார்பகத் திலே இலவங்கப்பட்டையும், வெள்ளைப் போளமும்

கலந்து தடவப்பட் டிருக்கிறது. ஒரு கையில் கோணலான செங்கோல், மற்ெறாரு கையில் வட்ட வடிவிலே பளிங்கு, காலில் கவசம் பித்தளை உலோ கத்திைலும், கழுத்திலே அணிந்த ஆரம் நிலவொளி யின் தன்மையும் நிறைந்திருந்தது.

பாதிரியிடம், "இதுதான் கடவுளா?" என் றேன். அவர் "இதுவே கடவுள்" என்றார்.

"நிஜமாக கடவுளைக் காட்டிவிடுங்கள். அல்லாத பட்சம் உயிரை மாய்ப்பேன்" என்று கண்களைத் தொட்டேன். அவை, குருடாகிவிட்டன.

"இந்த ஏழையின் துயரைக் கடவுள் போக்கட் டும். நான் கடவுளைக் காட்டுகிறேன்" என்றார்.

கண்ணில் ஊதினேன், பார்வையடைந்தார் பாதிரி. நடுங்கியவாறே, மூன்றும் மண்டபத்துள் அழைத்துச் செல்ல, என்ன ஆச்சரியம்! அங்கு விக்கிரகம் இல்லை. எந்த உருவமும் இல்லை. ஆனல் ஒரு கல்லின் மேலாக ஒரே ஒரு கண்ணாடி அந்தப் பீடத்திலே இருந்தது.

"கடவுள் எங்கே?" என்று பாதிரியிடம் கேட் டேன்.

"கடவுள் இல்லை. நீ பார்க்கிற இந்தக் கண் ணாடிதான் இருக்கிறது. இதற்கு ஞானக் கண்ணாடி எனப் பெயர். பார்க்கிறவன் முகம் தவிர, பூலோ கத்துப் பொருள்கள், சொர்க்க லோகத்துப் பொருள்கள், எல்லாம் காட்சியளிக்கும், பார்க்கிற

வன் முகத்தைத் தவிர. இவ்வாருக பார்க்கிறவனை புத்திசாலி ஆக்கும் அக்கண்ணுடி. இது தவிர வேறு கண்ணுடிகள் உள. அவை அபிப்பிராயக் கண்ணுடிகள். முன் இருப்பது மட்டுமே அறிவுக் கண்ணுடி. இந்தக் கண்ணுடி உள்ளவர்கள் எதையும் அறியலாம். அவர்களுக்குப் புலனுகாதது ஒன்றுமில்லை. இதைப் பெருதவர்கள், அறிவைப் பெருதவர்கள். இதுவே கடவுள், நாம் வணங்குவோம்'' என்று சொன்னதும் கண்ணுடியைப் பார்த்தேன். பாதிரி சொன்னது, முற்றிலும் சரியாக இருந்தது.

ஒரு காரியம் சொல்கிறேன்.. அதனுல் ஒரு எதுவும் கெட்டுப்போகாது. அந்தஞானக் கண்ணுடியை, ஒரு நாள் பிரயாணம் செய்யக்கூடிய தொலைவில் ஒரு பள்ளத்தாக்கில் புதைத்துள்ளேன். இந்த ஏழை மட்டும் பழையபடி உன்னுடம்பில் புகுந்து கொண்டால், உலகத்து அறிஞர்களைவிட, நீ பெரிய அறிவாளியாக இருப்பாய். அறிவே உனது பொக்கிஷமாக இருக்கும். என்னேடு ஐக்கியமாகி விடு. உன்னைப்போல புத்திசாலி யாரும் இல்லை.

* * *

இதுகேட்ட செம்படவ இளைஞன் சிரித்து ''காதல், அறிவைவிட உயர்ந்தது. அந்த கடல் கன்னி என்னைக் காதலிக்கிருள்'' என்ருன்.

'' இல்லவே யில்லை. அறிவுக்கு மேலானது எதுவும் இல்லை.''

"காதல் உயர்வானது" என்று சொல்லியவன் கடலிற்குள் பாய்ந்தான். அவனது ஆத்மா அழுதுகொண்டே, சதுப்பு நிலத்திலே போய்க் கொண்டிருந்தது.

இரண்டாம் வருஷம் முடிந்தது. அந்த ஆத்மா கடற்கரைக்கு வந்து, வாலிப செம்படவனைக் கூப்பிட, "ஏன்? நீ கூப்பிட்டாய்?" என்று அடிக் கடலிலிருந்து வந்தான்.

"என்னருகே வா. அதியற்புதமாக காரியங்களை நான் அனுபவித்திருப்பதால், கிட்டே வா சொல்லுகிறேன்" என்றது.

அதன் அருகே வந்து குறைவான ஆழத்தில் கரையோரமாக நீட்டி நிமிர்ந்து கையில் தலை வைத்துச் சாய்ந்தபடியே சொல்வதைக் கேட்க ஆரம்பித்தான்.

* * *

உன்னை விட்டுச் சென்றதும் தெற்குப் புறமாக என் பிரயாணம் தொடங்கிற்று. செல்வத்தின் உறைவிடம் தென் திசை. ஆறுநாள் பிரயாணம்

முடிந்து ஏழாம் நாள் ஆஷ்டர் நகரை அடைந்தோம். சிவப்பு வர்ணம் வாய்ந்த அந்த ரஸ்தாவிலே, யாத்திரிகர்களுடன் போன நான், ஏழாம் நாள் கண்ணைத் திறந்தால் காலடியில் அந்நகரம். அது ஒரு பள்ளத் தாக்கில் இருக்கும் நகரம்.

ஒன்பது வாசல்கள் அந்நகரத்திற்கு. ஒவ்வொரு வாசலிலும் வெண்கலக் குதிரைகள், நாடோடி அராபியர்கள் மலையிலிருந்து வரும் போது அவை கனைத்து வழிவிடும். அவர்களுக்குச் செம்புத் தகடு பொருத்தப் பட்டிருக்க, காவல் கூண்டுகளில், பித்தளைத் தகடுகள் பொருத்தப் பட்டிருந்தன. ஒவ்வொரு கூண்டிலும் வில்லாளி, வில்லோடு நிற்பான். உதயகாலத்தில், அம்பு கொண்டு சேமக் கலத்தில் அடிப்பான், மாலையிலே கொம்பு கொண்டு ஊதுவான் அவ் வில்லாளி.

நான் கோட்டை வாசலுக்குள் நுழைய எத்தனித்தபோது நான் யாரென்று கேட்டனர். நான் மெக்காவிற்குப் போகும் ஒரு ஹசரத் (மகமதிய பக்தன்) என்றும், அங்கே தேவதூதர்கள் கைப்பட வெள்ளியால் பொறிக்கப் பட்ட குரான் (மகமதிய வேத நூல்) இருக்கிறது என்றும் சொல்லவே ஆச்சரியத்தோடு எனக்கு வழிவிட்டனர்.

அந்நகருக்குள்ளே ஒரு பஜார் மாதிரியே இருந்தது. செம்படவா, நீ மட்டும் என்னோடு இருந்திருக்க வேண்டும். வர்ணப் பேப்பர் சுற்றித் தொங்கிய விளக்குகள், குறுகிய தெரு வீதியிலே, வண்ணாத்திப்

பூச்சிப்போல சிறகடித்துக் கொண்டிருந்தன. வர்ணம் தீட்டிய ரஸக்குண்டுகள் காற்றிலே ஊசலாடுவது போன்று கூரைகளிலே ஒளிர்கின்ற விளக்குகள் காற்றடிக்கும்போது ஊசலாடும். குத்திட்டு நிற்கும் கரிய நிறத்தாடி, தங்கநிறம் ஜொலிக்கும் குல்லாயுடன் சில்க்கு ஜமுக்காளத்தில் அந்நகர் வியாபாரிகள் இருந்தனர். நீண்ட அம்பர் கட்டிகளும் சிவந்த பர்சிய கோவைப் பழங்கள் போன்ற கற்களும் அவர்கள் கையிலே புரண்டோடின. இந்திய சமுத்திரத்திலிருந்து அருமை அருமையான வாசனைத் திரவியங்கள், அத்தர், வெள்ளைப் போளம்—முதலானதை விற்றனர். யாராவது பேசுவதற்கு நின்றால், கணப்புச் சட்டியிலே சாம்பிராணியைத் தூவி, எங்கும் சுகந்தம் பரப்புவார்கள். சிரியா நாட்டான் ஒருவன், கையிலே தீச் சட்டியும், ஊதுகுழலுமாக தெருவீதியில் போய்க் கொண்டிருக்கிறான். சாம்பல் வர்ண ரேகை, கரிப்புகையிலிருந்து மிதக்க, வாசனையோ வாதுமை பருப்பின் சுவையை நினைப்பூட்டியது. வெண்ணிற கற்கள் பதித்த வெள்ளிக் காப்புக்கள். செப்புக் கம்பிகளில் கோக்கப் பட்ட முத்துக்களாலான காற்சதங்கைகள், புலி,பூனை, சிறுத்தை முதலான கூரியநகங்களை தங்கத்திற் பதித்த காலணிகள், ஒளி கக்கும் மரகத பச்சைக் கற்களில் கடுக்கன்கள், ஆழப்பட முகப் புள்ள மோதிரங்கள் இன்னோரன்ன பொருள்களை இவர்கள் விற்றனர். சாயாக் கடைகளிலிருந்து சாரங்கியின் இன்னிசை மிதக்க, அபினி தின்ற

வர்கள், போவோர் வருவோரை சிரித்துப் பார்த்த படியே இருக்கின்றார்கள்.

உண்மையாகச் சொல்லுகிறேன். நீ என்னோடு இருந்திருக்க வேண்டும். திராக்ஷை மது விற்போர், கரிய சால்வையைத் தோளில் போட்டபடியே கூட்டத்தை நெக்கித் தள்ளிச் செல்கிறார்கள். தேனைப் போன்ற அந்த ஷிராஸ் மதுவையே விற்கிறார்கள். சிறிய உலோக கிண்ணங்களில் மது வார்த்து, ரோஜா இலைகளைத் தூவுகிறார்கள். மார்க்கட்டில், பழ வியாபாரிகளும் இருக்கிறார்கள். எந்தெந்த வகைப் பழங்களும் அங்கு கிடைக்கும். பழுத்த இறைச்சிபோல் சிவந்த அத்திப்பழங்கள், புஷ்ப ராகம் போல் மஞ்சள் வர்ணங்கொண்ட கஸ்தூரி வாசனை தாங்கிய முலாம்பழங்கள், சிவந்த பொன்னிற ஆரஞ்சுப் பழங்கள், முட்டை வடிவான பசுமை வாய்ந்த எலுமிச்சம்பழங்கள்.

தெருவிலே ஒரு யானை போய்க்கொண்டிருந்தது. அதன் துதிக்கையில் மஞ்சளாலும் ஜாதிலிங்கத்தாலும் வர்ணந்தீட்டியிருந்தனர். சில்க்கு வலையை அதன் காதிலே தொங்கவிட்டிருந்தார்கள். பழக்கடைக்கு எதிரே நின்று யானை ஆரஞ்சைத் தின்ன ஆரம்பித்தபோது, கடைக்காரன் சிரிக்கத்தான் செய்தான். எவ்வளவு விநோதமான மனப்பான்மை இவர்களுக்கு. அவர்களுக்கு ஆனந்தம் பொங்கிவிட்டால், பட்சி ஜாலங்களை கூண்டிலே அடைத்து விற்பவனிடம், கூண்டுப்

பறவை ஒன்றை விலைக்கு வாங்கி, அப்பறவைக்கு விடுதலை கொடுத்து, அந்த ஆனந்தத்தை அதிகப் படியாக அனுபவிப்பார்கள். துக்கம் மேலிட்டால், தம் துக்கம் தணிந்துவிடாமலிருக்க முட்களால் தம் மைக்குத்தி, துக்கத்தை அதிகமாக அனுபவிப்பார் கள். இந்த உணர்ச்சிச் சுழிப்பிலே திளைக்கும் நகர மாந்தர்.

ஒரு நாள் இந்த பஜார் வழியாக, டால்வீசும் மூங்கிலிலே வேலைப்பாடுகளும், ஜாதிலிங்க கழியி னால் ஆன தூண்களும், வெண்கலத்தால் செய்த மயில்களும் சேர்ந்து இலங்கிய ஒரு பல்லக்கை நீக் கிரோவர்கள் தூக்கிச் சென்றார்கள். பல்லக்கின் சாளரத்தில், மெல்லிய மஸ்லின் திரை. திரையிலே வெட்டிக் கிளியின் இறக்கை போன்ற வேலைப்பாடு. என்னைக் கடந்து போனபோது அதற்குள்ளிருந்த சர்க்கேஷிய நாட்டுப் பெண் புன்னகை பூத்தாள். பின்தொடர்ந்தேன். தொடர்வதைக் கண்ட பல் லக்குப் போகிகள் திட்டியபடியே விரைவாக நடந்த னர். நான் அதை அலக்ஷியம் செய்தபடி ஆவ லோடு அவர்களைப் பின் தொடர்ந்தேன்.

ஒருமட்டும் பல்லக்கு வெள்ளை நிற வீட்டின் முன் நின்றது. அவ்வீட்டிற்கு ஜன்னலே கிடையாது. ஒரு சிறிய கதவு. அதுவும் சமாதியறைக் கதவு போல. பல்லக்கை இறக்கி வைத்தவர்கள் மும் முறை செப்புச் சுத்தியால் தட்டினார்கள். ஆர்மினிய நாட்டினன் ஒருவன் வெளிக் கதவைத் திறந்து அவர்களைப் பார்த்தான். ஒரு கம்பளத்தை எடுத்

துப் பல்லக்கு அடியிலே விரிக்க, அவள் வெளியே வந்தாள். உள்ளே போகும்போதே திரும்பி என்னை நோக்கிப் புன்னகை புரிந்தாள். அந்த சர்கேஷியப் பெண்கள், அழகுக்குப் பேர்போன வர்கள் ஆயிற்றே. இவள் மாதிரி வெளுத்து சோபை குன்றியவளை நான் பார்த்ததே கிடை யாது.

நிலா உதயம் ஆனதும், அதே இடத்திற்குப் போய் அந்த வீட்டைத் தேடினேன். அங்கே வீடு இல்லை. இதை அறிந்ததும் அந்தப் பெண் யாரென்றும், ஏன் என்னைப் பார்த்துச் சிரித்தாள் என்றும் புரிந்து கொண்டேன்.

அடடா, நீ என்னோடு இருந்திருக்க வேண்டும். பௌர்ணமி தினத்தன்று, இளவரசர் தன் அரண் மனையிலிருந்து, மசூதிக்குத் தொழப் போனார். அவ ரது தலை ரோமமும் தாடியும் ரோஜா இலைகளி னல் சாயம் ஏற்றி, கன்னங்களிலே பொன் பொடி தூவியும் இருந்தது. பாதங்களும், உள்ளங் கை களும் குங்குமப் பூவினல் மஞ்சள் வர்ணம் ஏறி ஒளி வீசின.

சூரியோதயம் ஆனதும், வெள்ளி நிறச் சால்வை போர்த்து வெளியே செல்பவர் அஸ்த மன நேரத்தில் தங்கநிற சால்வை அணிந்து அரண் மனைக்குள் வருவார். பிரஜைகள், வீழ்ந்து வணங்கி முகத்தை கையால் பொத்திக்கொள்ள, நானே அப்படிச் செய்யாது, பேரீச்சம்பழக்காரன் கடை

யிலே நின்றுகொண்டிருந்தேன். என்னைப் பார்த்த இளவரசர் மேலே போகாது வர்ணந் தீட்டிய கண்களால் பார்த்தவர் நின்றார். நான் அவருக்கு வழி படாது நிற்கிறேன். என் துணிச்சலை, ஜனத்திரள் பாராட்டிய போதிலும் அந்நகரை விட்டு ஓடும்படி புத்தி புகட்டிற்று. அங்கே, பற்பல விக்கிரகங்களை விற்றுக் கொண்டிருந்த வியாபாரிகள் கடைக்குச் சென்று நடந்ததைக் கூற, அவர்கள் ஆளுக்கொரு கடவுள் விக்கிரகத்தைக் கொடுத்து அங்கிருந்து நழுவும்படி வேண்டினார்கள். அவ்வளவு பயம்.

ட கடையில் ஒரு மெத்தையிலே அன்றிரவு நான் சயனித்திருந்தேன். அக்கடை மாதுளை மரத் தெருவில் இருக்கிறது. இளவரசரின் மெய்க்காவலர்கள் வந்து, அரண்மனைக்கு என்னை நடத்திப் போனார்கள். அரண்மனை யடைந்ததும் இரு கதவுகளையும் சாத்தியபடி பின் தங்கினார்கள். அக்கதவுகளை இணைத்துச் சங்கலியும் போடப்பட்டது. உட்புறம் ராஜசபையும், சுற்றி காலரி அமைப்பும் தெரிந்தன. தர்பாரில் சுவர்களுக்குச் சந்திர காந்த மயமான வெண் கற்களின் பூச்சு, அதிலே நீலமும் பச்சையுமான ஓடுகள் பதிக்கப்பட்டிருந்தன. பச்சை வர்ண சலவைக் கற்களில் தூண்கள். சிவந்து அலர்ந்த மலர்போன்ற சலவைக் கற்களில் தள வரிசை. இம்மாதிரி எதையும் இதற்கு முன் பார்த்தது இல்லை.

மேல் மாடத்திலிருந்து இருபெண்கள் தர்பாரில் நிற்கிற என்னைப் பார்த்து திட்டினார்கள். பளபளக்கும் தரையிலே ஈட்டி முனையின் கண் உராயும் சப்தம், காவலர் வருகையை அறிவித்தது. வந்தவர்கள் தந்தத்தால் ஆன மாளிகைக் கதவைத் திறக்க, ஏழடுக்கு மாளிகையின் தண்ணீர் நிறைந்த தோட்டத்தில் நிற்கிறேன். தோட்டத்திலே, பூவரசு, சந்திரகாந்த புஷ்பங்கள், வெள்ளி நிற இதழ்கள் நிறைந்த மலர்ச் செடிகள், முதலானவை பயிரிட்டிருந்தன. நீர்க்குழாய் ஒன்று நாணல்போல ஆகாயத்திலே பளிங்காகத் தொங்கிக்கொண்டிருந்தது. கருகிய தீவட்டிபோன்ற (சைபிரஸ்) புன்கு மரங்கள் நிற்கின்றன. அம்மரத்திலே, குயில் கீதம் இசைக்கிறது.

அத்தோட்டத்தின் கோடியில் ஒரு சிறு கூடாரம், நாங்கள் அதை நெருங்கியபோது இரு அலிகள் எதிர்கொண்டழைத்தனர். பருத்த உடம்பு அசைந்தாட நடந்துவந்து மஞ்சள் வர்ணக் கண்களால் என்னைப் பார்க்கிறார்கள். இருவரில் ஒருவன் அவர்கள் தலைவன் முன்னே, என்னை நிறுத்தி தான் பின்வாங்கினான். மற்றவன் வாசனை கலந்த எனமல் பெட்டியிலிருந்து எடுத்த ஊதுவத்தியை வாயினால் சுவைத்தபடியே இருந்தான்.

சில நிமிஷங்களுக்குப் பிறகு சிப்பாய்களுடன் என்னை அவ்விடமிருந்து அனுப்பினான். அந்தசிப்பாய்கள் அரண்மனைக்குப் போகும்போது, இரு அலிகளும், மரங்களின் கனிகளை வேட்டையாடி.

னர். அவர்களில் மூத்த பயல் என்னைப் பார்த்து விஷமத்தனமாக புன்னகை செய்தான்.

தலைமை மெய்க்காவலாளிகள் என்னை அக் கூடாரத்தின் பக்கமாக தள்ளிச் சென்றான். நான் நடுங்காமல் நடந்து போய் தொங்கிய திரையை ஒதுக்கிச் சென்றேன்.

இளவரசர் சிங்கத்தோலிலே நீட்டிக் கிடந் தார். இடுப்பைச் சுற்றியபடி பீரங்கி ஒன்று தொங்கிக்கொண்டிருந்தது. வெண்கல முண்டாசு கட்டிய நுபிநாட்டன் ஒருவன் தனது திண்டோளை மூடாது காதுகளிலே கனத்த குண்டலங்கள் அணிந்து நின்றான். உருக்கிலே வார்த்த பிரம் மாண்டமான பட்டாக்கத்தி ஒன்று மேஜைமீது இளவரசர் அருகே இருந்தது.

என்னைக் கண்ட சக்கரவர்த்தி நெற்றியைச் சுளித்தபடி "உன் பேர் என்னடா? நான் இந் நகர சக்கரவர்த்தி என்பதை அறியாயோ?" என்று கத்தினார். நான் பதில் சொல்லவில்லை.

கையால் அப்பட்டாக் கத்தியை அம் மூர்க்க னுக்குச் சுட்டவே, அவன் அதை எடுத்தான். என்னை நோக்கி ஓடிவந்து பலங்கொண்டமட்டும் தாக்கினான். என்னை ஊடுருவி ஒய்யென்று சப்தித் தது. எனக்கு ஒரு காயமும் இல்லை. அம் முரடன் தரையில் காலைப் பரப்பி விழுந்தவன் உடல் கிடு கிடுக்க எழுந்து மூதி தாங்காமல் அந்த மஞ்சத் திற்குப் பின் பதுங்கிக்கொண்டான்.

சக்கரவர்த்தி எழுந்து, அங்கே கோக்கப்பட்டிருந்த தளவாடங்களிலிருந்து ஒருஈட்டியை உருவி, என்மேல் பாய்ச்சினார். பாய்ந்துவந்த ஈட்டியைப் பிடித்து நிறுத்தி இரண்டாக உடைத்தேன். என்மீது ஒரு அம்பு எய்தார். சமிக்ஞை செய்து அந்தரத்தில் அதை நிற்க வைத்தேன். வெள்ளை நிறத் தோலினாலான பெல்டிலிருந்து ஒரு குத்து வாளை உருவி, தமது தோல்வியைப் பிறரிடம் பறை சாற்றாதிருக்க அந்த முரடனின் கழுத்தை வெட்டினார். பாம்பு போல துடிதுடித்து நெளிந்த அம்முரடன் வாயிலிருந்து செந்நுரையாகக் கக்கினான்.

என் பக்கம் திரும்பிய இளவரசர் முத்துப் போல் ஒளிரும் வேர்வைத் துளிகளை ஒரு மெல்லிய கைக்குட்டையில் துடைத்தபடியே, "நீர் ஒரு நபிநாயகமானால் உம்மை இம்சை செய்ய முடியாது. அல்லது நபிநாயகத்தின் குமாரனாக இருந்தாலும் ஹிம்சிக்க முடியாது. இந்த நகரத்தை விட்டு இன்றிரவே போய்விடுங்கள். தாங்கள் இருக்கும் வரை நான் இந் நகரத்தின் சக்கரவர்த்தி அல்ல" என்றார்.

"உன் செல்வத்தில் பாதியை எனக்குக் கொடு. உன் செல்வத்தில் பாதியை எனக் கொடுத்தால் நான் போய்விடுவேன்."

கைபிடித்து என்னை அந்த அரண்மனைப் பூங்காவிற்குள் அழைத்தார் சக்கரவர்த்தி. என்னை

உயிரோடு பார்த்ததும், தலைமைக் காவலாளி ஆச்சரியப்பட்டான்; அந்த அலிகள் தொடை நடுங்கிய படியே பயத்தினால் பூமியில் விழுந்தனர்.

அந்த அரண்மனையில் சிவப்பிலே பலவர்ணங்கள் இழையும் எட்டுச் சுவருள்ள ஓர் அறை உண்டு. வெண்கலம் பாவிய முகட்டிலே, தொங்கும் ஸ்படிக விளக்குகள் எரிந்தன. சக்கரவர்த்தி ஒரு சுவரைத் தொடவே, அது திறந்து தீவர்த்திகள் எரிந்து கொண்டிருந்த ஒரு நீண்ட நடைபாதை வழியே சென்றோம். இருபக்கங்களிலுமுள்ள மாடங்களில் பெரிது பெரிதான மதுஜாடிகளில் வெள்ளிக் கட்டிகள் கிடந்தன. அந்தப் பாதை நடுவே போனதும் நாவு கூசும் வார்த்தை சொல்லி, கண்களைப் பொத்திக் கொண்டார். உடனே தந்திரமாக ஒரு பொறிக் கதவு திறக்கப்பட்டது.

நீ நம்பவே மாட்டாய். எவ்வளவு அதிசயமான இடம் அது. அகண்ட ஆமையோட்டிலே நிறைய முத்துக்கள். பெரிது பெரிதான சிவப்பு மரகத கற்கள், சந்திரகாந்தக் கற்களோடு பரவிக்கிடந்தன. யானைத் தோல் பெட்டிகளிலே வெள்ளிக் கட்டிகள். சாதாரண தோல் பாட்டில்களிலே தங்கத்தூள், பாட்டில் பாட்டிலாக இருந்தன. பச்சை கற்களும், கோமேதகக் கற்களும் பளிங்கு கிண்ணங்களிலும் பளிக்குப் பாத்திரங்களிலும் கிடந்து ஒளி வீசின. அங்கே கிடந்த சில்க்கு பைகளில் ஒரு சிலவற்றில் வைரங்களும், இன்னும் சில பைக

ளில் வைடூரியங்களும் கிடக்கின்றன. தந்தக் கொம்புகளில் பன்னிற சிவப்புக் கற்கள் பதிக்கப் பட்டும், வெண்கல கொம்புகளில் வைரங்களும் பளிங்குகளும் குவிந்திருந்தன. மஞ்சள் நிற வைரக் கற்களால் பொதிந்து விளங்கும் தூண்கள். தட்டை வடிவான பாத்திரங்களுக்குள், மதுவர்ண நிறத்தி லும், பசும் புல் நிறத்திலும் மாணிக்கக் குவியல்கள். அங்கிருந்த குவியல்களில் பத்திலொரு பங்கு கூட நான் உனக்குச் சொல்லவில்லை.

முகத்தை மறைத்து கையை எடுத்துவிட்டு என்னிடம் சக்கரவர்த்தி சொன்னார். "செல்வம் கொழிக்கும் என் வீடு இதுவே. இதிற் பாதி உனதே. நான் வாக்களித்து விட்டேன். ஒட்டகங் களும் ஒட்டகை ஓட்டிகளும் தருகிறேன். உமது பங்கைச் சுமந்தபடியே உலகத்தின் எந்த பாகத் திற்காலும் சரி, உமது ஆணையை நிறைவேற்றி இச்செல்வத்தைக் கொண்டு தருவார்கள். இன்றி ரவே இது நடந்தாக வேண்டும். என் தந்தை சூரி யன் என் கைப்பட கொல்ல முடியாத ஒருவனுக் குச் இச் செல்வத்தை கொடுக்கிறேன் என்பதை சூரியன் காணக்கூடாது" என்பதாக.

நான் சொன்னேன், "இங்குள்ளவை உன் னுடையவை. வெள்ளியும் உனது பொருளே. மாணிக்கங்கள், நகைகள் எல்லாம் உன் பொருளே. என்னைப் பொறுத்த வரையில் எனக்கு ஒன்றும் தேவையில்லை. உன்னிடமிருந்து பெற்றுக்கொள்

ளும் ஆவலும் இல்லை. இருப்பினும் உன் விரலிலுள்ள மோதிரத்தைமட்டும் நீ கொடுக்க முடியுமா?'' என்றதும் அவர் புருவத்தைச் சுளித்தார்.

" இது கேவலம், ஈயத்தால் செய்தது. இதற்கு மதிப்பும் கிடையாது. பாதி செல்வத்தை எடுத்துக் கொண்டு, இந் நகரைவிட்டு ஓடவும்.''

"முடியாது. ஏனென்றால் அந்த ஈய மோதிரத்திலே என்ன எழுதியிருக்கிறது. ஏன் எழுதியிருக்கிறது என்பதை, நான் அறிவேன்'' என்றேன்.

சக்கரவர்த்தி ஆடிப்போனார். " எல்லா ஐசுவரியங்களும் உங்களுடையது. எடுத்துக்கொண்டு போகலாம். எனக்குரிய பாதிச் செல்வமும் தங்களுடையதே'' என்றார்.

நான் ஒரு அபூர்வ வேலை செய்தேன். அதனால் என்ன லாபம் இருக்கிறதோ? இங்கிருந்து அந்தக் குகை ஒருநாள் வழியே இருக்கிறது. குகையிலே அந்த ஐசுவரியக் கணையாழியை மறைத்து வைத்துள்ளேன். இங்கிருந்து ஒருநாள் பிரயாணம் செய்தால் போதும். அக் கணையாழி உனக்காக கிடக்கிறது. வந்து அந்தக் கணையாழியை எடுத்துக்கொள். உலகத்தின் ஐசுவரியம் எல்லாம் உனதே ஆகும்.

* * *

ஆனால் அந்த வாலிப செம்படவன் நகைத்து "காதல், ஐசுவரியத்தை விட உயர்வானது. கடல் கன்னி என்னைக் காதலிக்கிறாள்'' என்றான்.

'ஐசுவரியத்தை விட எதுவும் உயர்வானது அல்ல.'

'காதல் தெய்வீகமானது' என்று சொல்லியவாறு செம்படவன் ஆழ்கடலுக்குள் அமிழ்ந்தான். அழுது கொண்டே சதுப்பு நிலத்தின் வழியாக ஆத்மா சென்றது.

மூன்றும் வருஷமும் முடிவுற்றது. அந்த ஆத்மா கடற்கரைக்கு வந்து, செம்படவனைக் கூப்பிடவே அவனும் ஆழ்கடலிலிருந்து வந்தவன், 'என்னைக் கூப்பிட்ட காரணம் என்ன?' என்றான்.

'அருகே வா. உன்னோடு பேசலாம். எவ்வளவோ அற்புதங்களைப் பார்த்துள்ளேன்' என்றது ஆத்மா.

அவன் அருகே வந்து, குறைவான ஆழத்தில் நீட்டி நிமிர்ந்து கையில் தலை வைத்து சாய்ந்தபடி கேட்கலுற்றான்.

*  *  *

ஒரு நகரத்தில், ஆற்றோரமாக உள்ள சாவடி ஒன்றிலே மாலுமிகளுடன் பார்லி ரொட்டியும், வாகை இலையிலே மீன் துண்டங்களும் வைத்து, காடியுடன் உண்டு, பல நிறம் கொண்ட மதுவை அருந்

திக் கொண்டிருந்தோம். இம் மாதிரி நாங்கள் உல்லாசமாய் இருக்க, கிழவன் ஒருவன் தோல் சமுக்காளத்துடன் வந்தான். இரு கொம்புகளில் அம்பர் திணித்திருந்த யாழ் ஒன்று அவன் கையில் இருந்தது. அந்த தோல் சமுக்காளத்தை விரித்து, ஒரு இறகினுல் யாழ் நரம்புகளை மீட்டவும், முக மூடியுடன் கன்னி ஒருத்தி எழுந்து எங்கள் முன் நடனமாட ஆரம்பித்தாள். சல்லாச் சேலையை முக மூடியாய்ப் போட்டவள் கால்களைப் போர்த்த வில்லை. வெண் புருப் போன்ற அவள் பாதங்கள், சமுக்காளத்திலே ஓடியாடிக் கொண்டிருந்தன. இது போன்ற ஓர் அற்புதத்தை நான் கண்டதில்லை. நான் சொல்லுகிற அவள் நடனமாடும் அந்நகரம், இங்கிருந்து ஒரு நாள் பிரயாணம் செய்யும் தூரத்திலே உள்ளது.

*　　　　*　　　　*

இவ்வாறு ஆத்மா சொன்னதும் கடல் கன்னிக்குப் பாதங்கள் இல்லாததும், அவளால் நடனமாட முடியாததும் நினைப்பில் எழுந்தது. பேராசை அவன் மனதில் தோன்றவே, 'இங்கிருந்து ஒரு நாள் வழிதானே. பிறகு திரும்பி விட்டால் போகிறது என்றபடியே சிரித்தான் செம்படவன். முட்டளவு ஜலத்திலே எழுந்து நின்று, கரையை நோக்கி வந்தான்.

மணற் பரப்பை அடைந்ததும், மீண்டும் சிரித்தான். ஆத்மாவை நோக்கி கை நீட்டினுன். ஓடியே

வந்தது சந்தோஷம் தாங்காது. இன்பத்தில் ஆழ்ந்தபடி ஆனந்தக் கண்ணீர் வடித்த ஆத்மா அவனைச் சந்தித்தது. அவனுக்குள்ளாகவே ஐக்கிய மாகி விட்டது. செம்படவ இளைஞன், தன்னிழல்—அதாவது தன் ஆத்மா—தனது காலடியில் தெரிவதைக் கண்டான்.

அவனது ஆத்மா, 'தாமதம் வேண்டாம் வா, உடனே போகலாம். கடல் தெய்வங்கள் பொறுமை பிடித்தவை. அத் தெய்வங்கள் வேண்டுதலை நிறை வேற்ற பொல்லாத கடல் அரக்கர்கள் வேறு இருக் கின்றார்கள்' என்று அவசரப் படுத்தியது.

அவர்கள் விரைவாக இரவு முழுவதும் நில விலே பிரயாணம் செய்தனர். பகற் பொழுதில் சூரியன் அடையும் வரை பிரயாணம் செய்தனர். அஸ்தமன சமயத்தில் ஒரு நகரத்திற்குள் வந் தார்கள்.

"நீ என்னிடம் சொன்னாயே, அந்த நடனப் பெண், இந்த நகரத்தில் தானா இருக்கிறாள்!" என்றான் செம்படவன்.

'இந்த நகரம் இல்லை. அது வேறொரு நகரம். இருந்தாலும் இங்கு போகலாம்.'

தெரு வழியே இவர்கள் போய்க் கொண்டிருந் தனர். கடை வீதியிலே, நகைக் கடைகள் ஏராள மாக இருக்க, செம்படவன் கண்ணில் ஒரு வெள்ளிக் கிண்ணம் பட்டது. அவனது ஆத்மா, 'அந்த

வெள்ளிக் கிண்ணத்தை எடுத்து மறைத்துக்கொள்' என்றது.

அப்படியே வெள்ளிக் கிண்ணத்தை எடுத்து கோட்டுக்குள் மறைத்தான். உடனே அந்நகரத்தை விட்டு வெளியேறினர்.

காத தூரம் சென்றதும் முகத்தைச் சுளித்து, 'சை. இந்தக் கிண்ணத்தை ஏன் திருடி ஒளிக்கச் சொன்னாய்? இது மகா பாவமான காரியமல்லவா?' என்றான்.

"கோபம் வேண்டாம். சாந்தமாக இரு" என்றது ஆத்மா.

இரண்டாம் நாள், இன்னொரு நகரத்தை அடைந்தனர். செம்படவன், 'இந்த நகரத்தில் தானா, நீ சொன்னாயே, அந்த நடனக் காரி இருக்கிறாள்?' என்று ஆத்மாவிடம் கேட்டான்.

"இதுவல்ல, அது வேறொரு நகரம். இருந்தாலும் உள்ளே போகலாம் வா."

அதனுள்ளே நுழைந்து தெருவழியாகப் போய்க் கொண்டிருந்தனர். செருப்புக் கடைகள் அவ்வீதியில் ஏராளமாக இருக்க, தண்ணீர் ஜாடி ஒன்றின் அருகே, ஒரு குழந்தை நிற்பதைக் கண்டான். "அக்குழந்தையை உதை" என்றதும் அக்குழந்தையை அழ அழ அடித்துவிட்டு, இருவரும் அந்நகரை விட்டு வெளியே வந்தனர்.

காத தூரம் அந்நகரிலிருந்து வந்ததும் "அக்குழந்தையை ஏன் உதைக்கச் சொன்னாய்! அது

பாபமான காரியம் ஆயிற்றே." என்றான் செம்பட வன்.

"கோபம் வேண்டாம். சாந்தமாக இரு" என்றது ஆத்மா.

மூன்றும் நாள் மாலை வேளையில், இன்னொரு நகரை அடைந்தனர். "இதுதானா, நீ சொன்ன அந்த நடனமாடும் நங்கையின் நகரம்?" என்று கேட்டான் செம்படவன்.

"ஒருவேளை இதுவாகவே இருக்கலாம். இங்கே தான் நடனம் நடந்தது. உள்ளே போகலாம் வா" என்றது ஆத்மா"

நகருக்குள் வீதி வழியே போய்க்கொண்டிருந் தனர். நதிக்கரை ஓரமாக சாவடியைக் காணவே யில்லை. அந்நகர மக்கள், வியப்போடு அவனைப் பார்த்தனர். அவனோ பயந்து "நாம் இங்கிருந்து போகலாம். வெண்ணிறப் பாதத்தோடு ஆடும் அந் நாட்டியக்காரி இந்நகரத்தில் இருக்க மாட்டாள்" என்றான் தன் ஆத்மாவிடம்.

"கூடாது, இங்கேயே இரவில் தங்கலாம். இரவு நேரமாகையால், கொள்ளைக்காரர்கள் வழி யிலே இருப்பார்கள்" என்றது ஆத்மா.

அந்த மார்க்கெட்டிலேயே தங்கினான் செம்பட வன். தார்த்தாரிய நாட்டு முரட்டு துணிமணியில் சட்டை தொப்பி அணிந்த ஓர் வியாபாரி, அவ் வழியே வந்தவன் "இங்கே ஏன் மார்க்கெட்டில்

உட்கார்ந்திருக்கிருய்? கடைகள் சாத்திவிட்டார் களே" என்ருன்.

"நான் தங்குவதற்கு இந்த ஊரிலே ஒரு சாவடியைக்கூடக் காணேம். இந்நகரத்தில் எனக்குப் பந்துக்கள் யாரும் இல்லை" என்ருன் செம்படவன்.

"நாமெல்லாம் ஓர் இனந்தானே. கடவுள் நம்மை அப்படித்தானே படைத்தார். என்னேடு வா. என் வீட்டிலே விருந்தினர் விடுதி இருக்கிறது" என்ருன்.

அவ்வியாபாரி வீட்டிற்குப் பின் தொடர்ந்தான் செம்படவன். மாதுளை மரங்கள் நிறைந்த சோலையைக் கடந்து, பின்னர் வீட்டை அடைந்தான் செம்படவன். அந்த வியாபாரி, பன்னீரை செய்புப் பாத்திரத்தில் கொண்டுவந்து கைசுத்தம் செய்து கொள்ளச் சொன்னுன். செம்படவன் உண்ணுவதற்கு ஒரு பேலாவில் சாதமும் ஆட்டுக்குட்டியின் கறியும் கொடுத்து, தாகம் தீர முலாம் பழங்களும் வைத்தான்.

செம்படவன் உண்டபின்பு, தூங்குவதற்காக தன்னுடைய விருந்தினர் சயன மண்டபத்திற்கு வியாபாரி அழைத்துச் சென்ருன். நன்றியறிதலாக வியாபாரியின் மோதிரத்தை முத்தமிட்டு படுக்கச் சென்ருன். ஆட்டுக்கம்பளியில் பொத்தென செம்படவன் விழுந்தான். ஒரு கருப்புக் கம்பளியினுல் உடலை மூடியதும், அவன் தூங்கி விட்டான்.

விடிவதற்கு இன்னும் மூன்று மணி நேரம் இருக்கிறது. அந்த நாலாம் ஜாமவேளையில் ஆத்மா

அவனை உலுக்கி "எழுந்திரு. வியாபாரியின் சயன மண்டபத்திற்குப் போய் அவனைக் கொன்று விடு. அவனுடைய செல்வத்தை அபகரிக்க வேண்டும். ஏன? அது நமக்குத் தேவைப் படலாம்" என்றது ஆத்மா.

எழுந்த செம்படவன், நகர்ந்து அவ்வியாபாரியின் அறையை அடைந்து பார்க்க, காலடியில் ஒரு வளைந்த கொடுக்கு அரிவாளும், ஒன்பது பைகளில் தங்கமும் இருப்பது கண்ணில் பட்டன. அந்தக் கொடுக்கு அரிவாளை எடுத்தபோது, வியாபாரி விழித்து செம்படவன் கையைப் பிடித்துக்கொண்டு "நன்மைக்குப் பதில் தீமையா? நான் காட்டிய நன்றிக்கு, இரத்தம் சிந்துவதா உனது கைமாறு?" என்று கதறினன்.

"அவனை வெட்டு" என்று சொல்லிற்று ஆத்மா. வியாபாரியை தாக்கவே, மூர்ச்சை அடைந்தான். உடனே ஒன்பது பை தஙகத்தையும் எடுத்துக்கொண்டு மாதுளைச் சாலைவழியே ஓடினன் செம்படவன். அப்போது வெள்ளி விடி வெள்ளி உதயமாயிற்று.

அந்நகரத்திலிருந்து காத தூரம் சென்றதும், மார்பில் அடித்தபடியே "ஐயோ, ஏன் அந்த வியாபாரியைக் கொன்று, தங்கத்தை அபகரிக்கச் சொன்னய்" என்று கேட்டான்.

கோபப் படாதே. சாந்தமாக இரு" என்றது ஆத்மா.

" நானாவது சாந்தமாக இருக்கிறதாவது! நான் வெறுக்கின்ற செயல்களைச் செய்யச் சொன்னாய். உன்னையே வெறுக்கின்றேன். இம்மாதிரி என்னை ஆட்டி வைக்க எங்குதான் கற்றுக் கொண்டாய்?' எனக் கதறினான் செம்படவன்.

" நீ என்னை இந்த உலகத்திற்கு அனுப்பிய போது, இதயமின்றி என்னை அனுப்பினாய். இம் மாதிரி காரியாதிகள் செய்வதை நான் விரும்பி னேன். இக் காரியங்கள் எனக்கு வெகு பிரியம் தருகின்றன."

" என்னதான் சொல்கிறாய்?"

" உனக்குத் தெரியும். நீ நன்கு அறிவாய். எனக்கு இதயம் கொடுக்கவில்லை என்பதை, நீ மறந்துவிட்டாயா? நான் மறக்கவில்லை. நீயும் மனம் நொந்து கொள்ள வேண்டாம். என்னையும் தொந் தரவு செய்யாதே. நிம்மதியாக இரு. பிறருடைய துன்பத்தைக் காணவும் உன்னால் முடியாது, இன் பம் கொடுக்கவும் உன்னால் முடியாது."

இவ்வார்த்தைகளைச் செவியுற்றதும் நடுக்குற்று " ஐயோ, நீ துன்மார்க்கம் நிறைந்தாய். என் கர்த்தலை மறக்கச் செய்தாய். எனக்கு ஆசைகளை நினைப்பூட்டினாய். என் கைகளை பாபத்திலே அமிழ்த்திவிட்டாய்" என்று ஆத்மாவிடம் முறை யிட்டான்.

" இந்த உலகிற்கு என்னை அனுப்பியபோது இதயத்தைக் கொடுக்கவில்லை என்பதை நீ மறக்க

வில்லை! எல்லாம் சரி, அடுத்த நகரத்திற்குப் போவோம். அங்கே ஆனந்த மயமாய் இருக்க நம்மிடம் ஒன்பது பை தங்கம் இருக்கிறதல்லவா" என்றது.

ஒன்பது பை தங்கத்தையும் தூக்கி, பூமியில் ஓங்கியெறிந்து, அதன் மேல் நடந்தான்.

"முடியாது. உன்னோடு இருக்க முடியாது. உன்னுடன் பிரயாணமாக எங்கும் வர முடியாது. முன்பு அனுப்பிய அதே மாதிரி இப்போதும், உன்னை அனுப்புவேன். ஏனெனில் எனக்கு நீ செய்துவிட்ட நன்மை என்ன?" என்று கதறினன்.

இருந்தாலும், ஆத்மா அவனைக் கண்டு முன் போல் நடுக்குற வேண்டுமே. அது, அவன் ஆக்ஞையை மதிக்கவேயில்லை. "அந்த சூன்யக்காரியின் 'மருள்' உன் மீது இன்னும் இல்லை. நான் போக முடியாது. நீ என்னை விரட்டவும் முடியாது. தன் வாழ்வில் ஒருமுறை ஆத்மாவை அனுப்பிவிட்ட ஒருவன், அதைத் திரும்ப பெற்ருல், அப்படியே வைத்துக் காப்பாற்ற வேண்டும். இதுவே ஒருவனுக்குத் தண்டனை; இதுவே அவனுக்கு வெகுமதியும் ஆகும்."

கையைப் பிசைந்து முகம் வெளிற, "அவள் ஒரு போலி சூன்யக்காரி. என்னிடம் இந்த விஷயத்தை ஏன் சொல்லவில்லை" என்ருன் அழுதபடி.

அவள் வணங்கும் அவன், உண்மையான கடவுள். அவனுக்கு உண்மையான ஊழியம் செய்பவள்' அவளே.

தன் ஆத்மாவை இனி விரட்டிவிட முடியாது என்பதை அறிந்த செம்படவ இளைஞன் தன் ஆத்மாவை ஒரு கொடூர சக்தி வாய்ந்த ஆத்மா என்று தீர்மானித்தவன், தன்னோடு என்றும் அது இருக்குமென்பதை நினைத்து தரையில் படுத்து மனம் புழுங்கி அழத் தொடங்கினான்.

பொழுது புலர்ந்ததும் எழுந்து, தன் ஆத்மாவிடம் "உன் உத்திரவுகளுக்கு நான் கீழ்ப்படியாமல் கையைக் கயறு கொண்டு கட்டியபடி இருந்து விடுவேன். உன் வார்த்தைகளை பேசாது, உதடுகளை இறுக மூடி மௌனி ஆவேன். நான் காதலித்த அப் பெண் இருக்குமிடத்திற்குப் போகப் போகிறேன். அவள் வாழும் அந்த சமுத்திரத்திற்குச் செல்வேன். அவ்வளைகுடாவிற்குப் போய் கடல் கன்னியை அழைத்து, எனக்கிழைத்த தீமையைச் சொல்வேன். என்மீது நீ சுமத்திய பாபங்களையும் சொல்லுவேன்." என்று புலம்பினான்.

அவனது ஆத்மா ஆசை காட்டியவாறு அது யாரப்பா உனது காதலி? அவளிடம் நீ போக வேண்டுமா? அவளை விட உலகத்தில் அழகிகள் பலர் இருக்கிறார்கள். புள்ளினமும், விலங்கினமும் போல நடனமாடும் சாமரிய நாட்டுப் பெண்கள் இருக்கிறார்கள். அவர்கள் பாதங்களிலே செம்பஞ்சுக் குழம்புகளின் வர்ணரேகை படர்ந்திருக்கும். கைகளிலே, தாமிர மணிகள். உடல் விழி நடனம் செல்ல, இதழ்வழி சிரிப்புக் குலுங்கும். அச்சிரிப்பு, ஓடையின் களகளப்பு போல் இருக்கும். என்னோடு

வா, அவர்களை உனக்குக் காட்டுவேன். பாவங்களைப் பற்றிய வாதனை உனக்கு ஏன்? உண்பதற்கு உருசியாக இருப்பவை, உண்பவனுக்காக சிருஷ்டிக்கப் படவில்லை. குடிப்பதற்குரிய விஷம் எங்காவது தித்திப்பாக இருக்குமா? மனதை நீ அலட்டிக் கொள்ளாமல், என் பின்னால் வா. அடுத்த நகரம் செல்வோம். ரொம்பவும் சமீபத்திலே இருக்கிறது அந்நகரம். தோட்டங்களில் எங்கும் பூவரசு மரங்கள். அதிலே வெண்மயில்கள்—நீல நிற வயிறு கொண்டவை. அமைதியான இந்தத் தோட்டங்களில் மயில்கள் ஏராளம். சூரியனைக் கண்டு தோகை விரித்தால், தந்த விசிறி போல இருக்கும். தோகையில் பகட்டும் கண்களைச் சொல்லி முடியாது. வெண் மயில்களைப் பாதுகாக்கும் அப் பெண்மணி தன் சந்தோஷத்திற்காக நடனம் ஆடுவாள். சில சமயம் கைஊன்றியும், கால் ஊன்றியும் நடனம்செய்வாள். மை பூசிய கண்கள். தூக்கணம் குருவியின் இறக்கை போன்ற நாசி. அவள் நாசித் துவாரத்தில் ஒரு புல்லாக்குத் தொங்கும். அதிலே முத்திலிருந்து செதுக்கப் பட்ட மலரொன்று ஊசலாடுகிறது. நடனமாடும் போதே சிரிப்பாள். காலணிகள் எல்லாம் கலீர் கலீர் என வெள்ளி மணிபோல சப்த ஜாலம் புரியும். நீ மனத்தைப் புண்ணாக்காதே. என்பின்னால், இந்த நகரத்திற்கு வா" என்றது ஆத்மா.

ஆத்மாவிற்குப் பதில் சொல்லாது அச்செம்படவ இளைஞன் வாய்மூடி மௌனியாகி, கையை

வளைத்து இறுகக் கட்டிக்கொண்டு தான் புறப்பட்டு வந்த திக்கு நோக்கிப் போனான். ஏன், அவன் காதலி பாடுவாளே, அந்த வளைகுடாவை நோக்கிப் பிரயாணமானான். போகிற வழியில் எத்தனையோ முறை ஆத்மா ஆசை வார்த்தைகாட்டியும், அவனை பற்பல தீய செயல்களுக்கு ஆளாக்கியும் அச்செயல்களுக்கு உள்ளாகாமல், அவனுள்ளே இருந்த வலிமை பொருந்திய காதலானது அவனைக் காப்பாற்றிச் சென்றது.

கடற்கரையை அடைந்ததும் கட்டிய கயிற்றை பிரித்து கைவீசி மௌனத்தைக் கலைத்து, கடற்கன்னியை அழைத்தான். அவள் வரவில்லை. நாள் முழுதும் கூப்பிட்டும் அவள் வரக்காணோம்.

நையாண்டி செய்யும் தோரணையில் "உன் காதலியிடமிருந்து இந்த சந்தோஷந்தானா, இந்தப் பதில்தானா உனக்கு வரவேண்டும். சாகிற காலத்திலே உடைந்த பாத்திரத்தில் தண்ணீர் நிரப்புகிறவன் கதைபோல இருக்கிறது உன்விஷயம். உன்னிடமிருந்ததை நீ கொடுத்துவிட்டாய். உனக்கு அவள் எதுவும் கொடுக்கவில்லை. நீ என்னோடு வருவதில் அநுகூலங்கள் உண்டு. இன்பம் பெருகியோடும் பள்ளத்தாக்கு எங்கிருக்கிறது என்று எனக்குத் தெரியும். அங்கு இருக்கும் செல்வமும் நான் அறிவேன்" என்றது ஆத்மா.

ஆத்மாவிடம் பேசாது, மிலாறுகளைக்கொண்டு குடிசை ஒன்றை பாறையில் அமைத்து ஒரு வருஷ

காலம் வாழ்ந்து வந்தான். ஒவ்வொரு நாட்காலை யிலும் கடற் கன்னியை அழைப்பான். மத்தியானம் அவளைக் கூப்பிடுவான். இரவிலும் அவள் பெயரை உச்சரிப்பான். கடலுக்கடியிலிருந்து அவள் மேலே எழவில்லை. அவனைக் காண அவள் வரக்காணோம். கடலிலே எந்தப் பக்கத்திலும் அவள் தோற்ற மில்லை. குகைகளிலும், பச்சை நிற ஆழங்களிலும், கசங்களிலும் நீரிலும் அலையிலும் அவள் முகம் தோன்றவில்லை.

அவன் ஆத்மாவோ தீய செயல்களை காதிலே ஓதும். அவனை மீறி எதுவும் அந்த ஆத்மாவால் செய்ய முடியவில்லை. அவனது காதல் அவ்வளவு சக்தி வாய்ந்ததாக இருந்தது.

'ஒரு வருஷத்திற்கு அப்பால் என் எஜமானனை தீயவழிகளில் மயக்கினேன். அவரது காதல் என்னைவிட சக்தி நிறைந்தது. நன்மையான வழி களில் அவரை மயக்குவேன். அப்படியாவது என்வசம் ஆகின்றாரா பார்க்கலாம்' என்று நினைத் தது ஆத்மா.

இம்மாதிரி நினைத்து 'உலகத்தின் இன்பங் களை இதுவரை சொன்னேன். நீ செவிடனாக இருந்தாய். உன்னிடம் உலகத்தின் துன்பங்களைச் சொல்லுகிறேன். மனதாரக் கேள். ஏனெனில், துன்பமே கடவுள். துன்பமாகிய வலைக்குத் தப் பிய மனிதன் கிடையவே கிடையாது. உலகிலே, ஒரு கவளம் உணவிற்காக துன்பப்படுகிறவனும்

உண்டு. ஒரு முழ ஆடைக்காக அவதிப் படுகிற வனும் உண்டு. பீதாம்பரம் உடுத்திய விதவைகளும், கட்டக் கந்தையின்றி இருக்கும் விதவைகளும் உண்டு. இங்குமங்கும் வரண்ட நிலங்களில், குஷ்ட ரோகிகள்—அடேயப்பா அவர்களுக்குள் எவ்வளவு குரோதம், சண்டை போட்டுக்கொண்டிருக்கின்றனர். வீதியெங்கும் பிச்சைக்காரர்கள் வெறும் திருவோடு தாங்கிச் செல்கிறார்கள். பஞ்சம் தெருக்களிலே பவனிவர, பிளேக் நோய் வீடுகளில் குடியேறுகிறது. வா. நாம் போய் இதைச் சீர்திருத்தம் செய்யலாம். இருக்கும் துயரை இல்லாதனவாகச் செய்வோம். உன் காதலியை நீ கூப்பிட்டுக் கூப்பிட்டு, காலத்தை ஏன் கடத்த வேண்டும்? அவள் உன் பேச்சுக்குச் செவி சாய்க்கின்றாளா? நீ பாவனைப்படுத்தும் இந்த காதல் அவ்வளவு உயர்வான பொருளா?' என்றது.

செம்படவன் பதில் பேசவில்லை. அவனது காதல் அவ்வளவு சக்திவாய்ந்தது. ஒவ்வொரு நாட் காலையிலும் கடல் கன்னியை அழைப்பான். மத்தியானம் அவளை கூப்பிடுவான். இரவிலும் அவள் நாமத்தை உச்சரிப்பான். கடலுக்குள்ளிருந்து வெளியே வந்து அவனைச் சந்திக்கவில்லை. அவளை எங்கும், கடலிலே காணோம். கடலலைகளுக்கு ஊடாக, நீல நிற பரப்பிலே, காலை உதயத்திலே தகதகக்கும் கடலிலே அவளைக் காணோம்.

இரண்டாம் வருஷமும் சென்றது. மிலாறுக் குடிசையிலே இரவு நேரத்தில் தனிமையாக இருந்

தான் செம்படவன். ஆத்மா, 'கேளப்பா. தீயசெயல்களுக்கு உன்னைத் தூண்டினேன். பிறகு நன்மை செய்யத் தூண்டினேன், ஆனால், உன் காதலே சக்தி வாய்ந்ததாக இருக்கிறது. ஆகையிலே இனி உன்னை எதற்குமே தூண்டமாட்டேன். உன் இதயத்திலே முன் போலவே நான் இருப்பதற்கு அமைதி தரும்படி கெஞ்சுகிறேன்' என்றது.

"வா. என் இதயத்தினுள்ளே வரலாம். என்னிதயமின்றி உலகத்தில் சுற்றிய நீ மிகவும் கஷ்டப்பட்டிருக்கலாம்" என்று சொன்னான் செம்படவன்.

"ஐயோ, காதல் பரிபூர்ணமாக நிறைந்துள்ள உன் இதயத்திலே எனக்குப் புகலிடம் ஏது? இடமில்லையே."

"இருப்பினும், உன்னை அடைவேன். உனக்கு உதவி செய்வேன்" என்றான் செம்படவன்.

இம்மாதிரி சொல்லிக் கொண்டிருந்த போது கடலிலிருந்து அழுகுரல் கேட்டது. கடல் மக்கள் இறந்த காலத்தில் எந்த மனிதன் காதிலும் அந்தப் பிரலாபம் விழுவது சகஜம். எழுந்து தன் விழுதுக் குடிசையை விட்டு வெளியே வந்து கடற்கரையிலே ஓடினான். கருநிற அலைகள், கரையை நோக்கிச் சாடின. அவ்வலைகள், வெள்ளியை விட பகட்டான ஏதோ ஒன்றைத் தாங்கி வந்து மோதின. அலை விளிம்புகளில் ஒரே வெண்மை நிறைந்த நுரை. புஷ்பமே மிதப்பது போல இருந்தது, அலையிலே நுரை மிதக்கும் காட்சி! அலைகளிருந்து நுரைக்கும்,

நுரைகளிலிருந்து பொங்கு நுரைக்கும், பொங்கு நுரையிலிருந்து கரைக்கும் கொண்டுவந்து சேர்த்தது அவ்வுடலை. கரையோரத்தில், தன் காலடியில் கிடக்கும் கடல் கன்னியின் சடலத்தைப் பார்த்தான் அச்செம்படவன். இறந்து கிடந்தாள், அவன் காலடியில்.

வலி பொறுக்க முடியாதபடி அடிபட்டவன் போல அதன் பக்கம் அடித்து அழுது விழுந்தான். சில்லிட்ட அந்த இதழிலே முத்தமிட்டவன் நனைந்த கூந்தலைக் கோதி விளையாடினான். அதன் பக்கத்திலே மணலிலே வீழ்ந்து, சந்தோஷத்திலே அழுகிறவன் போன்று தன் கரங்களைக் கட்டியபடி அழுதான். சில்லிட்டிருந்தன அவள் இதழ்கள். இருப்பினும் அதை முத்தமிட்டான். கூந்தலிலே சொட்டும் உவர்ப்பு நீர் அவனுக்குத் தேனெனத் தித்தித்தது. மூடிய கண்ணிமைகளை முத்தமிட்டான். அக் கண்ணிதழ்களில் தங்கியிருந்த கடல் நீர், அவன் உகுத்த கண்ணீர்த் துளிகளைவிட உவர்ப்புக் குறைவாகவே இருந்தது.

செத்தொழிந்த அதனிடம் தன் மனவோட்டங்களைச் சொன்னான். குவளைக் காதுகளில், தேமதுரக் கதைகளை ஊற்றினான் அவளுடைய சின்னஞ் சிறிய கைகளை எடுத்துக் கழுத்தைச் சுற்றிக் கொண்டு அவளது நாணல் கழுத்திலே தன் நகத்தால் நிரடிக் கொடுத்தான். அவன் அடைந்த இன்ப வெள்ளம், கசப்பாக இருந்தது. அனுபவித்த துன்பமோ மகிழ்ச்சி தந்தது.

கரியகடல் அருகே வந்து கொண்டிருந்தது. வெண்ணுரைகள், குஷ்டரோகியைப் போல புலம்பின. வெண்ணிறம் கொண்ட வளைந்த நகங்களால் நுரைக்கூட்டம், கரையையே பிராண்டிக்கொண்டிருந்தது. கடலரசன் அரண்மனையிலிருந்து துக்க அலைகள் மீண்டும் கேட்டன. கடலிடையர்கள், எங்கோ இருந்தபடியே கொம்பு ஊதி சோகத்தைத் தீய்த்துக்கொண்டிருந்தனர்.

" ஓடிவிடு, கடல் பொங்கி வருகிறது. நீ ஒரு விஞடி தாமதித்தால், அது கொன்று விடும். ஓடிவிடு.......எனக்கு எதிராக உன் இதயத்தில் காதல் நிரம்பி இருப்பதால் உன்னைச் சந்தேகம் கொள்ளுகிறேன் நான். பந்தோபஸ்தான இடத்தை நோக்கி ஓடிவிடு. மறு உலகத்திற்கு என்னை இதயமின்றி அனுப்பமாட்டாய் என்று நம்புகிறேன்" என்று ஓலமிட்டது ஆத்மா.

ஆத்மாவின் சொல்லுக்குச் செவிசாய்க்காத செம்படவன் கடல் கன்னியிடம், " காதல், அறிவைவிட உயர்வானது, செல்வங்களைவிட அபூர்வமானது. பெண்மகளிரின் பாததூளியைவிட அழகானது. நெருப்பால் அவிக்க முடியாது. நீரால் தணிக்க முடியாத தாகம் அது. அன்றுடம் உன்னை அதிகாலையில் அழைத்தேன். நீ என் அழைப்பை ஏற்று வரவில்லை. உன் பெயர் சொல்லி அழைத்தது நிலவிற்கு தெரியும். நீ என்னை அலட்சியம் செய்தாய். குற்றம் என்மேல்தான். நான் மனம்

போனபடி உன்னைவிட்டு எங்கெங்கோ அலைந்தேன். நான் தீமைக்கும் நன்மைக்கும் இடையே அலக்கழிந்தபோது உன் காதல், என்னைவிட்டுப் பிரியவில்லை. அதற்கு எதிரிடையாக என்மீது உறைவிடமாக உன் காதல் இருந்தது. அது பலமாக நின்றது. அணுவளவாவது அது குறைந்ததா? இப்போது நீ இறந்துவிட்டாய். நானும் உன்னோடு உயிர் துறப்பேன்" என்று சொன்னான்.

செம்படவனைப் பிரிக்க ஆத்மா எவ்வளவோ முயற்சி செய்தும், அவனது மகத்தான காதல் அவனைப் பிரிக்க முடியாதபடி தடை செய்தது. கடல், அருகே வந்து அலைகளால் அணைத்துக் கவிந்தது. முடிவுகாலம் நெருங்கிவிட்டது என்பதை அறிந்தும், வெறிகொண்ட தன் இதழ்களால் சில்லிட்டுப் போன இதழ்களை முத்தமிட்டான். அவனுக்குள்ளே ஓடிக்கொண்டிருந்த அந்த இருதயம், நின்றது. காதல் பொங்கிப் பூர்ணமாக நிரம்பிய காரணத்தால், இதயம் வெடித்தது. ஆத்மாவிற்கு இடம் கிடைக்கவே, முன்னைப் போலவே அவனுடன் ஐக்கியமாயிற்று. கடல் அலை கைகளை நீட்டி செம்படவனை அணைத்துக்கொண்டது.

காலை நேரத்தில் கடலை ஆசீர்வதிக்க வந்த பாதிரி, கொந்தளிப்பதைக் கண்டார். அவருடன் இன்னும், சிஷ்யகோடிகள், சங்கீத விற்பன்னர்கள், மெழுகுவர்த்தி பிடிப்பவர்கள், மத்தாப்புக் கொளுத்துகிறவர்கள் எல்லாரும் பெருங் கூட்டமாக வந்தார்கள்.

கரையில் நின்று பார்த்தார் பாதிரியார். நுரையிலே செம்படவன் அமிழ்ந்து படுத்திருக்க, அவன் அரவணைப்பில் கடல் கன்னியின் உடலம் இருக்கிறது. சிலுவையை மானசீகமாக இட்டபடியே, முகத்தைச் சுளித்தவர், ஆங்காரமாக "கடலையோ, கடலில் கிடப்பதையோ ஆசீர்வாதம் செய்யமாட்டேன். கடலில் வாழ்பவர்களும் அல்லாதவர்களும், ஒருவருக்கொருவர் இவர்களோடு சங்காத்தம் வைத்துக்கொண்டால் வசைக்கு ஆளாவார்கள். காதலுக்காக கடவுளையே மறந்த அந்தச் செம்படவன் கடவுளின் தீர்ப்பையே அடைந்து செத்து மிதக்கிறான். அவன் சடலத்தை எடுத்துச் சமாதியிலே கொண்டு புதையுங்கள். அங்கே ஒருவித அடையாளமும் வேண்டாம். எந்தவித குறிப்பும் வேண்டாம். இவர்கள் புதையுறும் அந்த இடம் யாருக்கும் தெரியாமலேயே போகட்டும். இவர்கள் வாழ்ந்த வாழ்க்கை கடவுளுக்கு விரோதமானது. இவர்கள் சாவும் அப்படியே இருக்கட்டும்" என்று சொன்னார்.

ஜனங்கள், பாதிரியார் சொன்னபடியே செய்தனர். பவித்திர நிலமல்லாது வெறும் புல் பூண்டு கூட முளைக்காத சுண்ணாம்புக் காட்டிலே, ஆழமான குழி தோண்டி பிரேதங்களை அதற்குள் வைத்தார்கள்.

மூன்று வருஷங்கள் கழிந்த பிறகு, புனித தினத்தில் அந்தப் பாதிரியார், கர்த்தரால் அனுபவித்த புண்ணையும், கடவுள் கோபத்தீயையும்

ஜனங்களுக்கு எடுத்துச் சொல்ல மாதா கோவி லுக்கு வந்தார்.

பலி பூஜைக்குரிய அங்கி ஆடைகளை அணிந்து வந்தவர், தலைவணங்கி, மேடைமீது ஏறினார். அங்கே பலிபீடத்திலே அபூர்வமான சில புஷ்பங் கள். இதற்குமுன் அவர் பார்த்திராத புஷ்பங்கள் குவிந்திருந்தன. பார்ப்பதற்கு நூதனமாகவும், அதீதமான அழகுடன் இலங்கின. அந்த அழகின் மயக்கிலே வாதைக்கு உட்பட்டார். நாசிக்கு அப் பூக்களின் சுகந்தம் இனிமை தருகிறது. அவருக்கு உள்ளூர ஆனந்தம். ஆனால் ஏன் ஆனந்தம் பிறந் தது என்றும் தெரியவில்லை.

பீடத்திலே நின்று அதிலே குவிந்திருக்கும் கொடுமைதரும் புஷ்ப சுகத்தை அனுபவித்து நறு மணத்தின் காம்பீர்யத்தை குழுமியிருந்த மக்க ளுக்கு எடுத்துக்காட்டி, திரைக்குப் பின்னால் புஷ் பங்களை மறைக்கச் சொன்னவர், கடவுளின் கோபாவேசத்தைச் சொல்ல ஆரம்பித்தார். ஆனால், அவர் சொன்னதோ, தம் மனசை வசி யப்படுத்திய அவ்வெண்ணிற பூக்களின் அழகுப் பிரபந்தம். அதன் சுகந்தம் எப்படி நாசிக்கு இன்பவாதனை தருகிறது என்பதையும், இவ்வள வும் போதாதென்று, அவர் வாயிலே ஒரு வார்த்தை பிறந்தது. கடவுளின் கோபாவேசத்தைப்பற்றி அவர் வாய் திறக்காது காதல் என்ற கடவுளின் தன்மையைப்பற்றியே பேசினார். ஏன் பேசி

ஞெம் என்று, பாதிரியாரே அறியார். அவர் பிரசங்கம் முடிந்ததும், ஜனங்கள் அழுது நிற்க பாதிரியார் தமது மடத்திற்கு நீர் தோய்ந்த கண்களுடன் திரும்பினூர். பணியாளர்கள் வந்து அவர் மதச் சின்னங்களைக் களைந்தனர். கனவில் நிற்பவரைப் போல நின்றூர் பாதிரியார்.

அருகே நின்ற பணிமக்களைப் பார்த்து, 'பீடத்திற்கு வந்திருந்தது என்ன வகைப் புஷ்பங்கள்? எப்போது அங்கே வந்தன?' என்று கேட்டார்.

'என்ன ஜாதிப்பூ வென்று எங்களுக்குத் தெரியாது. அவை சுண்ணும்புத் தோட்டத்திலே எங்கோ ஓர் மூலையிலிருந்து பறித்து வரப்பட்டவை!' என்றனர். பாதிரியார் நடுங்கினூர். பிறகு தம் வீட்டிற்குச் சென்று ஜபத்தில் ஆழ்ந்தார்.

மறுநாள் பொழுது புலர்ந்ததும், சிஷ்ய கோடிகள், சங்கீத விற்பன்னர்கள், மெழுகுவர்த்தி பிடிப்பவர்கள், மத்தாப்புக் கொளுத்துகிறவர்கள் எல்லாரும் சேர்ந்து கடற்கரைக்கு வந்து, கடலை வாழ்த்தினூர்கள். கடலிலே உள்ள கொடிய வஸ்துக்களையும் வாழ்த்தினூர்கள். காட்டிலே நர்த்தனம் புரியும் சின்னஞ்சிறிய செடிகொடிகளையும், பசிய இலைகளுக்கு ஊடாகத் தலைநீட்டும் சின்னஞ் சிறிய உயிர்களையும், அவர் வாழ்த்தினூர். கடவுள் சிருஷ்டிக்கு உள்ளான அத்தனை ஜீவன்களையும் அவர் வாழ்த்தவே, மக்கள் ஆச்சர்யமும், சந்தோஷமும் நிறைந்த மனத்தோடு நின்றனர்.

சுண்ணாம்புத் தோட்டத்தின் அந்த மூலையில், அதற்குப் பிறகு, எந்தப் புஷ்பமும் புஷ்பிக்காது, முன்போல சூன்யமாகக் கிடந்தது.

கடல் ஜீவன்களும் கடல் கன்னிகளும் அந்த விரிகுடாவின் பக்கமாக வராமல், கடலின் வேறொரு பக்கத்திலே நடமாட ஆரம்பித்தன.

# "நரைத்த காதல்"

பஞ்சாங்கத்தின்படி மழைக் காலத்தின் ஆதிக்கம் குறைந்து காற்றின் ஆட்சி ஆரம்பிக்க வேண்டும். ஆனால் வெண் சிறகைப் போல பனி விழுகிறது. வசந்தத்தின் அறிகுறியே இல்லை. நூறு வருஷங்களைத் தாண்டிய மாபிள் மரங்கள், முற்றத்திலே இலை அசங்காமல் நிற்கின்றன. போதாக்குறைக்கு வெண் பனியின் பாரத்தோடு கிளைகள் வளைந்து விட்டன. அந்தக் கிராமத்திலே, சற்று தூரத்தில் சுற்றி வளைத்துச் செல்லுமே நதி, அது இனி உயிர் பெற்றே எழாதோ எனச் சொல்லும் படியாக வரண்டு கிடந்தது. சூரிய ஒளியை அலைகளிலே அசைத்துப் பகட்டாகக் காட்சிதரும் அந்த நாளும், நதி தீரத்திலே பண் இசைக்கும் பரிசிலோட்டிகளும் என்று வருவார்களோ?

எங்கும் வெண்மையின் தோற்றம். காற்றின் அசைவற்ற தன்மை. இதைப் பார்த்த படியே யென் யென் ஜன்னலருகே நின்றாள். பரந்த வெளியின் தோற்றம். அவள் மனத் திரையில் எதையும் பதிக்க வில்லை. பனியின் கொடுமையால் அவள் உணர்ச்சி மரத்துப் போகவே, சற்று நேரம் நின்றவள், ஜன்னலை விட்டு வீட்டுக்குள் போனாள்.

நாற்காலியில் அமர்ந்தாள். அருகே நிலக்கரியின் கணப்பு ஹிதமாக இருந்தது. 'வசந்த காலம் வரப் போகிறது. வருஷம் முடிந்து புது வருஷம் பிறக்கப் போகிறது' என்று நினைத்தாள். புது வருஷம். அவள் உடல் குலுங்கியது. புது வருஷத்தை நினைத்ததும் இடது கை சுட்டு விரலால் வலது கையின் ஐந்து விரல்களையும் மடக்கினாள். இம் மாதிரி விரல்களை மீண்டும் மீண்டும் மடக்கியும் விரித்தும் எண்ணினாள். பெரு மூச்சுப் பிறந்தது. விரல் விட்டு எண்ணியவள், 'வருஷப் பிறப்பு வந்தால் எனக்கு வயசு பத்தொன்பது ஆகிறது' என்று பெரு மூச்சு விட்டனள்.

நிலக்கரி, கணப்பிலே தக தகவென எரிந்து கொண்டிருக்கிறது. அதன் சிவந்த தணல் சிரிப்பது போல் காட்சி அளிக்கிறது. எப்பவோ ஒன்றிரண்டு தீக்கங்குகள் வெடித்துத் தெறிப்பவை, பொறி சிந்தின. அப் பொறிகள் அவள் நிலைமையை பரிகாசம் செய்வன போல் இருந்தன. அவளுடைய செவ்விய கன்னங்கள் தள தளவென இருக்கிறது. அவள் நினைப்பெல்லாம், தகப்பனாருடைய வேலையாள்—லூயி—மீது இருந்தது.

லூயி சிறு பிள்ளை முதலே அவள் தகப்பனாருக்குப் பணிவிடை செய்கிறவன். அடிக்கடி கணப்புக்கு நிலக்கரி கொண்டு வந்து போடுவது வழக்கம். நேற்றுத்தான் அவனை வேலையிலிருந்து நீக்கியிருந்தார். தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்

ளும் வயதும் படிப்பும் இருந்ததால் பணியாளாக அவனை வைத்துக் கொள்ளாமல் அவள் தந்தை அனுப்பிவிட்டார். கடைசி முறையாக தன்னைப் பரி காசம் செய்யவே, இம்மாதிரி வெடித்துச் சிரிக்கும் நிலக்கரித் துண்டுகளை அவன் போட்டிருக்கிறனே என்ற நினைப்பு எழும். லூயி அப்படிப்பட்ட பொல் லாதவன் தான். குறும்பும் உண்டு.

அருகே இருந்த பட்டுத் துணியை எடுத்தாள். ஜன்னல் பக்கம் வந்து பனியைப் பார்ப்பதற்கு முன்பாக அதிலே பூ வேலை செய்திருந்தாள். தொடர்ந்து பட்டுத் துணியிலே புஷ்பங்களும் பறவைகளும் போட ஆரம்பித்தாள். அவளுடைய, நெருங்கிய சகோதரி ஒருத்தியின் கலியாணத்திற்கு கொடுக்கப் போகும் பரிசு. அவளுக்குப் புது வரு ஷம் பிறந்ததும் திருமணம் நடக்கப் போகிறது. தன்னைவிட்டுப் பிரிந்து விடுவாள், கலியாணம் ஆகப் போகிறது என்ற நினைப்பு எழவே, அவளால் மன நிம்மதியுடன் இருக்க முடியவில்லை.

அந்தப் பட்டுத் துணியில் தைத்திருந்த படம் ரொம்பவும் சாதாரணமானது. இரு குயில்கள் மரக் கிளையிலே, ஒன்றுக் கொன்று அன்போடு அலகைக் கோதிக் கொண்டு அமர்ந்திருந்தன. அந் தப் பறவைகளுக்கு மேலாக சீன எழுத்தில் 'நரை—மூப்புத் தட்டும் வரை காதல் அழியாது' என்று எழுதப்பட்டிருந்தது. அந்தப் படம் அவளுடைய தாயார் வரைந்தது. எழுத்துக்களை லூயி வரைந்

திருந்தான். அவனுடைய எழுத்துக்கள் முத்துப் போலிருக்கும். அவளுடைய தகப்பனார் பெரிய பண்டிதர். என்றாலும் வரி வடிவம் எழுதுவதில் அவளுக்கு அபார தேர்ச்சி. அந்த எழுத்துக்களில் நெளியும் கோடுகள், கவிதை போல இருந்தன. சிரமமோ, அதிக கஷ்டமோ இல்லாமல், மனம் போன போக்கிலே எழுதிய வடிவங்கள், கம்பீரமாக வும் ஆடம்பரமாகவும் மிளிரும். 'நரை—மூப்புத் தட்டும் வரை காதல்' என்ற எழுத்துக்களைப் பின்னி வர்ணம் இழைக்கும் போது, அவள் இதயம் துடித்தது. 'இந்த சொற்கள் என்னவோ செய்கின்றன' என்றவள், அவ்வார்த்தைகளைச் சகிக்க முடியாது எழுந்து சென்றாள்.

அந்தச் சொற்கள், ரொம்பவும் வாய்ப்பாக அமைந்திருந்தன. அதிலே அலகு கோதிக் கொண்டிருந்த குயில்கள், காலமும் ஒளியும் அதன் செய்கைகளை அழிக்கமுடியாது என்பதைப்போல உயிர் பெற்று விளங்கின! அவளுக்குப் பறவை இனங்களின் பேதங்கள் ஒன்றும் தெரியாது. இருப்பினும் அக் குயில்கள் தலையிலே வெண்ணிற வர்ணம் தீட்டியிருந்தது, ஒரு வேளை இப்படியும் இருக்கலாம், நாம் பார்க்காமல் இருந்திருக்கலாம் என்ற சமாதானத்தைக் கொடுக்கும். அவ்வித வர்ணம் கொண்ட குயில்கள் உண்டா? இல்லை. அது கற்பனையின் சுடர்! அந்த விளைவு படத்திற்கும் வர்ணத்திற்கும் வெகு அற்புதமாக இருந்தது.

அன்றிரவு அநேக விதமான கனவுக் குவியல்கள்.

அவளுக்கு பால்ய பருவத்தின் அக்ஷராப்பியாச நினைவு தெரிந்தது. தன் சகோதரனுடன் அவர்கள் வீட்டுத் தோட்டத்திலே படித்த காட்சி நினைவில் வருகிறது. ஓலை வேய்ந்த ஒரு மூலையில், அத் தோட்டத்திலே சிறிய குடிசை. அங்குதான் ஆசிரியர் வந்து சொல்லி வைப்பார். சொல்லி வைக்கும் ஆசிரியர், அவள் தகப்பனுருடைய பள்ளித் தோழர். உத்தியோகத்திற்கும் செல்வாக்குக்கும் ஆசைப்படாமல், எளிய வாழ்க்கையில் மோகம் கொண்டு ஆசிரியராக வாழ்ந்து வந்தவர். நினைத்தால் யென் யென் தந்தை போல மாஜிஸ்டிரேட்டாக வந்திருக்கலாம். என்னவோ அவர் போக்கே அலாதி.

ஒரு நாள் அவளுடைய தந்தையுடன், ஆசிரியர் டீ அருந்தி சந்தோஷமாக சம்பாஷணை செய்து கொண்டிருந்தார். அவர்கள் பேச்சு தற்கால சீன இலக்கியத்தைப் பற்றி இருந்தது. அவ் வேளையில் யென் யென், "சிகப்பு அறையின் கனவு" என்ற காதல் நவீனத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். அது காவ்ய ரஸம் வாய்ந்த பிரபல்ய நாவல். பதினெட்டாம் நூற்றாண்டின் காதல் முறையைத் சஓஷ்யூ-சின் அந் நாவலை எழுதியிருந்தார்.

அந்த நாவலை சிறுவர் சிறுமிகள் படித்தால், புத்தியை பேதலித்துவிடும், மனசை விகாரப்படுத்து

மென அவள் தந்தை சொன்னார். கலியாணம் ஆன கிரகஸ்தர்கள் படித்தால், காதலின் உண்மைத் தத்துவத்தைப் புரிந்த அவர்கள் அதை ரஸிக்க முடியுமென்றும் சொன்னார். இதற்காகவே கன்பூஷியன் எழுதிய நூல்களுக்கு ஊடாக அந்த நாவலை மறைத்து வைத்திருந்தார். தன் தந்தை அடிக்கடி கண்ணியமில்லாத புஸ்தகங்களைப் பற்றிச் சொல்லச் சொல்ல, அதைப் பார்க்க ஆசை கொண்டாள். ஒருநாள் ஆபீஸ் விஷயமான சர்ச்சையில் தகப்பனார் மூழ்கியிருக்கும் போது நாவலை எடுத்தாள். அதிலே பிரியம் விழுந்தது. மனித சுபாவம் இது தானே. கடைசியாக அவள் வெற்றியடைந்தாள். பிறகு அந்தப் புஸ்தகமே உயிராகி விட்டது. அந் நாவலில் வருகின்ற கதாநாயகியாகத் தன்னை நினைத்து விட்டாள்.

அவளுடைய ஆசிரியர், அன்று உண்டகிறக்கத்தினால் தூங்கினரோ, இல்லை. அதிகப்படியான மது ரஸம் ஊற்றிக் கொண்டாரோ, இல்லை. அதிகப்படியான பேச்சில் ஆழ்ந்ததாலோ, குறட்டை விட்டார். ஆசிரியர் தூங்கிய சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு அந்த நாவலை எடுத்தாள். கையை ஊன்றியபடியே நாவலில் ஆழ்ந்து படித்த சமயம் குறட்டையின் வெடிச் சப்தம் கேட்கவே ஊன்றிய கையை எடுக்கவும் மேஜையில் 'படார்' என்ற சப்தம் எழுந்தது. திடீரென சப்தம் எழவே, தன்னை மறந்து டிராயரை மீண்டும் சாத்தித் தள்ள இன்

ஒரு 'படார்' என்ற சப்தம். இந்த சப்த ஜாலங்கள் ஆசிரியர் தூக்கத்தைக் கலைத்தன.

'என்ன சப்தம்' என்றார் அந்தக் கிழட்டு வாத்தியார்.

யென் யென், பதில் பேச முடியாதபடி ஏறிட்டுப் பார்த்தாள். கோடை கால ரோஜாவைப் போல அவள் முகம் சிவந்தது. அந்தச் சமயம் பார்த்து ஊாயி, தோட்டத்திலிருந்து வந்தவன், ஆசிரியர் முன்பாகப் போய் நின்றான். இப்படி நிற்கவே, ஆசிரியர் இருந்த ஆசனத்தைவிட்டு எழவில்லை. தலை வணங்கி உடல் குறுகி, "ஐயா, எஜமான், நான் தான் சப்தம் செய்தேன். ஒடிந்து போன பெஞ்சியின் கால்களைச் செப்பனிட முயற்சித்த போது அது கிரீச் சிட்டது. தங்களுக்கே நினைப்பிருக்கலாம். திராக்ஷை பந்தல் பக்கம் கிடக்கிற பெஞ்சு ஆடுகிற ஆட்டம் தெரிந்ததுதானே. என்னை மன்னித்து விடுங்கள்" என்று கெஞ்சினான்.

அந்தக் கிழட்டு வாத்தியார் மஞ்சள் கைக் குட்டையால் முகத்தைத் துடைத்தபடியே "டேய் இனிமேல் இம்மாதிரி சப்தம் போடாதபடி பார்த்துக் கொள். அதிலும் சாப்பாடு முடிந்து தூங்கும் போது வேண்டவே வேண்டாம். என்ன, நான் சொல்வது புரிகிறதா?" என்றார்.

"ஆமாம், புரிந்தது எஜமான்" என்றான் ஊாயி. மீண்டும் பணிவாக வணங்கி நிமிர்ந்து வெகு ஜாக்கிரதையாக அங்கிருந்து நடந்தான். போகிறபோதே

திருட்டுத் தனமான யென் யென் மீது பார்வை விழுந்தது. பாவம், அப் பேதை இன்னும் பயத்திலே அமுங்கிக் கிடந்தாள். நல்ல வேளையாக, வாலிபன் சிரிக்காதபடி இருக்க, ஏதோ தற்செயலாக தலை குனிந்து ஒன்றுமே நடத்தாதவள் போல பாவனை செய்துவிட்டாள்.

ஆனாலும் அவளுடைய ரகசியம் அந்தப் பணியாளுக்குத் தெரிந்துவிட்டது. காலையில் மேஜையைத் துடைக்கிறபோது டிராயரை அவன் பார்த்திருக்க வேண்டும். இதில் அதிசயம் என்னவென்றால் சரியான சந்தர்ப்பத்தில் ஆபத்ப ந்தவனாய் வந்து ஆசிரியர் முன் தோன்றி அவளுக்காக மன்னிப்புக் கேட்டதே. ஒரு வேளை அந்த அறையில் நடந்ததை உற்றுக் கேட்டுக்கொண்டோ, அல்லது விளிம்பு வழியாகப் பார்த்துக் கொண்டோ இருந்திருக்க வேண்டும்!

பிறகு கனவுப் படலம், வீட்டின் சுற்றுச் சார்பை விட்டு வெளியுலக நிகழ்ச்சிகளில் படர்ந்தது. அப்போது இலையுதிர்காலம். யென்யென் மலைக்குச் சென்று புஷ்பங்கள் சேகரிக்கப் போயிருக்கிறாள். திருவிழா சமயம்.

புஷ்பங்களைக் கொய்தபோது மலையடிவாரத்திலே காலடி ஓசை கேட்கிறது. தலை தூக்கிப் பார்த்தால் அதே குறும்புக்காரப் பணியாள். அவள் காட்டுக்குப் புஷ்பம் கொய்ய வந்தது எப்படித்தான் அவனுக்குத் தெரிந்ததோ? அவள்

எங்கு போகிறாள் எங்கு வருகிறாள் என்பதை அறிய எப்போதும் அவள்மீதும் ஒரு கண் வைத்திருக்க வேண்டும். கோபமாகப் பார்க்க முயற்சி செய்தாள். அவன் முகத்திலே புன்னகைதான் இலங்கியது. அந்த புன்முறுவலிலும் அசட்டுத்தனமே வெளிப் படையாகக் காட்சி அளிக்கிறது. ஆறு ஏழு வருஷங்களுக்கு முன், வீட்டு முற்றத்தில் சிறு பிள்ளையாக அவளோடு விளையாடியபோது இருந்த அவ்வளவு அசட்டுத் தனம் முகத்தில் படர்கிறது. இந்த மாதிரி அசட்டுத் தனமாக விழிப்பதிலும் — அது பிள்ளைப் பிராயத்தை நினைப்பூட்டுவதால் — அவளுக்கு உள்ளூர ஆனந்தம். அவன் கையிலே பூங்கொத்து செண்டு போல அடுக்காக வைத்திருந்தான். அவளுக்காகவே வெகு சிரமப்பட்டு சேகரித்திருக்க வேண்டும்.

பவ்வியமாக அவள் முன்பாக வந்தவன் " எஜமானி அம்மாளின் அழகிற்கு இந்த ஏழைக் கேற்ற பரிசாக இதைக் கொடுக்கிறேன். ராஜ குமாரியே, இந்தப் பரிசை மனப் பூர்வமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். என் இதய பூர்வமான நன்றியுடன் அர்ப் பணம் செய்கிறேன்." என்று சொல்லுகிறான்.

" என்ன துணிச்சல் இவனுக்கு ?" என்று நினைத்தாள். அந்த இளமைக் கனல் வீசும் முகத்தின் சௌந்தர்யத்தில் மனம் பறி கொடுத்து, தன் ஆனந்தத்தை மறைத்து, " போக்கிரி எழுந்திரு" என்று கோபமாக நடித்தாள். அவன் எழுந்து

நின்றான். ஒடிசலாக நெடு நெடுவென வாட்ட சாட்டமாக அவள் கண்முன் நின்றான்.

பேச்சுக்கு வார்த்தைகள் கிடைக்காமற் போகவே, ஒருவரை ஒருவர் பார்த்தனர். கண்கள் சந்தித்தன. சிரிப்பு அலை மோதிற்று. வெட்கம் தாங்காமல் கண் மூடிக் கொண்டவள், அவனை விட்டு விலகி நிற்காது அருகேயே நின்றாள். மிகுந்த துக்கத்தை வரவழைத்தபடியே, "போய் விடேன். இம்மாதிரி என்னையேன் தொந்தரவு செய்கிறாய்?" என்றாள்.

"உன்னை வணங்குகிறேன், என் ராஜகுமாரி" என்று ஏதோ காதல் நவீனங்களில் வரும் கதா நாயகன் போல, கம்பீரமாகச் சொல்லி, 'பூர்ணச் சந்திரனின் தன்மை உன் கண்களிலே வீசுகின்றது' என்று முடித்தான்.

எங்கோ கோழி கூவிற்று. அந்தச் சப்தத்தால் கனவின் சுகம் கலைந்து கற்பனைக் கயிறு அறுந்தது. கண்ணைத் திறந்து பார்க்க, இருளின் வலிமையும் கண் முன்னே சூன்யமும் தெரிந்தது. புரண்டு புரண்டு படுத்து, மீண்டும் கனவு காணத் துடித்தாள். கனவு லோகத்திற்குள் காலடி எடுத்து வைக்க மனம் விழைந்தது. ஆனால் அப்பாவின் அறைக்குள்ளிருந்தும், அம்மாவின் அறையிலிருந்தும் ஏதோ பேச்சுக் குரல்கள் கேட்டன.

"என்ன, யென் யென் நம் வேலைக்கார ஆயி பெயரைச் சொன்னது, உங்கள் காதில் விழுந்

ததா?'' என்றுள் அவள் அம்மா தன்னறையி லிருந்து.

தகப்பனுர் தமது அறையிலிருந்து "கேட் டேன். ஏதாவது சொப்பனத்தில் உளறியிருப் பாள்'' என்றுர்.

"இருந்தாலும் புது வருஷம் பிறக்கப் போகி றது. இப் புத்தாண்டில் சாயோ வீட்டாரைக் கேட்டு விட வேண்டும். அவளுக்கும் வயது வந்து விட்டது.''

சாய் வீட்டார்! தாயாரின் சொற்கள் அவ ளுக்குப் புரிந்து விட்டன. சாய் வீட்டார் என் பது அவள் மணக்கப் போகும் மாப்பிள்ளையின் வீடு. அவள் பிறந்த சில தினங்களுக்குள்ளாகவே சாய் வீட்டிலுள்ள மாப்பிள்ளைக்கு என, முடி போட்டு விட்டனர். சாய் வீட்டார் ரொம்ப கௌரவமான குடும்பம். அவளுக்கு நிச்சயத்திருந்த மாப்பிள்ளை, அவளை விட ஒரு வயது மூத்தவன். பொருத்தமான ஜோடி. பரம்பரையான அறிவாளிகள். புத்தி சாலிகள். கண்ணியமான குடும்பம். தனக்கு வரப்போகும் மாப்பிள்ளையை யென் யென் பார்த் ததே கிடையாது. அவளுடைய பெற்ருேர் சாயோ வீட்டாருக்கு, கலியாணத்தை சமீபத்தில் நடத்த இயலுமா எனக் கேட்கப் போகிறுர்கள்.

அந்த வீட்டார் 'சரி' என்று விட்டால், முன் பின் அறிமுகமே இல்லாத சாய் வீடு அடைந்து அவள் வாழ வேண்டும். பழக்கமில்லாத ஒரு மனித னுடன் சம்சாரம் நடத்தியாக வேண்டும். வாழ்

நாள் முழுவதும், கொஞ்சம்கூட இன்னார் எனத் தெரியாத ஒருவருடன் வாழ்க்கை நடத்த வேண்டு மென்பதைக் கற்பனை செய்யவே பயமாக இருந் தது.

தன்னறையில் இருந்தபடியே பின்னி வந்த அந்த பட்டுத் துணியைப் பார்த்தாள். இருப்புக் கொள்ளவில்லை. கஷ்டமாக இருந்தது. லூய் எழு திக் கொடுத்திருந்த எழுத்தோவியத்தைப் பார்த் தாள். கண்ணிலிருந்து இரு பொட்டுக் கண்ணீர் "நரை—மூப்புத் தட்டும்வரை காதல்" என்ற எழுத் துக்களில் உருண்டோடின.

துக்கம் தாங்காமல், அவள் நினைத்திருந்தால் ஜன்னல் வழியாகக் குதித்து உயிரை மாய்க்கலாம். உயர்தரமான சீன வேதாந்தத்தின் தத்துவங்களில் பரிச்சயம் இருந்த காரணத்தால், உலக விஷயங் களில் அனுபவம் இருந்த காரணத்தால், உலகத்தி லுள்ள ஒவ்வொரு செயலும் ஏதோ ஒன்றை நோக் கியே இயங்குகின்றன என்பதை அறிவாள். ஏதோ ஒரு குறிப்பிட்ட லட்சியத்திற்காகவே சுழன் றோடுகின்றன என்பதும் தெரிந்த விஷயமே. "ஏதோ ஒரு விதிதான் நம்மை ஆட்சி புரிகிறது" என்று முணு முணுத்தாள், புதிய உண்மையைக் கண்டு பிடித்தவள் மாதிரி.

தன் விதியின் முடிவும் போக்கும் எப்படி என்று அறிய ஆவல் பிறக்கவே, எல்லாம் தெரிந்த இறைவன் விளையாட்டை அறிய முயற்சி செய்

தாள். யாராவது ஒரு ஜோதிடனை கேட்க வேண்டும். தன் தாயார் 'பேசுங் கடவுள்' என்று சொல்லுகிற அந்த ஜோதிஷன் வீட்டிற்குப் போகலாமா? போனால், ஜாதகத்தைப் பார்த்து, ஜோதிஷ உலகத்தின் விந்தைகளை, மறைந்து கிடக்கும் அதிசய சம்பவங்களை, எதிர்காலத்தை, அடுக்கடுக்காக கண் முன்னே நிறுத்தும் அவர் சொல்லுவார். எந்த சாக்குச் சொல்லி ஜோதிஷனைப் பார்க்கிறதாம்? ஐந்து கல் தொலைவிலுள்ள பட்டணத்தில் மார்க் கட்டுத் தெருவில் அவனுடைய வீடு இருந்தது.

"நான் என்ன சிறு பெண்ணா? பெரியவள். பட்டணத்திலுள்ள கோவிலுக்குப் போய் தரிசனம் செய்யப் போவதாகச் சொன்னால்? பெரிய பெண்கள் போகிறார்களே. அவர்களைப் போன்று நானும் போகலாந்தானே" என்று நினைத்தவள், தாயிடம் போய் அனுமதி கேட்டாள்.

"ரொம்ப நல்ல யோசனை அம்மா. உனக்கு இம்மாதிரி புத்தி பிறந்ததே. கடவுள் அனுக்கிரகம் நமக்கு இருக்கிறது என்று தெரிகிறது. கடவுள் நமக்கு அருள் செய்வார். கடவுள் துணை நமக்கு வேண்டும்."

புத்தாண்டு பிறந்து, ஐந்து தினங்களும் சென்றன. காலைச் போஜனத்திற்குப் பிறகு யென் யென் அந் நகரத்திற்குப் புறப்பட்டாள்.

வீட்டிலே உள்ள தள்ளு வண்டியில் அவள் இருந்து கொள்வது, வேலைக்காரக் கிழவன் லவோ

வாங், நகரத்திற்குத் தள்ளிக் கொண்டு போகிறது என்று ஏற்பாடாயிற்று. யென் யென், தமாஷாக நடந்து போய் வருவதாகச் சொல்லவே, மகளின் போக்குப்படியே தாயார் சம்மதித்தாள்.

வருஷத்தின் முதல் மாசம். நடையின் கஷ்டம் தோன்றாது வெகு சுகமாக இருந்தது. நடக்க நடக்க சோர்வில்லாமல் ஆனந்தமே அதிகமாயிற்று. பனியின் உக்கிரம் தணிந்து, சூரியனின் கதிர்கள் நிலத்தில் விளையாடின. இரண்டு மணி நேரத்திற்குள்ளாகவே போக வேண்டிய இடத்திற்குப் போய் விட்டாள்.

அந்தப் 'பேசுந் தெய்வம்' வீட்டுக்குள் நுழைந்தபோது அவர் 'காலச்சக்கரம்' என்ற ஜோதிஷ புஸ்தகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

முதுகு கூனி, தலைநரைத்து திக்கான மூக்குக் கண்ணாடி அணிந்திருந்த காட்சி, தன் தந்தையை விட சற்று வயதானவர் என்ற நினைப்பை அவள் மனதில் ஊட்டிற்று. அறையில்போதிய வெளிச்சம் இல்லாமல் இருட்டுக் கவிந்திருந்தது. இந்த மாதிரி இருளும் ஒளியும் அல்லாத இடத்தில்தான், ஒரு மனிதனின் வாழ்வைக் கணிக்க முடியும் என்று நம்பினாள். அந்தப் 'பேசுந் தெய்வ'த்தினிடம் தன் மனத்துள்ளே கிடந்த எண்ணங்கள், ரகஸியங்கள் எல்லாம் கொட்டினாள்.

“சரியம்மா. சின்னப் பெண்ணே! உனக்கு வேண்டியது என்ன?” என்று கண்ணாடியைக் கழற்றி, ஆறுதலோடு கேட்டார்.

“இனிமேல் என் வாழ்க்கை எப்படி இருக்குமென்று தெரியவேண்டும். கோழி கூவுமே அதிகாலையில், அப்போது நான் பிறந்தேன். பிறந்த வியாக்கர (புலி) ராசி வட திக்கு நோக்கி என்னைப் பிரசவித்தாள் அம்மா. பிறந்தபொழுது மூன்று முறை அழுதேனும். பீச்சுப் புஷ்பங்கள் அலர்ந்திருந்தன அன்று. இப்படி அம்மா சொல்லுவாள்.”

இந்தத் தகவல்களைக் கேட்ட பெரியவர், பல முறை தலையாட்டினர். கையை, மேஜையில் ஊன்றி விரல்விட்டு ஏதோ கணக்குப்போட ஆரம்பித்தார். பிறகு “ஏம்மா, இந்த மாசம் ஏழாந்தேதியோடு உனக்கு பத்தொன்பது வயசு நடக்கிறது. முடி போட்டாச்சா—அதான் அம்மா கலியாணம் ஆச்சுதா?” என்று கேட்டார்.

கண்ணைத் தாழ்த்தி அவரைப் பார்த்து “இன்னும் இல்லை ஐயா” என்ருள் மெல்லிய குரலில்.

“ரொம்ப சரி. உண்மையை நான் சொல்லுகிறேன்” என்று அந்த ஜோதிடர் சொன்னார். அவர் குரலில் இரக்கம் தொனித்தது.

“சொல்லுங்கள் ஐயா” என்ருள் ஆவலோடு.

“நீ பிறந்த தினம், நான் சொல்லுவதைக் கேளம்மா, நீ பிறந்த அன்று பீச்சு (கோவைச்

செடியில்) புஷ்பங்கள் மலர்ந்திருக்கும் சமயம். அதாவது ரொம்பவும் விசித்திரமான மனப் போக்கைத் தரும் பீச்சு புஷ்பங்கள். எந்தப் புஷ்பங்களும் மலர்வதற்கு முன்னதாகவே புஷ்பிக்கும் ஜாதி அழகானது. ஆனல் பகட்டு நிறைந்த புஷ்பம். ஆகவே உனது புருஷன் அழகானவன். நல்ல கல்வி யறிவும் இரக்கச் சித்தமும் கொண்டவன். இலக்கிய ரசனை உடைய பேர்வழியாக இருப்பான். அவனோடு உனது வாழ்வு வைகறையின் பொலிவைப் போல இருக்கும். திடீரென மலரும் புஷ்பம் போலக் கவர்ச்சியும் மணமும் நிறைந்திருக்கும். விடியற்கால வேளையில் ஜனனமானவள் ஆனதால், காலை நேரத்தின் பகட்டு இருக்கும். காலை வானத்தின் செவ்விய நிறம், சூரியோதயம் ஏற்பட்டதும் மறைவது போல, உன் வாழ்விலும் பிரதிபலிக்கும். உன் சந்தோஷம் க்ஷண இன்பமே. உடனே அழியக்கூடியது.''

யென் யென் இதைக் கேட்டதும் 'க்ஷண இன்பம்' என்பதை நினைத்து உடள் நடுங்கினாள்.

'ஆனல்' என்று ஜோதிஷர் குறுக்கிட்டார்.

'வரப் போகிற புருஷன் உயர் குடியில் பிறந்தவன் என்று சொல்ல முடியாது. பீச்சுப் புஷ்பம், உயர்ந்தஜாதி புஷ்பமன்று. (ஒரு வேளை தன் வீட்டுப் பணியாள் லூயியைக் குறிப்பிடுகிறதோ என யென் யென் நினைத்தாள்) நீயோ, உயர் குடிப் பிறந்தவள். வட திசையில்தானே ராஜ பீடம்

இருக்கிறது. உனக்கு சந்நியாசத்தில் பற்று ஏற்பட்டு நிர்வாண நிலை (துறவற நிலையை) அடையும் மார்க்கத்தைத் தேடுவாய். பிறந்தவுடன் மும்முறை அழுதேன் என்பது உலக பாசம் இன்பம் இவைகளில்பற்று இல்லை என்பதைக் காட்டுகிறது. இவ்வளவுதான் நான் சொல்லக் கூடும்.' என்றார் ஜோதிடர்.

"ரொம்ப வந்தனம். பெரியவரே" எனக்குக் கண் திறந்து விட்டீர்கள். உங்கள் தீர்க்க தரிசனத்தை நான் எல்லோரிடமும் சொல்லி, உங்கள் புத்தி தீக்ஷண்யத்தைப் பாராட்டுவேன். தாங்களே சிறந்த அறிவாளி" என்று வணக்கமாகச் சொன்னாள். சுவரருகே இருந்த வேலைப்பாடமைந்த தட்டத்தில் வெள்ளி நாணயத்தை வைத்தாள். வெகு நாட்களாக சேர்த்த பணம் அது. புது வருஷத்திற்கென மீத்து வைத்திருந்த பொக்கிஷமே, ஜோதிஷரிடம் காணிக்கையாகப் போய்ச் சேர்ந்தது. அவள் பணத்தை வைத்தது அந்தப் 'பேசும் தெய்வ'த்திற்கே தெரியாது. அவ்வளவு நாசுக்காகச் செய்தவள், வந்த சுவடே தெரியாமல் போய் விட்டாள்.

ஊருக்குத் திரும்பினால் நேரமாகிவிடும் என்று தெரிந்தும், கோவிலுக்குப் போகாமல் ஊருக்குத் திரும்ப மனச் சாட்சி இடம் கொடுக்கவில்லை. மனசைச் சாந்தப்படுத்தவாவது கோவிலுக்குப் போக நினைத்தாள். ஆனால் அதற்கு நேரம் இல்லை.

சூரியன், மேலத் திக்கில் ஆழும் நேரம். ஆகவே நேரடியாக வீட்டிற்கே திரும்பினாள். பசிம்புல் வெளியிலே நடந்து வருகிறாள்.

வரும் வழியில், யாரோ ஒரு மனிதன் தன்னை நோக்கி வருவதைக் கண்டாள். உள்ளங்கை குவித்து நெற்றியில் விழும் வெயிலை மறைத்துப் பார்க்கிறாள். ஆகா! அந்தக் குறும்பன் ஹாயி வந்து கொண்டிருக்கிறான். அவளை அடையாளம் கண்டு கொண்டவன் போல, விரைவாக வந்து கொண்டிருந்தான். நடை வேகத்தில் புழுதி பறந் தது. சிலகாலமாக, அவன் வேலையைவிட்டு விலகியது முதலாய் அவனை சந்திக்கவில்லை. இன்று தான் பார்க்கிறான். ஏதோ யுகக் கணக்காக சந் திக்கவில்லையே என்ற தவிப்பு. அடுத்த கணம்.

அடுத்த கணம் அவள் எதிரே வந்து நின்றான். கால தேவனின் சித்துவேலையோ என்னவோ? ஒரு காலத்தில் குறும்பின் உருவகமாக இருந்த ஹாயி முற்றிலும் மாறிப் போய்விட்டான். ஒல்லி யாக நெட்டை விட்டிருந்தது தேகம். கன்னங்கரிய தலை ரோமம். கண்களில், முன்னைவிட ஒளியும் சக்தியும் தெரிந்தன. அகலமாகக் கூடத் தோன் றிற்று கண். அவனுடைய நீண்ட நீலநிற கோட்டும் பட்டுச் சட்டையும், அவனை ராஜகுமாரனாகத் தோற்றம் கொடுத்தது. ஆனல் ராஜகுமாரனைவிட புத்திசாலித்தனமாக அவள் கண்களுக்குப் பட்டது. ராஜகுமாரனுக்கும் அவளுக்கும் யாதொரு வித்தி

யாசமும் கிடையாது என்பது யென் யென் எண்ணம்.

யென் யென், நாணத்தால் பூமியைப் பார்த்தாள். "ஆமாம்: விதிதான் அவனைக் குறுக்கே இழுத்து வந்துவிட்டது" என்ற நினைப்பு எழுந்தது. அந்தப் 'பேசுந் தெய்வம்' சொல்லியவை உண்மையாகி விட்டதே. ஜோதிடர் குறித்த நபர் 'இவன்தானோ?' என்று நாணத்தோடு தலை நிமிர்ந்து பார்த்தாள்.

பேசுவதற்கு நாவு கூசிற்று. தட்டுத் தடுமாறி, 'ஹாயி, உன்னைப் பார்த்தேனே, ரொம்ப பாக்கியம் செய்தேன். நம் சந்திப்பு கனவு மாதிரி இல்லையா? ஏன் அப்படித்தானே?' என்றாள்.

"அதுவும் இந்த மாதிரி உல்லாஸமான நாளில் சந்தித்தது கனவாகத்தான் இருக்கிறது" என்று சிரித்துச் சமாளித்தான்.

"ராஜகுமாரிக்கு, புஷ்பித்த பூக்கள் இருந்தால் சூட்டலாமே" என்று சொல்லிய ஹாயி, திடீரென குரலைத் தாழ்த்தி ரகஸியம் பேசுகிற பாவனையில், "அதோ பார் கொடியில் (மருக்கொழுந்து போன்றது) நல்ல பச்சை" என்றான்.

எட்டிப் பாய்ந்து வேலியிலே படர்ந்திருந்த பசுந்துழாயைப் பறித்தான். தளிர்கள் பசுமையாக இருக்கின்றன. "இதிலே ஒரு கிரீடம் செய்யப் போகிறேன். உனக்குப் பிடிக்குமோ?" என்று கேட்டான்.

தலையைத் தொங்கவிட்டு பதில் பேசாது நிற்கிறாள் யென் யென். ஆனால், இதழ்களிலே புன்னகை மலர்கிறது. நெட்டையாக இருக்கும் லூயி குனிந்து அவள் கண்களை கூர்மையாகப் பார்த்தான். கண்களும் சிரித்துக் கொண்டிருந்தன. "ஏனம்மா, உனக்குப் பிடிக்குமா?" என்று மீண்டும் கேட்கிறான். அவள் பதில் சொல்ல யத்தனிக்கு முன்பாகவே, ரோஜா நிற கன்னங்களிலே முத்தமளித்து விட்டான்.

'என்ன செய்கிறாய்? இந்தா குறும்புக்காரா?' என்று கோபக் குரலில் அதிகாரம் செய்கிற தோரணையைக் காட்டினாள்.

'யாராவது பார்த்து விட்டார்கள் என்று வைத்துக் கொள்'

'என்னை ஒரு ராஜகுமாரி வைதாள் என்று சொல்லுவேன்' என்றான் லூயி. தைரியங் கொண்ட பயல் தான்.

அவன் பிடியிலிருந்து விடுவிக்க முயற்சி செய்தவள் சிரித்தபடியே ' இன்னொரு முறை அப்படிச் செய்து விடாதே ' என்றாள்.

'எப்பொழுதும் தங்கள் உண்மையுள்ள ஊழியனாக இருப்பேன்' என்று பணிவாகச் சொன்னான் லூயி.

இருவரும் நடந்தனர். அவர்கள் உல்லாசப் பேச்சு, புஷ்பங்கள், மேகங்கள், பட்சி ஜாலங்கள் வடக்கத்திச் சீன பேரிக்காய் முதலானவைகளைப்

பற்றியெல்லாம் மனோகரமாக சுற்றிச் சென்றது. அவளுடைய வாத்தியாருக்கென கொடுக்கப்படும் உயர்ந்த டீயைப் பற்றியும் பேசினார்கள். வாத்தியார் நினைப்பு வரவே, "ஓகோ, உனது ஆசிரியர், பாவம், இரண்டு வருஷத்திற்கு முன்பாக ஓய்வு பெற்றாரல்லவா? இப்போது வாத சேட்டையில் அவதிப் படுகிறார். அவருக்கு டீயும் பிடிக்கவில்லை. உணவிலும் விருப்பம் இல்லை. காலம் இருக்கிறதே, நம் வாழ்வை எப்படியெல்லாம் மாற்றங்கள் செய்கிறதோ? எவ்வளவு பெரிய மாறுபாடுகளை உண்டாக்குகிறது. யென் யென், நீ என்ன சொல்லுகிறாய்?' என்று லூயி கேட்டான்.

திடுக்கிட்டு, சட்டென்று நின்றாள் யென் யென். கருங்குருவியின் சோக கீதம் அவர்கள் பேச்சை தடை செய்தது.

காலம், வயோதிக நிலைமைக்குச் செய்யும் இடுக்கண் பற்றி லூயி சொன்னானே, அச் சொல்லிற்கு அப்பறவையின் கீதம் முத்தாய்ப்பு வைப்பது போலிருந்தது. பெருமூச்சு பலமாக எழவே, "வீடு நெருங்கி விட்டது. இங்கே நாம் பிரிய வேண்டியது தான்" என்றாள்.

" மீண்டும் உன்னைச் சந்திக்கும் புண்ணியமும், சந்தர்ப்பமும் எனக்கு கிடைக்குமோ?" என்று வருத்தத்தோடு கேட்டான்.

" சரி " என்றவள் சிறிது நேரம் ஆலோசனை செய்து " மலையுச்சியிலுள்ள எனது மூதாதை

களின் கல்லறைக்கு வேனில் காலத், திருவிழாவின் போது மலர் சமர்ப்பிக்க வருவேனல்லவா? அப் போது சந்திக்க நேரலாம்'' என்றாள்.

விரைவாக நடந்து போய்க் கொண்டிருந்தாள் யென் யென்.

தனது நண்பன் லவோ வாங், நகரத்திற்கு தானும் போக இருந்ததாகவும், ஏதோ கடைசியாக தான் போகாமல் யென் யென் மட்டும் தனித்துப் போயிருப்பதாகவும் சொல்லியதற்கு ம்ன தார வாழ்த்தினன். இந்த விஷயம் கேள்விப் பட்டதும் தன் நண்பன் ஒருவனைச் சந்திக்கப் போவதாக லவோவாங்கிடம் ஒரு பொய் சொல்லி, பச்சைப் பசிய வயல்களுக்கு ஊடாக வந்தவன் அவளைச் சந்தித்தான்.

*　　　*　　　*

இப்படி இருக்கிற போது வீட்டிலே அவளு டைய தாயும் தகப்பனும் ஒரு கூட்டமே கூடித் தர்க்கம் செய்தார்கள். "எல்லாம் சரி" நம் குழந் தைக்கு தன் வருங்கால வாழ்க்கையில் அக்கறை வந்துவிட்டது. கடவுளின் அனுக்கிரகம் வேண்டி, இன்று டவுன் பக்கம் போயிருக்கிறாள். நான் முன்புசொன்ன சாயோ வீட்டார், தம் மகனுக்கு ஒத்துக் கொள்ளுவார்களா என்று தாங்களும் கடிதம் எழுதிப் பாருங்கள்'' என்று ஆரம்பித் தாள்.

அறிஞர் கொஞ்ச நேரம் முகத்தைச் சுளித்து, கை விரலால் மேஜையைக் காரண காரியமின்றி தட்டினார். உடனே ஒரு பிரஷ் (பேனா) எடுத்து ஒரு கடிதம் எழுதுகிறேன் " என்றார்.

கடிதம் முடிவதற்கு ரொம்ப நேரம் பிடித்தது. அதிலுள்ள நடையும் மரபும் பண்டையப் பெருமையை நினைவூட்டின. அக்கடிதத்தின் சாரம் இது தான்.

"எனது குமாரி யென் யென் நான்கு புஸ்தகங்கள், ஐந்து காவியங்கள், படித்து நமது குருநாதர் கன்பூஷியஸ் அருளிய பொன் மொழிகளையெல்லாம் புரிகின்ற பக்குவத்தை அடைந்து விட்டவள். அவள் போடுகிற பூவேலை, தைக்கும் தையல் வேலைகளைப் பார்த்தால், இணைத்துத் தைப்பதிலும், நிறங்களை சம்மேளப் படுத்துவதிலும் தேர்ச்சியடைந்தவள் என்று புலனாகிறது. இப்போது அவளுக்குத் தெரிய வேண்டுவதெல்லாம், தங்கள் குடும்பத்தை எப்படி நடத்துவது, குடும்பத்திலுள்ளவர்களை எப்படி கண்ணியப்படுத்துகிறது, என்பதையே தங்களுடைய வருங்காலத்திய மருமகள் அறிய வேண்டும். இந்த விஷயத்தில் நான் எதுவும் செய்ய முடியாது தானே.''

கடிதத்தை யென் யென் தாயார் படித்து ஆமோதிப்பதற்காக அவள் கையில் கொடுக்கப் பட்டது. அதிலுள்ள வாசகச் சிறப்பிற்காக தாயார்காரியிடம் கொடுத்தார். தாயார் படித்து

விட்டு அக் கடிதத்தின் குறைபாடு, ஒன்றே ஒன்று யென்றும், யென் யென் எப்பேர்ப்பட்ட அழகி யென்றும், அந்த அழகின் வர்ணனை சேர்க்கப்பட வில்லை யென்றும் குறை சொன்னாள். அந்த மாதிரி எழுதினால் அது ரஸாபாசமாக தொனிக்குமென் றும் ரொம்பவும் கண்ணியக் குறைவென்றும் வாதாடினார். நேரடியாகச் சொல்லாமல், குறிப் பாக உணர்த்துவதே சிறந்த முறை என்பது அவர் கட்சி.

அப்படியே ஒப்புக்கொள்ளப்பட்டது. நீண்ட சிவப்பு கூடு ஒன்றில் அக்கடிதத்தை அடைத்து, வேலைக்கார லவோ வாங் வசம் கொடுத்தனுப்பி னார்கள். சாயாவின் தகப்பனார் அதைத் திறந்து பார்த்து பதில் எழுதிக் கொடுக்க, அன்று மாலையி லேயே லவோ வாங் பதிலைப் பெற்று வந்தான். போக வர முப்பத்திரண்டு மைல் இருந்தும் அந்தி மயங்கும் முன்பாகவே பதிலும் தெரிந்தது.

சாயாவின் தந்தைக்கு கடிதத்தின் தாத்பர்யம் புரிந்து விட்டது. பதில் எழுதினார். “இந்த வரு ஷமே சுபயோக சுப தினத்தில் எனது புத்திரன் மகா சோம்பேறிக்கும், தங்கள் அருமாந்த புத் திரியை விவாகம் முடிக்க சம்மதிக்கிறேன், தாங்க ளும் தங்கள் மனைவியும் சம்மதித்தால்!”

“நான் ஏன் சம்மதிக்கக் கூடாது?” என்று யென் யென் தந்தை சொல்ல, “ஆமாம், நாம் ஏன் சம்மதிக்கக் கூடாது?” என்று சொன்னாள் தாய்.

வசந்தோற்சவம் நடந்த ஐந்தாம் நாள், திருமணம் முடிப்பது என உறுதி செய்தார்கள். யென் யென் எப்படியாவது விதி, கடைசி விநாடி தன் பக்கம் நின்று காப்பாற்றும் என்ற மனப் போக்கில் இருந்தாள்.

"எப்படி நடக்கும்? சாயாவிற்குத் திடீரென பெரிய அம்மை அள்ளிப் போட்டால், கலியாணம் நடக்காதபடி ஆகி விடுவான். நானும் நிச்சயிக்கப் பட்டபடி மணத்திற்கு உடன்பட வேண்டாம். கடவுள் இந்த மாதிரி உதவி செய்து திருமணத்தை தடை செய்வாரா?"

இந்த நினைப்போடு அந்த லூயி சந்தித்த நினைப்பும் எழுந்தது. முக்கியமாக தன் கன்னத் திலே கொடுத்த முத்தமே அதிகமாக நிறைந்திருந் தது.

வசந்தோற்சவம் வரவே யென் யென் லூயிக்கு வாக்களித்த நினைப்பு எழுந்தது. தாயினுடைய அனுமதியின் பேரில், கடைசி முறையாக பாட்டி யின் கல்லறையைத் தரிசிக்கப் புறப்பட்டாள். இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் பார்த்த படியே மலை மேல் எங்காவது வேலைக்கார லூயி இருக்க மாட்டானா, என்ற எண்ணத்தில் போய்க்கொண்டி ருந்தாள். ஒரு மட்டும் மலைச் சரிவில், பாட்டியின் கல்லறைப் பக்கமாக வந்தபோது அங்கே வேலைக் காரன் லூயி ஒரு பாறையின் மேல் பைன் மரத்தடி யில் தலைமேற் கையாக அமர்ந்திருந்தான். கன்னத்

தில் கை வைத்து, முழங்கையை காலில் ஊன்றிய படி சோகமே உருவாக இருந்தான்.

அவள் குனிந்து அவனைப் பார்த்த போது அவன் நிலைமை சோர்ந்து துக்கம் தாங்காமல் தவிக்கும் தாயற்ற ஒரு குழந்தை போல, அவள் கண்களுக்குப் பட்டது. காதில் மெதுவாக "என்ன லூயி? என்ன சங்கதி ? உன்னைப் பார்க்க எனக்குச் சகிக்க வில்லையே!" என்றாள்.

அந்த இளைஞன் துள்ளிக் குதித்து கண்ணைக் கசக்கினான். வாய் திறக்கவில்லை.

'என்ன விஷயம் லூயி?' என்று மிருதுவாக கேட்டாள் யென் யென்.

'உன்னைச் சந்திக்கும் ஆசை நிராசை ஆகி' விட்டது யென் யென். கிழட்டு லவோவாங் எல்லாம் சொன்னான். இன்னொருவனுக்கு நீ வாழ்க்கைப்படப் போகிறாய். இந்த எண்ணமே என்னைத் துளைக்கிறது; என்னால் தாங்க முடியவில்லை.' என்றான்.

'ஐயோ பாவம்' இதுதான் அவள் சொல்ல முடிந்த வார்த்தை. கண்ணீர்த்துளிகள், விழிகளிலே முத்து முத்தாகத் திரண்டு துளி துளியாக மண்ணிலே விழுந்தன.

சில விநாடி, பேச்சு மூச்சற்று இருவரும் நின்றனர்.

நம்பிக்கை பிறக்கும் தொனியில், 'நாம் எங்காவது கண் காணு இடத்திற்கு ஓடிப் போவோம். அங்கு இம்மாதிரி சம்பிரதாயங்கள் இருக்காது. அங்கே எளிய மக்களாய் வாழலாம். ஏழை பணக்காரன் என்ற பேதமின்றி வாழ்வோம். அறிவாளி, வேலையாள் என்ற பாகுபாடு இல்லாத, மூடப் பழக்கமற்ற, சுதந்தர பூமிக்குச் செல்வோம்' என்ருன். கடைசியாக ஏதோ சொல்லத் தயங்கிஞன். முகம் வெளிறி, உதடு சாம்பல் பூத்து, 'நான் உனக்கு தகுதியற்றவன், யென் யென்.' என்று சொல்லிய போது, தலை கவிழ்ந்தது. ஏதோ சவச் சடங்கில் தலையைத் தொங்கப் போடுவது போல இருந்தான்.

இந்தக் காட்சியை யென் யென் சகிக்க முடியவில்லை. இதயம் புண்பட்டது. 'என் இதயத்தின் அடியிலிருந்து மனப் பூர்வமாக உன்னைக் காதலிக்கிறேன்' என்று தென்றலை விட மிருதுவாகச் சொன்னுள். அவள் மனசிலே கன்பூஷியஸ் சொல்லிய, 'யோக்யமான ஒரு பெண், ஒரு முறையே தன் ஆயுளில் காதலிக்கிருள்' என்ற வரி ஞாபகத்திற்கு வந்தது.

'என் தேவதையே நீ' என்று சொல்லிய ஹாயி, கால் பணிந்து அவள் முன் மண்டியிட்டு, தலை வணங்கிஞன், பெரிய கவிஞன் போல. மடிக்குள்ளிருந்து கைக்குட்டை ஒன்றை எடுத்து — அது நன்கு மடிக்கப்பட்டிருந்தது—கை நீட்டி அவள் கையில் கொடுத்தான்.

" இந்த ஏழை தன் இதயத்தின் ஞாபகமாகக் கொடுக்கப்படும் பரிசு."

அப்படியே வாங்கி அந்த மடிப்புக் கைக்குட்டையை பிரித்தாள். " நரை—மூப்புத் தட்டும்வரைக் காதல் அழியாது'' என்ற லூயி எழுதிய எழுத்துக்கள். கனவில் விழிப்பவள் போல அந்த எழுத்துக்களைப் பார்த்தாள். என்ருே ஒரு நாள் காலையில், பனி பெய்த போது அதே எழுத்துக்களில், தான் பூவேலை செய்தது ஞாபகத்திற்கு வந்தது. அதே எழுத்துக்கள் அக் கன்னியின் இதயத்திற்கு அன்று தந்த இனிமையும், இன்று அது செய்யும் தொல்லையும் தெரிந்தன. புண்பட்ட இதயம், வர வரத் தணிந்து ஏன் இந்த புத்திசாலிக்காக, சில சமயம் முட்டாளாக இருக்கும் இந்த லூயிக்காக, இப்படி இவ்விதயம் துடிக்கிறது என்று, நினைவு படுத்திக் கொண்டாள்.

மெல்லிய காற்றுப் போல "எவ்வளவு அழகாக நீ இருக்கிருய்?'' என்று கூர்ந்து கவனித்துச் சொன்ஞன்.

கையிலிருந்து கைக்குட்டையை மடித்து, "நிஜமாகவா சொல்லுகிருய்'' என்று கேட்டாள்.

"என் இதயத் தளத்திலிருந்து சொல்லுகிறேன்''

"அப்படியானல் ஜாக்கிரதையாக வீட்டுக்குப் போக வேண்டும்'' என்று அவனைத் தூக்கி நிறுத்தியவள் "கடைசி நிமிஷத்தில் ஏதாவது நடந்தே

தீரும்......உன்னை நான் மனசாரக் காதலிக் கிறேன்'' என்றாள்.

"உண்மைதானா?" கண்களில் ஒளி தெறிக்க ஆச்சர்யத்தோடு கேட்ட லூயி, இதற்கு முன் அவ்வளவு ஆணித்தரமாக அவள் பேச்சைக் கேட்டதே யில்லை.

ஒரு வகையாக அந்த 'கடைசி நிமிஷம்' வந்து சேர்ந்தது. யென் யென்னைக் காப்பாற்ற எந்த விஷயமும் நேரவில்லை. சாயோ மீது சின்னம்மை கூட விளையாடவில்லை. விதிக்கு என்று, தனி வழி என்பதாக ஒன்று இருக்கிறதே. தங்கள் மூதாதையர் படங்களின் முன்னால் புது வீட்டிற்குப் போகும் தம்மகளின் க்ஷேமலாபத்தைக்கருதி தாயும் தந்தையும், வணங்கி யெழுந்தனர். அவளுடைய தமையன், வருவோர்களை வரவேற்றான். லவோ வாங் வந்த விருந்தினர்களை அறிமுகம் செய்து கொண்டிருந்தான். காலை நேரத்திலிருந்தே, அவன் சித்திகளோ, அத்தைகளோ இரண்டு பேர் மணப் பெண்ணுக்குச் சீவிச் சிங்காரித்தனர்.

'கன்னத்தில் குழிவு மட்டும் இருந்து விட்டால் சிரிக்கிற மாதிரி இருப்பாள்' என்று ஒருத்தி, மற்றொரு சிங்காரியிடம் சொன்னாள். அவளுக்கு எங்கிருந்து சிரிப்பு வரும்!

பாண்டு வாத்தியத்தின் இனிய ஓசை தொடர, சிரிப்பும் கொம்மாளமுமாக, சாயா வீட்டாரின் சார்பாக பலர் வந்து, யென் யென் பெற்றோரை

நமஸ்காரம் செய்தார்கள். அதில் ஒருவர் சர்வ கலாசாலையின் பரீட்சைத்தாள் குறிக்கும் பேரா சிரியர். வந்தவர் 'தங்கள் அருமருந்தன்ன குமா ரத்தியை, பெருமை வாய்ந்த எங்கள் சாயாவிற்கு மணப் பெண்ணாக ஏற்றுக்கொள்ளுகிறோம். இதன் அடையாளமாக இதோ மோதிரம்' என்று நீட்டி னார்.

தங்க மோதிரத்தை நாலாவது விரலில் போட்டதோடு, திருமண அலங்காரம் முடிந்த மாதிரியே. ஒரு சாய்வு மூடு நாற்காலியில் யென் யென் உட்கார்ந்து தன்னை மூடிக்கொள்ள, ஆனந்த பாஷ்பங்கள், உத்சாக மொழி, இவற்றிற்கு ஊடாக அவளைச் சுமந்து சென்றனர். ஆனால் அவளுடைய அம்மாவின் ஏக்கக் குரல்களுக்கு ஊடாக அவளைச் சுமந்து சென்றனர்.

சாயா வீட்டாரின் நடு ஹாலில் விருந்தினர்கள் மொய்த்திருந்தார்கள்.

தோழிகள் இருவருக்கு ஊடாக, பகட்டான ஆடை அணிகலங்கள் அணிந்து கம்பீரமாக நின் றான் மணமகன். நாற்காலியில் யென் யென் வந்து இறங்கியதும், மிகுந்த பரபரப்பு ஏற்பட்டது. மண மகனோடு, யென் யென் கைகோத்து ஜோடியாக பீடத்திற்கு நடந்தனர். எங்கும் நிசப்தம். சடங்கு நடத்தியவள் மணவிழாவை ஆரம்பித்தாள்.

"வானத்தையும் பூமியையும் வழங்கியவரை நாம் வணங்குவோம்"

பீடத்திலே முட்டுப் பணிந்து எழுந்தனர் மண மக்கள்.

"கலையையும், நாகரிகத்தையும் அழியாதபடி பாதுகாக்கும் சொர்க்கிய சக்கரவர்த்திக்கும் வணக்கம்"

மீண்டும் வணங்கி எழுந்தனர் மணமக்கள்.

"உங்களைப் பெற்றெடுத்து அறிவூட்டியவர்களுக்கு வணக்கம் செலுத்துங்கள்"

அவர்கள் முட்டுப் பணிந்து தலைவணங்கினர்.

"பந்து மித்திரர்கள், அழைக்கப்பட்ட விருந்தினர்களுக்கு வணக்கம் செலுத்துங்கள்"

திருமணம் முடிந்தது என்பதைக் காட்டுவதற்கு, சடங்கு நடத்தும் தலைவர்கள் சொன்னார்கள்.

"ஒருவருக்கொருவர் உங்கள் திருமணத்தை முன்னிட்டு வணக்கம் செலுத்துங்கள்".

முதன் முதலாக யென் யென் தலை வணங்கினாள். அவள் தலை வணங்கிய நிமிஷத்தில், கூட்டத்தில் ஏதோ பர பரப்பு. வாலிபன் ஒருவன் கீழே விழுந்து மூர்ச்சையுற்று, கனவில் பிதற்றுபவன் ஆயினான்.

'எனக்குத் தாங்க முடியவில்லை. என்னால் தாங்க முடியாது'

வந்திருந்த எல்லோரும் எதிர்பாராத இந்தச் சம்பவத்தால் திகைப்படைந்தனர். லவோ வாங்,

மூர்ச்சையுற்றது ஹாயி என்று அறிந்து, அவனைச் சமாளிக்க ஓடினான்.

"நான் சாகவே போகிறேன். நான் அவளைக் காதலிக்கிறேன்."

"மணப் பெண்ணைக் காதலிக்கிறேன்" என்று வாதனையால் கத்தினான் ஹாயி. கூட்டத்தில் இருந்தவர்களால் இந்தப் பைத்தியக்காரனின் சொல்லைக் கேட்டு சிரிப்பு அலை மோதிற்று. ஆனால் மணமகன் முகத்தில் ரத்தம் சுண்டி முகம் வெளுத்தது.

"முட்டாள் தனமாக உளறாதே. சிகித்சை செய்கிறேன் வா. புத்தி தெளிந்ததும் உன் உடம்பு சௌகரியம் ஆகிவிடும்"

லேவோ வாங், அவ்விளைஞனைத் தன் கையில் தூக்கி, அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தினான். அதிசயமும் சிரிப்பும் கேட்டுக் கொண்டிருந்தன.

இந்த அசந்தர்ப்பம் நடந்த பின்பு, மணச் சடங்குகள் எப்படியோ நடந்தேறின. வந்த கூட்டம் கலைந்த போது யாரோ "அந்தப் பணியாள் செய்தது தான் முட்டாள்தனம். என்றாலும், மணப் பெண் இக்கூத்திற்கு ஏன் கண்ணீர் வடித்தாள்?" என்ற பிரச்னையை கிளப்பினார்.

நடுநிசி வந்த போது, பந்துக்கள், மித்திரர்கள், வந்த விருந்தாளிகள் எல்லோரும் போய்ச் சேர்ந்தனர்.

மணத் தம்பதிகள் தனிமையில் விடப்பட்டனர். நாணம் நிறைந்த முகத்தோடு, கட்டிலின் ஓரமாக அவள் அமர்ந்திருக்க, மணமகனோ எரியும் இரு மெழுகுவர்த்திகளுக்குப் பின்னால் ஒரு மேஜையை ஒட்டி நின்றான். இருவரும் ஏதோ யோசனையில் ஆழ்ந்து நிசப்தமாக இருந்தனர். கலியாணம் என்றால், அது ஏதோ தவிர்க்க முடியாத விதியின் கூற்று என்றும், மனித சக்தியால் தவிர்க்க முடியாது என்றும் நினைக்கிற சுபாவம் தன் படிப்பு முறையால் அறிந்து கொண்டவள். இதற்கு மாற்றாக அற்ப ஆயுளோடு மடிவதுதான் நல்ல முடிவு என்று வசந்தோற்சவத்தில் லூயியை சந்தித்த போது நினைத்த காரியந்தான். அந் நிலைமைக்கு ஆளாக நேர்ந்தாலும், கலியாண சமயத்தில் நிகழ்ந்த அந்த மனக் கஷ்டம்தரும் சம்பவம் ரொம்பவும் வாட்டிற்று. ஆனால், எப்படியும் விதியின் - போக்கை மாற்ற முடியாது என்பதை உணர்ந்தாள்.

இரவு போய்க் கொண்டிருக்கிறது. மணமகன் ஆடாமல் அசையாமல் கடுமையான முகத்தோடு அப்படியே நிற்கிறான். கர கரப்பான குரலில், "அந்தப் காலிப்பயல், பலர் முன்னிலையில், கலியாணத்தின்போது மூர்ச்சையடைந்தானே, அவனை நீ அறிவாயா?" என்று வெடுக்கெனக் கேட்டான் சாயா.

திக்கித் திக்கி நடுங்கியவாறே "அவனை எனக்குத் தெரியும்" என்றாள் யென் யென்.

" சிறு பிள்ளை முதலே, அவன் என் தந்தை யின் பணியாளனாக இருந்தவன் "

" அப்படி இருந்தான், இருந்தானா அவன் ?" என்று நையாண்டியாகக் கேட்டான் மணமகன். திடீரென, கட்டிலில் ஏகிறிக் குதித்துப் படுத்தான்.

எரிந்து கொண்டிருந்த மெழுகு வர்த்திகளை இமைக்காதபடியே பார்த்தாள் யென்யென். அந்த அறையில் இருள் வர வர அதிகமாகக் கவிந்தது. எரிந்த மெழுகுவர்த்தி தேய்ந்து அணையலாயிற்று. கடைசிப் பொறி துள்ளித்தெறிக்கவே இருள் பூர்ண மாக நிறைந்தது. பேப்பரால் சிங்காரிக்கப்பட்ட ஜன்னலில் வர வர ஒளியின் நிழல் தெரியவே, கனவு நனவாகி, நனவு கனவாகி, முடிவில் விடி வைக் கண்டாள். காலையில் உதயம்.........

மூன்றும் நாள், இரண்டு மூடு நாற்காலிகளை அனுப்பி மணமக்களை கிருகப்பிரவேசத்திற்காக அழைத்தனர் பெண் வீட்டார். போவதற்கு மன மில்லாமல், திடீரென தலைவலியென சாக்குச்சொன் ஞன் சாயா. கலியாணமானது முதலே அவ னுக்குத் தலைவலி பிடித்துக் கொண்டதே.

சாயின் தந்தை மன்னிப்புக் கோரி பெரிய கடிதம் எழுதி, மகனுக்குப் பதில் அதை அனுப்பி வைத்தார். ஆகவே வழக்கத்திற்கு மாருக யென் யென் மணமகனை விட்டுத் தனியாக, வெறும் மூடு நாற்காலியோடு வந்து சேர்ந்தாள்.

வந்த யென் யென்னை துக்கமான புன்முறுவலோடு தாயார் வரவேற்றாள். கலியாணப் பந்தலில் நடைபெற்ற விஷயம் காதில் பட்டிருந்ததால் இம்மாதிரி நடக்குமெனத் தாயார் எதிர்பார்த்தது தான். அவள் தந்தை ரொம்பவும் கஷ்டப்பட்டார்.

மருமகன் வீட்டிற்கு வராதது, தம் குடும்பத்தை அகௌரவப்படுத்தியது அல்லவா? போதாக் குறைக்கு கன்பூஷியஸ் பரம்பரையில் வந்த அறிஞன் என்பதை அவமதித்ததும் ஆகிறது என்று மனம் நொந்தார். தமக்குச் சம்பந்தி எழுதிய கடிதத்தை எடுத்துப் படித்ததும், முகம் சிவந்து, பிறகு வெளிறிற்று. இந்தச் சமயம் தாயும் மகளும் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டனர். அவர்கள் கண்கள் ஒன்றுக்கொன்று பேசிக் கொண்டன. அவைகள், மூன்று வயதாக யென் யென் இருந்தது முதலே பேச ஆரம்பித்தவைகள் தானே. உண்மைகளைச் சொல்லின யென் யென் கண்கள்.

பெருமூச்சு விட்ட தகப்பனார், தனக்குள்ளாகவே சொல்லிக் கொண்டார். 'எல்லாம் என்மேலுள்ள குற்றம். என் பெண்ணிற்கு எப்படி கல்வி போதிக்கிறது என்று எனக்குத்தெரியாத குற்றம்.'

சிறிது நேரம் மௌனமாக இருந்தவர், மீண்டும் 'நான் படித்தவன் அன்று அறிவாளி அல்ல. என் குடும்பத்தையே நிர்வகிக்கத் தெரியாதவன். நானா மாஜிஸ்டிரேட் உத்தியோகத்திற்கு லாயக்கு? நான் ஒரு வஞ்சகன்' என்றார்.

மறுபடியும் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். மயங்கிய கண்கள் வர வரச் சிவந்து ரத்தம்போல்மாறின. பின்னர் கண்ணீர்த்துளிகள் பிரகாசித்தன. 'நான் கன்பூஷியஸ் சித்தாந்தங்களைப் பின் பற்றும் சிஷ்யன் அல்ல. அவைகளை அவமதித்து விட்டவன்' என்று தனக்குத்தானே சொல்லி, முகத்திலே அறைந்து கொண்டார்.

யென் யென் புலம்பித் துடித்து அவர் பாதங்களிலே வந்து வீழ்ந்தாள். 'எனது தந்தையின் அவமானத்திற்காக,என் உயிரை நான் துறப்பேன், என்று புலம்பினாள்.

'அவமானத்தைப் பூசி மெழுகிவிட முடியாது' அம்மா' என்று மெதுவாக அந்த வயோதிகர், மகளிடம் சொன்னார். அதே சமயம் மகளின் பரிசுத்தமான முகத்திலே சிறு குழந்தையின் மாசற்ற தன்மை இலங்குவதைக் கண்டார். நீண்ட பெருமூச்சும் சோகமும் நிறைந்த குரலில், 'உனக்கு நிச்சயம் செய்யப்படாத அந்த வேலைக்காரனை நீ ஏன் காதலித்தாய் ?' என்று கேட்டார் சோகத்தோடு.

'எனக்கே காரணம் தெரியாது, அப்பா'

'இதைப் பார்' என்று அந்த வயோதிக மனிதர், சாயாவின் தகப்பனார் அனுப்பிய கடிதத்தை எடுத்துக் காட்டினார். தாயார், தலையை நீட்டி மகள் கையிலிருப்பதைப் படித்தாள். எளிமையான, சிறு சிறு பாராக்கள் உள்ள கடிதம்.

'கன்பூஷியஸ் பரம்பரையில் வந்த தங்களிடம் எனது நோக்கங்களை விரிவாக விவாதிக்க வேண்டிய தேவையில்லை. எல்லா விபரமும் தாங்கள் தெரிந்ததே. இக் கலியாணத்தை நடத்தி, இம் மாதிரி தாங்கள் வேடிக்கை செய்ததின் அர்த்தம் எனக்குப் புலனாக வில்லை. எங்கள் குருவின் உபதேசங்களே எங்களுக்கு வேதம். அதுவே எங்கள் கடைசி படிப்பு. மீண்டும் அபகீர்த்திக்கு, நாங்கள் ஆளாக வேண்டாம் என்று நினைக்கிறேன்.'

கடிதத்தைப் படித்து முடித்த பின்னர், நாடி தளர்ந்து 'கடைசி வரியின் அர்த்தம் விளங்கும் என்று நினைக்கிறேன்' என்று அசந்து சொன்னார் யென் யென்னின் தந்தை.

விம்மல்கள் வலிப்பாக மாறிவிட்டது போல யென் யென் தனது தந்தையின் முழங்காலில் தன் முகத்தை மோதி அழுதாள். அவர் கேள்விக்குப் பதில் சொல்ல முடியவில்லை.

அவளைத் தூக்கி உச்சி மோந்து, அன்போடு அணைத்துக்கொண்டாள் தாய். 'அப்படி கடினமாகச் சொல்லாதீர்கள். என் குழந்தை இன்னும் வாழவே ஆரம்பிக்கவில்லை.'

கரிய நீண்ட கூந்தலை, தாய் தன் விரல்களால் கோதி விட்டு, 'அம்மா, கண்ணு, உனக்காக ஒரு நாளும் எங்கள் அன்பு மறையாது. அழாதே. என்றும் நீயே எங்கள் அன்புள்ள குழந்தை. உனக்கு

வீட்டில் என்றும் இடமுண்டு, என்று காதிலே சொன்னாள். அவள் குரலிலே அன்பின் கனிவு தொனித்தது.

மேன் மாடம் முன் போலவே இருக்கிறது. மாபிள் மரங்கள், இரு ஜன்னல்களுக்கு ஊடாக பழையபடியே நிற்கின்றன. தூரத்திலே உள்ள மலையும், நகரும், நதியும், அணையும் அப்படி அப்படியே இருக்கின்றன. யென் யென் மட்டும் மாறிப் போய் விட்டாள். சாயா அவளை நிராகரித்து விட்ட காரணத்தால், அவள் தந்தையின் கௌரவம் தவிடு பொடியாகி விட்டது. இன்னொரு மனிதனோடு ஓடிப் போய், இன்னும் தகப்பனார் கௌரவத்தைப் பாழ் படுத்த நினைக்க வில்லை. அந்த நினைப்பே உடலை உலுக்கியது. ஏன்? பயமொன்றும் தனக்கே புரியவில்லை. "ஆகவே என் வாழ்வு இத்தோடு முற்றும்" என்று தன் மனதிற்குள் முணு முணுத்தாள்.

வாழ்வின் சோகத்திற்கு, சாவு மட்டும் முடிவு ஆகுமா? அதை விட்டுத் தப்புவதற்கு பக்தியே சிறந்த மார்க்கம். 'அடடா, அன்று சொன்னாரே, என் வாழ்விற்கு பக்தியே சிறந்தது என்பதாக அந்த ஜோதிஷர். அவர் சொன்னது பலித்து விட்டது. உலக பந்தங்களிலிருந்து விலகி, தனிப்பட அடைபட்டு கண் மூடி மன சுத்தியோடு, புத்தபிரானின் அருளைப் பெற சிந்தனை செய்ய வேண்டும். உலகம்போற்றும் உத்தம புத்தரே, நீரே எனக்கு, துக்கமே இல்லாத ஓர் இடத்திற்கு வழி காட்டி. மறு

பிறவியாக அங்கு நான் ஜனிக்கவேண்டும்' என்று சொன்னாள்.

அவளுக்கு இப்போது ஒரே ஆனந்தம். இந்த உலகத்தின் அற்ப சம்பிரதாயங்களை, சாயா வீட்டார் இழைத்த ஆஷாடபூதித்தனத்தை யெல்லாம் அற்பமானதாக நினைத்தாள். தன் தாயிடம் சென்று தன் மனதைத் திறந்து சொன்னாள். பெண்ணுடைய ஆனந்த நிலையைக் கண்டு இன்பமடைந்தாள் தாய்.

மலைமேலுள்ள வெண்மேகக் கோவிலின் கன்னிமாடத் தலைவிக்கு, தாய் எழுதித் தந்த அறிமுகக் கடிதம் பெற்ற யென் யென், ஒரு நாட்காலை புறப்பட்டாள். அக் கன்னிமாடத் தலைவி, நன்கு படித்துத் தேர்ந்த பௌத்தஞானி. இந்தத் தடவை வெண்மேகக் கோவிலுக்குப் புறப்பட்ட போது லவோ வாங் துணையை அவள் மறுக்க வில்லை. விசுவாசமுள்ள வேலைக்காரன், பெட்டியையும் அடுக்கடுக்கான புஸ்தகங்களையும் சுமந்து சென்றான்.

கோவிலிலே அடைந்தனர். யென் யென் பல தடவை கதவைத்தட்ட, அந்த மலைப் பிராந்தியத்தில் எங்கும் எதிரொலிகள். வயதான கிழவி, துறவி ஒருத்தி வந்து கதவைத் திறந்தாள். கையிலிருந்த அறிமுக கடிதத்தை யென் யென் மடத்துத் தலைவியிடம் கொடுக்க எல்லா சரித்திரமும் புரிந்துகொண்டாள் தலைவி.

யென் யென் முகத்தை நோக்கிய தலைவி, 'உனக்காக அறை ஒன்று தருகிறேன். உள்ளே வா, போவோம்' என்றவள், லவோ வாங் பக்கம் திரும்பி 'பெரியவரே, தாங்கள் போகலாம். இங்கு ஆண் பிள்ளைகளுக்கு இடம் கிடையாது' என்று சொன்னாள்.

அந்தக் கிழவன் மலையிலிருந்து இறங்கிப் போய்க் கொண்டிருந்தான். வளைவு வளைவாக நெளிந்தோடும் பாதையை யென் யென் பார்த்தாள். கனவுப் பதுமையாக நிற்கிறவளைப் பார்த்து 'ஏனம்மா, மனித உறவின் பாசத்தில் உனக்கு இன்னும் ஆசை குறையவில்லையா?' என்ற கேள்வியைப் போட்டாள்.

'இல்லவே இல்லை.' யென் யென் சொல்லிய விதத்தில் அழுத்தமும் தீர்மானமும் நிறைந்திருந்தது. மனதை பாறையாக்கிக் கொண்டனள் போலும்.

அவளுக்குக் கொடுத்த அறையில் காகித வேலைப்பாடமைந்த இரு ஜன்னல்கள். ஒரே படுக்கை, அதுவும் வாசலுக்கு நேராக. எங்கும் அமைதியும், நிம்மதியும் தருகின்ற சூழ்நிலை. முற்றிலும் வேறான ஒரு லோகத்திற்குள் பிரவேசித்துத் தியானத்தில் ஆழ்ந்து விட்டாள். தியானம் அவளுக்குப் புதிதாக இல்லாமல், பழக்கப்பட்டு விட்டதாக இருந்தது.

வந்த மூன்றும் நாள், வெளிக் கதவில் யாரோ மெதுவாகத் தட்டும் ஓசை. மெதுவாகத் தட்டினு லும், பின் பக்கம் தோட்டத்திலே நின்ற யென் யென் காதில் கேட்கவே செய்தது. யாரோ ஒரு வாலிபன் அவளைப் பார்க்க விரும்புவதாக கன்னி மாடத் தலைவி வந்து சொன்னுள். கன்னிமாடத் தலைவியுடன், வந்த வாலிபனைக் காணச் சென்றுள் யென் யென். வந்தவன் பணியாளன் லூயி. ஏதோ நோய்வாய்ப்பட்டவன்போல் மெலிந்து வெளுத்துப் போயிருந்தான்.

அவன் வரவைக் கண்டு ஆச்சர்யமடைந்த யென்யென், 'இங்கே எப்படி வந்தாய்?' என்றுள்.

" அன்புமிக்க லவோவாங்" இந்த இடத்தில் நீ இருப்பதாக சொன்னுன். உன்னிடம் கடைசி யாக விடைபெற்றுப் போகவே இங்கு வந்தேன்."

"நீ இவ்வூரை விட்டு, போய்விடவே போகி ருயா?"

"மஞ்சூரியாவிலுள்ள என் காணி நிலத்தைப் பாத்யதை கொண்டாடப் போகிறேன். அதுவும் பாழான தரிசு. அந்த நாட்டின் குளிர் எனக்கு ஹிதமாக இருக்கும். அந்த விளை நிலத்திலே பனிக் காற்று, கொடிய பனி மழை, காட்டுக் குதி ரைகளின் கனைப்பு எல்லாம் எனக்கு ஆறுதலாக இருக்கும்"

எவ்வளவோ அந்த இளைஞனிடம் சொல்ல யென் யென் நினைத்திருந்தாள். ஆனல், பேசாமல்

மடத்துத் தலைவியின் அருகே நின்று கொண்டிருந்தாள்.

சட்டென ஒரு நினைப்பு வந்தது யென் யென்னுக்கு. "கொஞ்ச நேரம் நில்" என்றவள் தன் அறைக்குள் போய், வசந்தோற்சவ சமயத்தில் தனக்குப் பரிசளித்த அந்தக் கைக்குட்டையை எடுத்து வந்தாள். அவன் கையில் நீட்டினாள்.

வாலிபன் கைக்குட்டையைப் பிரித்தான். புத்தம் புதிதாக, அவன் கொடுத்த மேனியாகவே இருந்தது. அதிலே வரைந்திருந்த 'நரை மூப்புத் தட்டும்வரை காதல் அழிவதில்லை" என்ற எழுத்துக்கள் சிறிதும் மங்காமல் முன்னைப்போலவே பகட்டாக இருந்தன. அதை ஒரு பொக்கிஷம் போலவே அவள் போற்றி வந்திருக்கலாம். அவனுக்கு அழ வேண்டும்போல இருந்தது.

தன் உணர்ச்சிச் சுழிப்பை அடக்கிக் கொண்டு "இதை நீ தொட்ட காரணத்திற்காக இதிலே உன் கடைசி ஞாபகார்த்தமாக ஏதாவது எழுதக் கூடாதா?" என்றான்.

"ஆகட்டும், அப்படியே செய்கிறேன்"

இவ்வாறு சொல்லியவள் தன் அறைக்குள் நுழைந்து பிரஷ் ஒன்றை எடுத்து வந்தாள். ஹாபி எழுதியிருந்த வாசகத்திற்கு அடியிலே எழுதினாள்.

"நரை மூப்புத் தட்டும்வரை காதல் அழியாமல் இருக்க வேண்டுமென்பது கட்டாயமல்ல"

துக்கம் நிறைந்த கண்களோடு மேற்படி வரிகளைப் படித்தனன். குழந்தைபோலத் தலையை உயர்த்தி கண்களால் வெறித்துப் பார்த்தவன் ' நீ உண்மையாகவே இப்படி நினைக்கிருயா.......யென் யென் ?' என்ருன்.

மடத்துத் தலைவி குறுக்கிட்டு, " இளைஞனே, இம்மாதிரிக் கேள்விகளுக்கு, தர்க்கம் செய்யும் இடம் இது வன்று. யென் யென் புத்த பகவானைத் தியானம் செய்யும் நேரம் வந்து விட்டது என நினைக்கிறேன் ' என்ருள். வெளிப் பக்கம் லூயி நிற்கும்படி, மெதுவாக கதவைச் சாத்திஞள் தலைவி.

தனிமையான அந்தக் கட்டிடத்தையும், மௌனமாக நிற்கிற மரங்களையும் அலை அலையான மலைத் தொடர்களையும் பார்த்தபடியே ஒரு கணம் பிரமித்து நின்ருன். பிறகு, மலை யிறக்கத்தில், நிதானமின்றி தள்ளாடியபடியே, கிழவனைப்போல நடக்க ஆரம்பித்தான் லூயி.

முற்றும்

# விரைவில் வெளிவரும்

## "நான் கண்ட சுபாஷ்"

வங்கக் கவிஞர்
டிலிப் குமார் ராய் எழுதியது

தமிழில் தருபவர்:
சு. நடராஜன்

ரூ. 3/-

## "ஆண்மையும் வெற்றியும்"

[ஆழ்ந்த சிந்தனைக் கட்டுரைகள்]

—எமர்ஸன் எழுதியது—

தமிழில் தருபவர் :
வி. ஆர். எம். செட்டியார்
சு. நடராஜன்

[ஆண்மையும் வெற்றியும் மக்கள் வாழ்வில் இன்றியமையாத தன்மைகள். மனிதன் மனிதனாக வாழ்வாங்கு வாழ வேண்டின், இவ்விரு குண நலங்களும் கைவரப் பெறவேண்டும். அமெரிக்க ஞானி எமர்ஸன் இவ்விரு தத்துவங்களையும் உதாரண வாயிலாக இந்நூலில் நன்கு விளக்கியுள்ளார்.]

ரூ. 1/-

# எங்கள் புதிய வெளியீடுகள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| சட்டம் எதற்கு<br>N. R. பத்மநாபன் | 1 | 8 |
| நான்கு கவிமணிகள்<br>V. R. M. | 1 | 4 |
| விதியும் தன்னம்பிக்கையும்<br>எமர்சன் | 1 | 8 |
| தேடிய பாதம்<br>பிரான்சிஸ் தாம்சன் | 0 | 4 |
| ஓவியம் தந்த பரிசு<br>பத்மாவதி | 2 | 0 |
| காதற்கோயில்<br>M. S. கமலா | 2 | 0 |
| மாக்ஸிம் கார்க்கி வரலாறு | 2 | 8 |
| " செஞ்சி "<br>கவிஞன் ஷெல்லி | 2 | 8 |
| " மாயக் குயில் "<br>'சாவித்ரி' | 2 | 8 |
| 'என் வாழ்வும் பணியும்'<br>சுவாமி விவேகானந்தா | 0 | 12 |
| " பூச்சூட்டல் "<br>விசு. திருநாவுக்கரசு | 2 | 0 |

STAR PUBLICATIONS

71, BIG STREET, TRIPLICANE, MADRAS-5